# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - பிப்ரவரி 2021

www.tnpscthervupettagam.com




SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் .......... 10
தமிழ்நாடு செய்திகள் .......... 16
குடியரசுத் தலைவரின் காவல் துறைப் பதக்கம் .......... 16
சென்னை மாநகராட்சிப் புத்தாக்க அதிகாரி .......... 16
இளம் வயது பால் புரஸ்கார் விருதின் வெற்றியாளர் .......... 16
நீர்வாழ் உயிரி தனிமைப்படுத்துதல் மையம் .......... 17
ஒருங்கிணைந்த மற்றும் உள்ளடக்கிய பொது மக்கள் குறை தீர்ப்பு முதலமைச்சர் உதவி மையம் .......... 17
தமிழ்நாடு மாநில விருதுகள் .......... 17
முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதாவின் நினைவிடம் .......... 18
ஸ்மார்ட் மற்றும் அடுத்த தலைமுறை இருசக்கர வாகனங்கள் .......... 19
இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் – மதராசின் கலச்சாரத் திருவிழா “சாரங்” .......... 19
புதிய திட்டங்கள் மற்றும் நல உதவிகள் .......... 20
பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்ட முக்கியத் திட்டங்கள் .......... 20
புதிய தொழிற்துறை மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) தொடர்பான கொள்கைகள் .......... 21
தமிழ்நாட்டில் எண்ணெய் மற்றும் எரிவாயு துறை திட்டங்கள் .......... 21
சென்னையில் அமேசான் உற்பத்தி பிரிவு .......... 22
கொத்தடிமை முறை ஒழிப்பு தினம் .......... 22
உதவி மைய எண் “1100” .......... 22
தமிழ்நாடு இடைக்கால நிதிநிலை அறிக்கை .......... 23
தேசியச் செய்திகள் .......... 26
NCLAT சென்னை அமர்வு .......... 26
குடியரசுத் தின அணி வகுப்பில் வங்க தேச இராணுவம் .......... 26
அயோத்தியா மசூதி .......... 26
தேசிய தொற்றா நோய்களுக்கான கண்காணிப்பு ஆய்வு .......... 27
72வது குடியரசு தின அணிவகுப்பின் தனித்துவமான அம்சங்கள் .......... 27
உலகின் வேகமாக வளரும் முதிர்நிலைத் தொழில்நுட்பச் சூழலமைப்பு .......... 28
மெய்நிகர் நுண்ணறிவுக் கூறு – தேஜாஸ் .......... 29
பாரத் பயோடெக்கின் பிபிவி 154 தடுப்பூசி .......... 29
IEA உடனான இந்தியாவின் ஒப்பந்தம் .......... 30
மைத்ரி தடுப்பூசி முன்னெடுப்பு .......... 30
தேசிய கடல் ஆமை செயல் திட்டம் .......... 31
“பிரபுத்தா பாரத்தின்” 125வது நினைவு தினம் .......... 31
இந்திய நீதி அறிக்கை - 2020 .......... 32
கலா உத்சவம் .......... 32
குடியரசு தினத்திற்கான காட்சிப்பட அணிவகுப்பின் வெற்றியாளர்கள் .......... 33

**MSPயின் கீழ் புதிய சிறிய ரக வன உற்பத்திப் பொருட்கள் ..... 33**
**8வது இந்திய சர்வதேசப் பட்டுக் கண்காட்சி ..... 34**
**15வது நிதி ஆணையத்தின் அறிக்கை ..... 34**
**இந்தியாவின் முதலாவது "கை-கால்கள் இழப்பு மருத்துவமனை" ..... 35**
**தேசியப் பழங்குடியினர் விழா "ஆதி மஹோத்ஸவ்" ..... 35**
**ஏரோ இந்தியா 2021 ..... 35**
**மாநிலங்களவையில் அலைபேசிகளைப் பயன்படுத்துதல் ..... 35**
**2021 ஆம் ஆண்டில் இரண்டாவது மிகச் செழுமையான பொருளாதாரம் ..... 36**
**யுத் அபியாஸ் கூட்டு இராணுவப் பயிற்சி ..... 36**
**தன்னார்வ வாகன உடைப்புக் கொள்கை ..... 37**
**விவசாய உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வரி (AIDC) ..... 37**
**பிரதம மந்திரி ஆத்மநிர்பர் ஸ்வஸ்த் பாரத் யோஜனா மற்றும் மிஷன் போஷான் 2.0 ..... 38**
**புதிய சொத்துப் புனரமைப்பு மற்றும் சொத்து மேலாண்மை நிறுவனம் ..... 38**
**மின்சார விநியோகச் சீர்திருத்தத் திட்டம் ..... 38**
**நகர்ப்புறத்திற்கான ஜல் ஜீவன் திட்டம் ..... 39**
**மெகா முதலீட்டு ஜவுளிப் பூங்காக்கள் (மித்ரா) திட்டம் ..... 39**
**தேசியத் தோட்டக் கலைக் கண்காட்சி 2021 ..... 40**
**கோப்ரா படையின் முதலாவது பெண்கள் குழு ..... 41**
**MCA21 பதிப்பு 3.0 ..... 41**
**மேலும் 26 பச்சை மண்டலத் தளங்கள் ..... 41**
**பிரதான் மந்திரி உர்ஜா கங்கைத் திட்டம் ..... 42**
**ஐஎன்எஸ் விராத் உடைப்பு ..... 43**
**பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் ..... 43**
**சாக்சம் தளம் ..... 43**
**கடற்பாசி சாகுபடித் திட்டம் ..... 44**
**திவ்ய-த்ரிஷ்டி 2021 ..... 44**
**மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலாளர்கள் குறித்த தரவு ..... 44**
**மாநிலங்களவை உறுப்பினர் பதவி துறப்பு ..... 45**
**2017-2019 காலகட்டத்தில் பயிர்கள் இழப்பு ..... 45**
**இந்தியாவின் முதலாவது அழுத்தப்பட்ட இயற்கை வாயுவினால் இயக்கப் படும் (CNG) இழுவை இயந்திரம் ..... 45**
**ட்ரோபெக்ஸ் – 21 பயிற்சி ..... 46**
**வணிக நம்பிக்கைக் குறியீடு ..... 46**
**நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் குடியிருப்புப் பள்ளிகள் ..... 46**
**டிஜிட்டல் காப்பீட்டுத் திட்டங்கள் ..... 47**
**விக்யான் ஜோதி திட்டத்தின் இரண்டாவது நிலை ..... 47**
**மகாத்மா காந்தி தேசிய தோழமைத் திட்டம் ..... 47**
**ராஷ்டிரிய சமஸ்கிருத மஹோத்ஸவ் ..... 48**
**வணிக சணல் விதை விநியோகத் திட்டம் ..... 48**

இ-சவானி தளம் ........ 48
தனியார்மயமாக்கலுக்காக திருத்தங்கள் ........ 48
பே ஜல் சர்வேக்சன் ........ 49
கணக்கெடுப்புகளுக்கான மென்பொருள் பயன்பாடுகள் ........ 49
டிஜிட்டல் நுண்ணறிவுப் பிரிவு ........ 49
மகாபாஹு-பிரம்மபுத்ரா திட்டம் ........ 50
மாநிலங்களவையில் எதிர்க் கட்சித் தலைவர் ........ 50
இந்திய சைகை மொழி அகராதி ........ 51
6வது மண் வள (ஆரோக்கிய) அட்டை தினம் ........ 51
"மின்மயமாக்கம் நோக்கிய பிரச்சாரம்" ........ 52
சுற்றுப்புறத்தை மேம்படுத்துதல் தொடர்பான சவால் ........ 53
100% நேரடிப் பணமற்ற முறையில் சுங்கக் கட்டண வசூல் ........ 53
மாநில இட ஒதுக்கீட்டு முடிவுகளில் மத்திய அரசின் பங்கு ........ 53
தூக்கிலிடப்படும் முதல் பெண் ........ 54
ஹரித்வார் கும்பமேளா 2021 ........ 54
தேசிய பொம்மை கண்காட்சி ........ 55
நிதி ஆயோக்கின் நிர்வாக ஆணையத்தின் 6வது சந்திப்பு ........ 55
புதுச்சேரி அரசு ராஜினாமா ........ 55
NAFLD ஒருங்கிணைப்பிற்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் ........ 56
இந்திரதனுஷ் திட்டம் 3.0 ........ 56
தன்னாட்சிக்கான குழு ........ 56
'ஹுனார் ஹாத்' கண்காட்சியின் 26வது பதிப்பு ........ 56
தீ பாதுகாப்பு நடவடிக்கை பயிற்சிக்கான திறன் மையம் ........ 57
கடல்சார் இந்தியா உச்சி மாநாடு 2021 ........ 57
8 புதிய பொம்மை உற்பத்தி தொகுதிகள் ........ 57
உலகின் மிகப்பெரிய விளையாட்டு அரங்கத்தின் மறுபெயரிடுதல் ........ 58
சர்வதேசச் செய்திகள் ........ 58
உலகின் மிகப்பெரிய நடப்புக் கணக்கு உபரி ........ 58
இந்தியா மற்றும் அணுசக்தி ஒப்பந்தம் ........ 58
உலகப் பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை ........ 59
ஆல்பா உலக ஒன்றியம் ........ 59
ஜெயதி கோஷ் ........ 59
பழைமையான அணைகள் குறித்து ஐ.நா.வின் அறிக்கை ........ 59
புதிய மாறுபாட்டு ஆய்வுத் திட்டம் ........ 60
பாலினச் சமத்துவம் குறித்த சர்வதேசக் கருத்தரங்கு ........ 60
இந்தியா - பிரெஞ்சு சுற்றுச்சூழல் ஆண்டு ........ 61
உலகின் புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்கள் ........ 62
கோவிட்-19 செயல்திறன் குறியீடு ........ 62
ஸ்டார்ட் அப் இந்தியா தொடக்க நிறுவனங்களுக்கான நிதி ........ 63

பதிவுகளில் மிக மோசமான ஆண்டு ..... 63
அண்டார்டிகாவில் அரிய வகைத் தாது கண்டுபிடிப்பு ..... 64
ஐக்கிய அரபு அமீரகத்தின் (UAE) புதிய குடியுரிமைக் கொள்கை ..... 64
எடிசன் (EDISON) கூட்டிணைவு ..... 65
நேபாள அரசாங்கத்தின் நீர்மின் திட்டம் ..... 65
2020 ஆம் ஆண்டின் ஆக்ஸ்ஃபோர்டு இந்திச் சொல் ..... 65
மியான்மர் இராணுவப் புரட்சி 3.0 ..... 65
நெப்டியூன் பிரகடனம் ..... 66
ஆசியா-பசிபிக் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் இணையவுள்ள ஐக்கிய ராஜ்ஜியம் ..... 66
அரசு நிர்வாக ஆணையம் - மியான்மர் ..... 66
உலகின் முதல் 'ஆற்றல் தீவு' ..... 67
உலக நீடித்த வளர்ச்சி மாநாடு 2021 ..... 67
ஷாதூத் அணை ஒப்பந்தம் ..... 68
டிரம்ப்பின் பதவி நீக்கம் ..... 68
அமான் பயிற்சி ..... 68
அமெரிக்கா – மெக்சிகோ எல்லை சுற்றுச்சுவர் திட்டம் ..... 69
நீடித்த மீன் வளம் மற்றும் மீன் வளர்ப்பிற்கான பிரகடனம் ..... 69
பாகிஸ்தான் போர்ப் பயிற்சி ..... 70
பதவி நீக்கத்திலிருந்து டிரம்ப் விடுவிப்பு ..... 70
புதிய START அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் ..... 70
விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு ஒப்பந்தம் ..... 70
கரிமம் குறைந்த புதிய வகை கான்கிரீட் ..... 71
எபோலா திடீர்ப் பெருக்கம் ..... 71
தீவிரவாத எதிர்ப்பு மசோதா ..... 71
காணொலி வாயிலான சார்க் சந்திப்பு ..... 71
உலக கோவிட் – 19 தடுப்பூசித் திட்டம் ..... 72
உலக சூரிய ஒளி வங்கி ..... 72
நாஸ்காம் தொழில்நுட்பம் மற்றும் தலைமைத்துவம் மன்றம் 2021 ..... 72
இந்தியா-ஆஸ்திரேலியா சுழற்சி முறை பொருளாதார ஹேக்கத்தான் ..... 73
கெய்ர்ன் ஆற்றல் - நடுவர் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு ..... 73
ஆசியப் பொருளாதார பேச்சுவார்த்தை ..... 74
11வது உலக பெட்ரோலிய நிலக்கரி காங்கிரஸ் (மாநாடு) – 2021 ..... 74
உலக எதிர்கால எரிபொருள் மாநாடு 2021 ..... 74
ஆயுதப் படைகளில் பெண்கள் ..... 75
H5N8 பறவைக் காய்ச்சல் – உலகின் முதலாவது பாதிப்பு ..... 75
NAVDEX 21 மற்றும் IDEX 21 ..... 75
பொருளாதாரச் செய்திகள் ..... 76
சமத்துவமின்மை கிருமி ..... 76
சமையல் எண்ணெய்க்கான தேசிய திட்டம் ..... 76

அந்நிய நேரடி முதலீட்டில் 13% அதிகரிப்பு ..... 77
இந்தியாவின் புதிய மத்திய வங்கி எண்ம (டிஜிட்டல்) நாணயம் ..... 77
உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2021 ..... 78
ஜி20 பொதுக் கட்டமைப்பின் கீழ் கடன் சீரமைப்பு ..... 79
25 ஆண்டுக் காலத்தில் குறைந்த அளவிலான தங்கத் தேவை ..... 79
அபாய நேர்வு அடிப்படையிலான உள் தணிக்கை ..... 79
குழந்தைகளுக்கான சேமிப்பு வங்கிக் கணக்குத் திட்டம் ..... 79
"ஒரே நாடு ஒரே தீர்ப்பாயம்" அணுகுமுறை ..... 80
நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான குழு ..... 80
2030 ஆம் ஆண்டில் உலகின் 3வது மிகப்பெரிய ஆற்றல் நுகர்வோர் நாடு ..... 81
8 உறுப்பினர்கள் நிபுணர் குழு ..... 81
பெருநிறுவன இந்தியா இடர்க் குறியீடு ..... 81
பருப்பு வகைகள் – இந்தியாவின் பங்களிப்பு ..... 81
DHFL நிறுவனத்தைக் கையகப்படுத்தல் ..... 82
கடன் குறித்த IIF அறிக்கை ..... 82
இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) கீழ் ஸ்டேட் பேங்க் ஆப் சிக்கிம் ..... 83
இந்தியாவின் முதன்மை வர்த்தகப் பங்காளர் ..... 83
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 84
ஆகாஷ்-என்ஜி ஏவுகணை ..... 84
உலக விண்வெளிச் சாதனை ..... 84
"மறைந்து போன அண்டம்" மீண்டும் கண்டுபிடிப்பு – நாசா ..... 84
ஸ்டார்டஸ்ட் 1.0 ஏவுகணை ..... 85
விண்வெளிக்கு மக்களை அனுப்பும் முதல் திட்டம் ..... 85
உலகின் மிகப்பெரிய ரேடியோ தொலைநோக்கி ..... 85
2020 ஆம் ஆண்டில் பதிவான இணையவழிப் பாதுகாப்பு நிகழ்வுகள் ..... 86
செவ்வாய் பனிக்கட்டி படமிடல் திட்டம் - நாசா ..... 86
கஸ்னவி ஏவுகணை ..... 86
சிவப்புக் கோளின் முதல் புகைப்படம் ..... 87
அதி உயர வளிமண்டல செயற்கைக் கோள் (Pseudo Satellite) ..... 87
அரபு நாட்டின் முதல் செவ்வாய் கிரகத் திட்டம் ..... 88
சிறு கருந்துளைகளின் செறிவு ..... 89
விண்வெளியில் மனிதர்கள் கொள்கை – 2021 ..... 89
உள்நாட்டு வரைபடமிடல் தீர்வு ..... 89
அர்ஜுன் மார்க் 1ஏ பீரங்கி ..... 90
மிகப்பெரிய சுடரொளி ..... 90
இந்தியாவின் புதிய உடனடி குறுஞ்செய்தி அனுப்புதல் தளம் ..... 90
டைகர் எக்ஸ் – 1 ..... 91
பைமோ - மின்சார இரு சக்கர வாகனம் ..... 91
அஸ்ட்ரா மார்க் 2 ஏவுகணை ..... 92

ஐ.என்.எஸ் கரஞ்ச் ........ 92
ஆர்கா சுபா வகை ........ 92
ஏரோ – 4 ஏவுகணைக் கவசம் ........ 93
செவ்வாய்க் கிரகத்தில் பெர்செவரன்ஸ் தரையிறக்கம் ........ 93
கருப்பு-கால் கொண்ட ஃபெரெட் விலங்கின் நகலி ........ 94
VL-SRSAM ஏவுகணை அமைப்பு ........ 94
ICGSC-453 இடைமறிப்புப் படகு ........ 95
செவ்வாய் கிரகத்தில் இருந்து முதல் கேட்பொலி ........ 95
பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை ........ 96
விண்கலத்திற்கு கணிதவியலாளரின் பெயர் ........ 97
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 97
சுந்தரவன உயிர்க்கோளப் பறவைகள் காப்பகம் ........ 97
காலநிலை ஏற்புத்தன்மை மாநாடு 2021 ........ 98
16வது உலகளாவிய காலநிலை இடர் குறியீடு 2021 ........ 98
பசுமை வரி ........ 99
ஐக்கிய நாடுகள் உலகக் காலநிலை ஆய்வு ........ 99
உலகளாவிய காலநிலை வழக்குகள் அறிக்கை 2021 ........ 100
முதலாவது சதுப்பு நிலப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மையம் ........ 100
கலிவேலி சதுப்புநிலங்கள் - பறவைகள் சரணாலயம் ........ 101
இந்தியாவிற்கான 51வது புலிகள் காப்பகம் ........ 101
இந்தியாவின் இடி மின்னலுக்கான சோதனைத் தளம் ........ 102
பனிப்பாறை உடைப்பால் தூண்டப்பட்ட வெள்ளம் ........ 102
இந்தியாவின் முதல் புவிவெப்ப மின் உற்பத்தி திட்டம் ........ 103
மாசுபடுத்துவோர்களைக் கண்காணிக்க பொதுமக்கள் தளம் ........ 103
மாண்டரின் வாத்து ........ 103
தாமிரபரணி நீர்ப் பறவைகள் கணக்கெடுப்பின் 11வது பதிப்பு ........ 104
‘டிக்கின்சோனியா’ விலங்கின் புதைபடிவங்கள் ........ 104
முதலாவது உயர்த்தப்பட்ட வனவிலங்கு பெருவழிப் பாதை ........ 104
ஆலிவ் ரிட்லீ ஆமைகள் – அடை காத்தல் ........ 105
உலகின் மிகச்சிறிய ஊர்வன உயிரினம் ........ 106
பழமையான டினைஏ கண்டெடுப்பு ........ 106
மங்களூரில் காணப்படும் அரியவகை பறவைகள் ........ 107
நீல மண்புழுக்களின் பெருந்திரள் இடப்பெயர்வு ........ 107
பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைவு ........ 107
கழுகுகளுக்கு நஞ்சாக அமையும் மருந்துகளுக்குத் தடை ........ 108
மாநிலச் செய்திகள் ........ 108
பொதுச் சுகாதாரப் பள்ளி - இராஜஸ்தான் ........ 108
2 விரைவு ஓடுபாதைகளைக் கொண்ட முதலாவது மாநிலம் ........ 108
இளம் வாசகர்களின் முதல் படகு நூலகம் ........ 109

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சீர்திருத்தங்களை நிறைவேற்றிய 5வது மாநிலம். ......109
முதல் பாலினப் பூங்கா ......109
"முன்னோடி நிலையை நோக்கி கேரளா" ......110
கேரளாவின் முதலாவது தாய்ப்பால் வங்கி ......110
கர்நாடகாவில் லித்தியம் இருப்பு ......111
இந்தியாவின் முதல் பனிக்குடில் உணவகம் (இக்லூ கஃபே) ......111
ஸ்மைல் நடவடிக்கை ......111
சஹ் பாஹிச்சா தன் புரஸ்கர் மேளா ......112
நிலம் வைத்திருப்பவர்களை அடையாளம் காண்பதற்கான 16 இலக்க ஒற்றைக் குறியீடு ......113
பரிவார் பெஹ்சான் பத்ரா (PPP) திட்டம் ......113
மின் அமைச்சரவை அமலாக்கம் ......113
மின் துறைச் சீர்திருத்தங்கள் – ஆந்திரப் பிரதேசம் ......114
தபோவன் விஷ்ணுகாட் மின் ஆலை ......114
முக்கிய மந்திரி விக்யான் பிரதிபா பரிக்சா திட்டம் ......114
'ஜலாபிஷேகம்' நீர்ப் பாதுகாப்புப் பிரச்சாரம் ......115
நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சீர்திருத்தங்கள் நிறைவேற்றம் ......115
'கோவிட் முன்களப் பணியாளர்கள்' நினைவுச்சின்னம் ......115
காலநிலை தாங்குந்தன்மை மேம்பாட்டு வழிப்பாதை ......115
வளர்ச்சித் திட்டங்கள் - கேரளா ......116
ராஜஸ்தான் சிறை விதிகள் - 1951 ......116
'ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை முறை' சீர்திருத்தம் ......116
சிறிய அருங்காட்சியகங்கள் ......117
மண்டு விழா ......117
"மா" உணவகங்கள் ......118
கொச்சி நீர் மெட்ரோ திட்டம் ......118
உ.பி. அபுதயா திட்டம் ......119
KFC கழகத்தின் பற்று அட்டைகள் ......119
உலகின் மர நகரம் ......119
'ஸ்னேக்பீடியா' கைபேசி செயலி ......120
மா சமலேஸ்வரி சன்னதிக்கான தொகுப்பு ......120
புகலூர் - திருச்சூர் மின் விநியோக திட்டம் ......121
பள்ளிகளுக்கு 100% குழாய் நீர் இணைப்புகள் ......121
ஹோஷங்காபாத் நகரத்தை மறுபெயரிடுதல் ......121
சிங்கப்பூருக்கு காலா நமக் அரிசி ......122
இந்தியாவின் முதல் டிஜிட்டல் பல்கலைக்கழகம் ......122
நெகிழிக் கழிவுகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட சாலை ......122
மலர்கள் பதப்படுத்தும் மையம் ......122
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ......123
பீகாரின் "மிதிவண்டிப் பெண்மணி" ......123

சிறந்த தேர்தல் நடைமுறைகள் விருது ..... 123
The Little Book of Encouragement ..... 123
பண்டிட் பீம்சென் ஜோஷியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் ..... 123
இளம் பெண் விமானி ..... 124
உலக வர்த்தக அமைப்பின் (WTO) முதல் பெண் தலைவர் ..... 124
2021 ஆம் ஆண்டின் வனவிலங்குப் புகைப்படவியலாளர் ..... 125
வாடிக்கையாளரின் குரல் விருது ..... 125
மகளிர் சிறப்புத்துவ விருது 2021 ..... 125
ICCயின் புதிய தலைமை வழக்குரைஞர் ..... 126
சரணாலய வாழ்நாள் சேவை விருது – 2020 ..... 126
ஆண்டின் ஸ்கோச் முதல்வர் ..... 127
பிராணி மித்ரா மற்றும் ஜீவதயா விருதுகள் 2021 ..... 127
TIME பத்திரிக்கையின் பட்டியல் ..... 128
'Maverick Messiah' புத்தகம் ..... 128
ஆசிய சுற்றுச்சுழல் அமலாக்க விருது – 2020 ..... 129
உலக தலைமை காங்கிரஸ் ..... 129
சர்வதேச ஊழல் எதிர்ப்பு சாம்பியன் விருது ..... 129
உலக மனிதவள மேம்பாட்டு காங்கிரஸ் விருதுகள் ..... 130
பட்டியல் சமூகத்தினருக்கான தேசிய ஆணையத்தின் புதிய தலைவர் ..... 130
அட்லாண்டிக்கைப் படகில் கடந்த மிக இளம் வயது பெண் ..... 131
விளையாட்டுச் செய்திகள் ..... 131
ரஞ்சிக் கோப்பை - கிரிக்கெட் ..... 131
டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 2வது வீரர் ..... 132
20 கிலோ மீட்டர் நடைபயணத்தில் தேசியச் சாதனை ..... 132
தேசிய மேசைப் பந்தாட்டப் பட்டம் ..... 133
200 இடது கை மட்டையாளர்களின் விக்கெட்டுகள் ..... 133
ஆஸ்திரேலிய ஓபன் 2021 ..... 134
Adriatic Pearl Boxing Tournament ..... 135
முக்கிய தினங்கள் ..... 135
இந்தியக் கடலோரக் காவல் படை தினம் – பிப்ரவரி 01 ..... 135
உலக சதுப்பு நிலங்கள் தினம் - பிப்ரவரி 02 ..... 136
மனித சகோதரத்துவத்திற்கான சர்வதேச நாள் - பிப்ரவரி 04 ..... 136
உலகப் புற்று நோய் தினம் – பிப்ரவரி 04 ..... 137
பெண் பிறப்புறுப்புச் சிதைவுக்கு எதிராக சகிப்புத் தன்மையல்லாததற்கான சர்வதேச தினம் – பிப்ரவரி 06 ..... 137
பாதுகாப்பான இணையத்திற்கான சர்வதேச நாள் - பிப்ரவரி 09 ..... 137
உலகப் பருப்பு வகைகள் தினம் – பிப்ரவரி 10 ..... 138
தேசிய குடல்புழு நீக்க நாள் - பிப்ரவரி 10 ..... 138
அறிவியல் துறையில் சர்வதேசப் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் தினம் - பிப்ரவரி 11 ..... 139

உலக யுனானி தினம் - பிப்ரவரி 11 ........ 140
நிதி எழுத்தறிவு வாரம் - பிப்ரவரி 08 - 12 ........ 140
தேசிய உற்பத்தித் தினம் – பிப்ரவரி 12 ........ 140
உலக வானொலி தினம் - பிப்ரவரி 13 ........ 141
உலக பாங்கோலின் (எறும்புண்ணி) நாள் - பிப்ரவரி 13 ........ 141
சரோஜினி நாயுடு பிறந்த நாள் / தேசிய மகளிர் தினம் 2021 ........ 142
சர்வதேச குழந்தைப் பருவ கால புற்றுநோய் தினம் - பிப்ரவரி 15 ........ 143
சர்வதேச கால் கை வலிப்பு தினம் – பிப்ரவரி 08 ........ 143
உலக சமூக நீதி தினம் – பிப்ரவரி 20 ........ 144
அருணாச்சலப் பிரதேசம் மாநில தினம் - பிப்ரவரி 20 ........ 144
மிசோரம் மாநில தினம் - பிப்ரவரி 20 ........ 145
சர்வதேச தாய் மொழி தினம் - பிப்ரவரி 21 ........ 145
உலக சாரணர் தினம் - பிப்ரவரி 22 ........ 146
உலக சிந்தனை நாள் - பிப்ரவரி 22 ........ 146
மத்திய கலால் வரி தினம் - பிப்ரவரி 24 ........ 147
உலக அரசு சாரா நிறுவன தினம் – பிப்ரவரி 27 ........ 147
சர்வதேச துருவக் கரடி தினம் - பிப்ரவரி 27 ........ 147
இந்திய புரதச் சத்து நாள் - பிப்ரவரி 27 ........ 147
அரிய நோய் நாள் - பிப்ரவரி 28 ........ 148
தேசிய அறிவியல் தினம் - பிப்ரவரி 28 ........ 148
இதரச் செய்திகள் ........ 149
ஊழல் கண்ணோட்டக் குறியீடு ........ 149
ஆசிய-பசிபிக் தனிப்பயனாக்கப்பட்ட சுகாதாரக் குறியீடு ........ 149
EIU ஜனநாயகக் குறியீடு 2020 ........ 150
சாலை விபத்துகள் குறித்து உலக வங்கியின் அறிக்கை ........ 150
இமயமலை இளஞ்சிவப்பு உப்புக்கான புவிசார் குறியீடு ........ 151

# TNPSC துளிகள்

- கிரிக்கெட் வீரர் வாஷிங்டன் சுந்தர் அவர்கள் வரவிருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் சென்னை மாவட்டத்திற்கான தேர்தல் தூதராக அறிவிக்கப் பட்டுள்ளார்.
- ராஜீவ் ரஞ்சன் மிஸ்ரா அவர்கள் தமிழகத்தின் 47வது தலைமைச் செயலாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.
    - இவர் கே சண்முகத்தைத் தொடர்ந்து இப்பதவியில் அமர்கிறார்.
- பாரத் பயோடெக்கின் கோவாக்சின் தடுப்பூசியானது இந்தியாவில் இருந்து லான்செட் ஆய்வு அறிக்கையில் தனது தரவுகள் வெளியிடப்பட்ட முதல் கோவிட்-19 தடுப்பூசி ஆகும்.
- துணைத் தளபதியான சாண்டி பிரசாத் மொஹந்தி அவர்கள் எஸ்.கே. சைனியை அடுத்து இராணுவப் பணியாளர்களின் புதிய துணைத் தலைவரானார்.
- மேகாலயாவின் தலைமைத் தேர்தல் அதிகாரி அவர்கள் மாநிலத்தின் தேர்தல்களில் தகவல் தொழில்நுட்பச் செயலிகளை அறிமுகப்படுத்தியதிற்காக வேண்டி ஒரு சிறப்பு விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - இது 'தேசிய அளவிலான சிறந்த தேர்தல் நடைமுறைகள் விருதுகள் – 2020' என்ற விருதிற்காக இந்தியத் தேர்தல் ஆணையத்தினால் வழங்கப்பட்டுள்ளது.
- பிராண்ட் நிதியியல் அறிக்கையின்படி, டாடா ஆலோசக நிறுவனமானது (TCS) உலக அளவில் மூன்றாவது மிகவும் மதிப்புமிக்க ஒரு தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனமாகத் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
    - இந்தப் பட்டியலில் TCS நிறுவனத்திற்குப் பிறகு, அசென்சர் மற்றும் ஐபிஎம் ஆகியன உள்ளன.
- ஐந்தாம் தலைமுறைச் சேவையின் நிகழ்நேரச் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்ட நாட்டின் முதலாவது தொலைத் தொடர்புச் செயல்பாட்டு நிறுவனம் பாரதி ஏர்டெல் ஆகும்.
    - இந்த நிகழ்நேரச் சோதனையானது ஐதராபாத் நகரில் உள்ள வணிக ரீதியான அமைப்பில் மேற்கொள்ளப்பட உள்ளது.
- இந்தியாவானது ஜனவரி 27 அன்று 3 ரஃபேல் போர் விமானங்களைக் கொண்ட மூன்றாவது தொகுதியைப் பெற்றுள்ளது.
- இந்தியா - ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இடையேயான 'Act East Forum' என்ற அமைப்பின் 5வது கூட்டுக் கூட்டமானது சமீபத்தில் புதுதில்லியில் நடைபெற்றது.
- ஃபெராரி மற்றும் கோகோ-கோலா போன்ற நிறுவனங்களுக்கு அடுத்து உலகளவில் ஐந்தாவது வலுவான ஒரு நிறுவனமாக (பிராண்டாக) ரிலையன்ஸ் ஜியோ இடம் பெற்று உள்ளது.
- அமெரிக்காவின் நிதிச் செயலாளராக ஜேனட் யெல்லன் நியமிக்கப் பட்டுள்ளார்.
    - அமெரிக்க வரலாற்றில் இந்தப் பதவியை வகிக்கும் முதல் பெண் இவராவார்.
- தேசிய சுகாதார ஆணையமானது ஆர்எஸ் சர்மா என்பவரை ஆயுஷ்மான் பாரத் என்ற திட்டத்தின் ஒரு புதிய தலைமைச் செயல் அதிகாரியாக நியமித்துள்ளது.

  - மேலும் இது பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா என்றும் அழைக்கப் படுகின்றது.

- 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 அன்று இந்தியப் பிரதமர் அவர்கள் சௌரி சௌரா நிகழ்வின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களைக் காணொலி வாயிலாகத் தொடங்கி வைத்தார்.
  - மேலும் இவர் இந்த நூற்றாண்டு விழாவிற்காக வேண்டி ஒரு பிரத்தியேக அஞ்சல் தலையையும் வெளியிட்டுள்ளார்.
- லார்சன் & டூப்ரோ நிறுவனம் ஆனது தேசிய அதிவேக இரயில் கழக நிறுவனத்திடம் இருந்து மும்பை அகமதாபாத் புல்லட் இரயில் திட்டத்தின் ஒப்பந்தத்தைப் பெற்று உள்ளது.
- தமிழ்நாடு அணி பரோடா அணியை வீழ்த்தியதன் மூலம் 2வது சையத் முஸ்டாக் அலி கோப்பை கிரிக்கெட் தொடரை வென்றுள்ளது.
- சமீபத்தில், பாகிஸ்தான் தனது புவிசார் குறியீடு சட்டம் 2020 என்ற சட்டத்தின் கீழ் தனது பாஸ்மதி அரிசிக்காக வேண்டி புவிசார் குறியீட்டைப் பெற்றுள்ளது.
  - பாஸ்மதி அரிசியைத் தனது தயாரிப்பாக அங்கீகரிக்கும் இந்தியாவின் நடவடிக்கைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தில் பாகிஸ்தான் ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.
- இந்தோனேசியாவில் மிகவும் உயிர்ப்பு நிலையிலுள்ள மெராபி என்ற ஒரு எரிமலையானது சமீபத்தில் வெடித்து இருக்கின்றது.
  - மெராபி எரிமலையின் கடைசியான வெடிப்பானது 2010 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது.
- முகநூல் நிறுவனமானது முதல் முறையாக ஹென்றி மோனிஸை அதன் முதன்மை இணக்க அதிகாரியாக நியமித்துள்ளது.
- ஹைட்ரஜன் எரிசக்தித் திட்டமானது 2021-22 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார்.
- அமேசான் நிறுவனமானது அதன் தலைமை நிர்வாக அதிகாரிப் பொறுப்பிலிருந்து ஜெஃப் பெஜோசை விடுவிப்பதாக அறிவித்துள்ளது.
  - அந்த நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக ஜாஸி அந்தப் பொறுப்பினை ஏற்பார்.
- இந்தியப் பெருங்கடல் பிராந்தியப் பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாட்டை இந்தியா நடத்தி உள்ளது.
  - இந்த மாநாட்டின் கருத்துரு 'இந்தியப் பெருங்கடலில் மேம்படுத்தப்பட்ட அமைதி, பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு' என்பதாகும்.
- பிப்ரவரி 03 அன்று முதல் முறையாக சென்செக்ஸ் குறியீடானது 50,000 புள்ளிகளுக்கு மேல் சென்றது.
- ஸோஹோவின் நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு தேசியப் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவில் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ரிலையன்ஸ் நிறுவனமானது உலகின் முதல் 'கார்பன்-சமநிலை எண்ணெய்' சரக்குப் பெட்டகத்தை Oxy Low Carbon Ventures (OCLV) என்ற நிறுவனத்திடமிருந்துப் பெற்றுள்ளது.
  - OLCV நிறுவனம் என்பது அமெரிக்காவின் ஒரு முக்கிய எண்ணெய் நிறுவனமான ஆக்ஸிடெண்டல் என்பதின் ஒரு பிரிவாகும்.

- தென் கொரியாவானது உலகின் மிகப்பெரிய கடற்கரையோர காற்று மின் உற்பத்தி வளாகத்தை அமைக்கவுள்ளது.
  - இது 2050 ஆம் ஆண்டில் கார்பன் சமநிலையை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது இந்தியாவில் டிஜிட்டல் கட்டணச் சேவையை வலுப்படுத்தும் நோக்கத்துடன் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் இயங்கும் ஒரு உதவி மையத் தளத்தை அமைக்கவுள்ளது.
- பேபால் சொல்யூசன்ஸ் என்ற நிறுவனமானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் இந்தியாவிற்குள் உள்நாட்டுக் கட்டண வழங்கீட்டுச் சேவையை நிறுத்தவுள்ளது.
- ஆயுஷ் அமைச்சகமானது சமீபத்தில் பொதுவான யோகா நெறிமுறைப் பயிற்சி என்ற ஒரு திட்டத்தை வகுத்துள்ளது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் இந்தியாவிற்கும் பஹ்ரைன் அரசிற்கும் இடையிலான கூட்டுச் செயற்குழுவின் முதல் கூட்டமானது இணைய வழியில் நடைபெற்றது.
- இந்திய இராணுவமானது ஜம்மு காஷ்மீரில் உள்ள குல்மார்க்கில் மிக உயர்ந்த "தேசியக் கொடி சின்னத்திற்கு" அடிக்கல் நாட்டியது.
  - இந்தக் கொடியானது 100 மீட்டர் உயரமுடைய ஒரு கம்பத்தின் மேல் ஏற்றப்பட உள்ளது.
- "பல்வேறு மகிழ்ச்சியான விபத்துகள் : வாழ்க்கையின் நினைவு கூர்தல்கள்" என்ற தலைப்பு கொண்ட ஒரு புத்தகமானது இந்தியாவின் முன்னாள் துணைக் குடியரசுத் தலைவரான எம் ஹமீது அன்சாரி அவர்களால் எழுதப் பட்டு வெளியிடப் பட்டது.
- ஒடிசா மாநில அரசானது அனைத்துப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலை தொடர்பான எம்.எஸ் சுவாமிநாதன் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்திடச் செய்வதற்கான தனது கோரிக்கைகளை எடுத்துச் சொல்ல மத்திய அரசை நாட முடிவு எடுத்து இருக்கின்றது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரான அண்ட்டோனியோ குட்டேரஸ் அவர்கள் மைக்கேல் ப்ளூம்பெர்க் என்பவரை தனது காலநிலை நோக்கங்கள் மற்றும் தீர்வுகள் என்பது குறித்த சிறப்புத் தூதராக மீண்டும் நியமித்துள்ளார்.
- அமெரிக்காவானது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தில் மீண்டும் இணைவதற்கான நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.
  - அப்போதைய அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் நிர்வாகம் இந்த உலகளாவிய அமைப்பிலிருந்து விலகிய மூன்று வருடங்களுக்குப் பிறகு இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கர்நாடகா மாநில அரசானது விஜயநகரத்தை அம்மாநிலத்தின் 31வது மாவட்டமாக அறிவித்துள்ளது.
- இந்தியப் பந்து வீச்சாளரான இஷாந்த் சர்மா அவர்கள் டெஸ்ட் கிரிக்கெட்டில் 300 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்தியாவின் மூன்றாவது வேகப் பந்து வீச்சாளர் மற்றும் ஆறாவது இந்தியப் பந்து வீச்சாளராக உருவெடுத்துள்ளார்.
- மத்திய அரசானது "10,000 வேளாண் உற்பத்தி அமைப்புகளின் உருவாக்கம் மற்றும் ஊக்குவிப்பு" என்ற ஒரு புதிய மத்தியத் துறைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- புதிய இராணுவத் தலைமையிலான அரசாங்கத்தை அங்கீகரிக்காததால் மியான்மருடனான தனது அனைத்து ராஜதந்திர உறவுகளையும் நியூசிலாந்து நாடானது அதிகாரப் பூர்வமாக நிறுத்தியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 12, அன்று சீனாவானது சந்திரப் புத்தாண்டைக் கொண்டாடச் செய்தது.
  - இது எருது ஆண்டினுள் (Year of the Ox) நுழைந்துள்ளது.
- தடகள வீரரான ஹிமா தாஸ் அவர்கள் அஸ்ஸாம் அரசால் துணைக் காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய தேசியக் கொடுப்பனவு நிறுவனமானது 'NPCI PayAuth Challenge' என்ற ஒன்றைத் தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.
- அமெரிக்க அதிபர் மியான்மரில் உள்ள இராணுவத் தலைவர்கள் மீது பொருளாதாரத் தடைகளை அறிவித்து உள்ளார்.
  - அமெரிக்க அரசாங்கமானது முதல் சுற்று பொருளாதாரத் தடைகளை அடையாளம் கண்டு, அதன் பிறகு ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை விதிக்கும்.
- சமீபத்தில் டோக்கியோ 2020 ஒலிம்பிக்ஸின் தலைவரான யோஷிரோ மோரி அவர்கள் பதவி விலகினார்.
- இந்தியா மற்றும் சீனா ஆகியவை பாங்காங் ஏரியின் வடக்கு மற்றும் தெற்கு கரைப் பகுதியில் தங்களது துருப்புகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டு உள்ளன.
- ஆபிரகாம் லிங்கனின் பிறந்த நாளான பிப்ரவரி 12 ஆம் தேதி அன்று அவருக்கு என்று அர்ப்பணிக்கப்பட்ட அமெரிக்காவில் உள்ள ஓர் அருங்காட்சியகமானது முதல் முறையாக மூடப் பட்டுள்ளது.
- வெவ்வேறுச் சாதியினருக்கு இடையிலான திருமணங்கள் மூலமாகத் தான் இந்தியாவில் சாதி மற்றும் சமூகப் பதட்டங்களைக் குறைக்க முடியும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
  - சிறப்பு திருமணச் சட்டம் 1954 ஆனது நாட்டில் உள்ள வெவ்வேறு மதம் மற்றும் சாதியினருக்கு இடையிலான திருமணங்களைப் பதிவு செய்ய பயன்படுத்தப் படுகிறது.
- பிஃபா கிளப் உலகப் கோப்பையின் இறுதிப் போட்டியில் ஜெர்மனியின் பேயர்ன் முனிச் அணியானது டைகர்ஸ் யுஏஎன்எல் என்ற அணியை வீழ்த்தி தனது ஆறாவது பட்டத்தைத் தட்டிச் சென்றது.
- செய்தி அறிக்கைக்கான தனது வழிகாட்டுதல்களை மிகக் கடுமையாக மீறியதற்காக சீனாவில் பிபிசி செய்தி அலைவரிசையை ஒளிபரப்ப அந்நாடு தடை விதித்துள்ளது.
- ஐக்கிய நாட்டில் பணியாற்றும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரான அரோரா அகான்ஷா அவர்கள் அதன் அடுத்த பொதுச் செயலாளருக்கான தனது வேட்பு மனுத் தாக்கலை அறிவித்துள்ளார்.
- புதுச்சேரியானது "Zero Covid by Feb28" (பிப்ரவரி 28க்குள் சுழிய கோவிட்) என்ற பெயரில் ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.

- இது அந்த ஒன்றியப் பிரதேசத்தில் 2021 ஆம் ஆண்டின் பிப்ரவரி இறுதிக்குள் கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லாதவாறு உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ மேக்னா பந்த் அவர்கள் "The Terrible, Horrible, Very Bad Good News" என்ற ஒரு புதிய புத்தகத்தை எழுதியுள்ளார்.

❖ உத்தரப் பிரதேசத்தின் பஹ்ரைச்சில், மகாராஜா சுஹெல்தேவ் நினைவிடத்திற்கு பிரதமர் அவர்கள் இணைய வழியில் அடிக்கல் நாட்டினார்.

❖ சர்வதேச சூரிய மின்சக்தி உற்பத்திக் கூட்டமைப்பானது டாக்டர் அஜய் மாத்தூரை அதன் புதிய தலைமை இயக்குநராக அறிவித்துள்ளது.

❖ நீதிபதி புலிகோரு வெங்கட சஞ்சய் குமார் அவர்கள் மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பதவியேற்று உள்ளார்.

❖ மரப் பொம்மைகள், உள்ளூர் கலைப்பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆகியவற்றை ஊக்குவிக்க மகாராஷ்டிர மாநில அரசானது பிளிஃப்கார்ட் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

❖ முன்னாள் ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவர் மரியோ டிராகி அவர்கள் இத்தாலியின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

❖ ஐக்கிய நாடுகள் மூலதன மேம்பாட்டு நிதியமானது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரீத்தி சின்ஹா என்பவரை தனது நிர்வாகச் செயலாளராக நியமித்துள்ளது.

❖ டாடா குழும நிறுவனமான டாடா எலக்ட்ரானிக்ஸ் ஆனது கைபேசி உதிரி பாகங்களின் தயாரிப்பு வசதியை அமைப்பதற்காக தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

❖ முன்னாள் அமெரிக்க அதிபர் டிரம்ப் அவர்கள் அன்சரல்லா என்ற குழுவின் செயல்பாடுகளைப் பொறுத்து அதனை ஒரு வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்பாகவும், உலகளாவிய பயங்கரவாதக் குழுவாகவும் சாற்றியதை ஜோ பிடன் அவர்கள் திரும்பப் பெற்று உள்ளார்.

  - அன்சரல்லா குழுவானது ஹௌதிஸ் இயக்கம் என்றும் அழைக்கப்படுகிறது.

❖ ஆற்றல் கண்ணோட்டம் மீதான 11வது சர்வதேச ஆற்றல் முகமை – சர்வதேச ஆற்றல் மன்றம் (IEF) - பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு ஆகியவற்றின் கருத்தரங்கானது சவுதி அரேபியாவின் ஆற்றல் துறை அமைச்சரான அப்துல் அசிஸ் பின் சல்மான் அல் சவுத் என்பவரின் ஆதரவுடன் நடத்தப்பட்டது.

❖ அஜய் மல்ஹோத்ரா என்பவர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையத்தின் ஆலோசனைக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியராக உருவெடுத்துள்ளார்.

❖ மத்திய சுரங்கத் துறை அமைச்சரான பிரகலாத் ஜோஷி மற்றும் ஒடிசா மாநில முதல்வரான நவீன் பட்நாயக் ஆகியோர் கூட்டாக ஒடிசாவில் உள்ள 2 சுரங்கங்களில் இரும்புத் தாதுவின் உற்பத்தியைத் தொடங்கி வைத்தனர்.

❖ ஏறக்குறைய 10 அண்டை நாடுகளுடன் 'கோவிட் -19 மேலாண்மை: அனுபவம், நல்ல நடைமுறைகள் மற்றும் முன்னோக்கிச் செல்லும் வழி' குறித்த ஒரு கருத்தரங்கில் பிரதமர் அவர்கள் உரையாற்றினார்.

- "அவசர கால மருத்துவச் சேவைகளுக்காக" என்று அண்டை நாடுகளிடையே ஒரு பிராந்திய விமான மருத்துவ ஊர்தி ஒப்பந்தம் செய்ய வேண்டி அவர் அழைப்பு ஒன்றை விடுத்து உள்ளார்.

❖ துணைநிலை இயக்குநரான (லெப்டினென்ட் ஜெனரல்) பி எஸ் ராஜு அவர்கள் இந்திய இராணுவத்தின் இராணுவ நடவடிக்கைகளுக்கான புதிய தலைமை இயக்குநராக பொறுப்பேற்க வுள்ளார்.

❖ அசாமின் தர்ராங் மாவட்டத்தில் கிழக்கு இந்தியாவின் முதல் திறன் பல்கலைக் கழகத்திற்கு அஸ்ஸாம் முதல்வர் சர்பானந்தா சோனோவால் அவர்கள் அடிக்கல் நாட்டி உள்ளார்.

❖ மாநில அந்தஸ்து பெற்று ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்பொழுது முதல் முறையாக நாகலாந்து மாநில சட்டமன்றத்திற்குள் தேசிய கீதமானது பாடப் பட்டு உள்ளது.

- நாகலாந்து மாநிலமானது 1963 ஆம் ஆண்டு டிசம்பர் 01 அன்று மாநில அந்தஸ்தைப் பெற்று இந்திய ஒன்றியத்தின் 16வது மாநிலமாக உருவடுத்தது.

❖ காகிதமற்ற முறையில் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த முதலாவது இந்திய மாநிலம் உத்தரப் பிரதேசம் ஆகும்.

❖ உத்தரகாண்ட் மாநில அரசானது, கணவர்களின் பரம்பரைச் சொத்தில் பெண்களுக்கும் உரிமைகளை வழங்குவதற்கான அவசரச் சட்டம் ஒன்றை கொண்டு வந்துள்ளது.

❖ நிகரகுவா நாடானது புவிக்கு அப்பாலான விண்வெளி விவகாரங்கள், சந்திரன் மற்றும் பிற விண்வெளி பகுதிகளுக்கான ஒரு புதிய தேசிய அமைச்சகத்தை உருவாக்கியுள்ளது.

❖ 2021 ஆம் ஆண்டிற்கான கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் என்பதின் 2வது பதிப்பானது கர்நாடகாவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

❖ ப்ரோகரஸ் எம்எஸ்-16 (Progress MS-16) என்ற ஒரு ஆளில்லா ரஷ்ய சரக்கு விண்வெளிக் கலன் பொருள் விநியோகச் சரக்குகளுடன் சர்வதேச விண்வெளி மையத்தை சென்றடைந்தது.

❖ இந்தியா மற்றும் மாலத்தீவு ஆகியவை சிஃப்வாரு – உத்துரு திலாஃபல்கு என்ற இடத்தில் ஒரு கடற்படைத் துறைமுகத்தை மேம்படுத்துவதற்காக சில ஒப்பந்தங்களில் கையெழுத்து போட்டுள்ளன.

❖ அயோத்தியில் (உத்தரப் பிரதேசம்) கட்டுமானத்தில் உள்ள விமான நிலையத்திற்கு மரியாதை புருஷோத்தம் ஸ்ரீராம் விமான நிலையம் என்று பெயரிடப்படும்.

❖ கபில் தேவை அடுத்து (131 டெஸ்ட்) 100 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய இரண்டாவது இந்திய வேகப்பந்து வீச்சாளராக இஷாந்த் சர்மா உருவெடுத்து உள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## குடியரசுத் தலைவரின் காவல் துறைப் பதக்கம்

- சென்னை மாவட்டக் காவல் துறை ஆணையரான மகேஷ் குமார் அகர்வால் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த இதர 2 காவல் துறை அதிகாரிகள் தங்களது தனித்துவ சேவைகளுக்காக வேண்டி குடியரசுத் தலைவரின் காவல்துறை விருதுகளுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.
- இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இதர மற்ற 2 காவல் துறை அதிகாரிகள் பின்வருமாறு
  - காவல் துறையின் கூடுதல் தலைமை இயக்குநர் மற்றும் காவல்துறை ஆய்வாளரான எஸ்.டேவிட்சன் தேவாசிர்வாதம்.
  - P. மணிகண்ட குமார், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை (படைப் பிரிவு - IV), கோவைப் புதூர்.

## சென்னை மாநகராட்சிப் புத்தாக்க அதிகாரி

- அழகு பாண்டியன் ராஜா என்பவர் சென்னை மாநகரின் முதலாவதுப் புத்தாக்க அதிகாரியாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- நாட்டில் மேற்கொள்ளப்பட்ட இது போன்ற ஒரு முதலாவது நியமனம் இதுவாகும்.
- இவர் பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் முதன்மையான நபராகக் கருதப் படுகின்றார்.
- இவர் மதராஸ் கழிவுப் பரிமாற்றம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி கொரானா கண்காணிப்பு கைபேசிச் செயலியை உருவாக்கியுள்ளார்.

## இளம் வயது பால் புரஸ்கார் விருதின் வெற்றியாளர்

- குமாரி பிரசித்தி சிங் அவர்கள் இந்த ஆண்டில் இந்த விருதைப் பெற்ற இளம் வயது வெற்றியாளராவார்.
- 7 வயது நிரம்பிய இவர் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சமூகத் தன்னார்வலர் ஆவார்.
- இவர் பிரசித்தி வனம் என்பதின் நிறுவனர் ஆவார்.



- இவர் நாட்டில் இளம் வயதில் பழங்கள் நிறைந்த வனத்தை உருவாக்கிக் கொண்டு இருப்பதற்காக இந்திய சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.
- இவர் அரசுப் பள்ளிகள் மற்றும் பொது இடங்களில் பழங்கள் நிறைந்த 8 வனங்களை உருவாக்கியுள்ள இவர் 9000க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டுள்ளார்.

## நீர்வாழ் உயிரி தனிமைப்படுத்துதல் மையம்

- மத்திய மீன் வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சரான கிரிராஜ் சிங் அவர்கள் படப்பையில் ஓர் நீர்வாழ் உயிரினத் தனிமைப்படுத்துதல் மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- இந்த மையமானது நன்னீர்வாழ் உயிரினங்களுக்காக வேண்டி ஒரு பிரத்தியேகமான நோய்க் கண்டறிதல் ஆய்வகத்தை உள்ளடக்கியுள்ளது.
- மேலும் இந்தத் திட்டமானது நோய்த் தொற்று நீக்கப் பிரிவு, நீர் மறுசுழற்சி அமைப்பு, வெப்பநிலைக் கட்டுப்பாட்டு அமைப்பு (வெப்பமாதல் மற்றும் குளிர்தல்) மற்றும் காற்றோட்ட வசதி ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- இந்த மையத்தின் முக்கிய நோக்கம் அலங்கார மீன் வர்த்தகத்தை வலுப்படுத்த உதவுவதாகும்.

## ஒருங்கிணைந்த மற்றும் உள்ளடக்கிய பொது மக்கள் குறை தீர்ப்பு முதலமைச்சர் உதவி மையம்

- பொது மக்களின் குறைகளை விரைவாக மற்றும் திறனுள்ள வகையில் தீர்த்து வைப்பதற்காக, மாநில அரசானது ஒருங்கிணைந்த மற்றும் உள்ளடக்கிய பொது மக்கள் குறை தீர்ப்பு முதலமைச்சர் உதவி மையத்தை அமைப்பது குறித்த ஒரு அரசாணையை வெளியிட்டுள்ளது.
- இந்த அமைப்பானது அனைத்துத் துறைகளின் உதவி மையங்கள் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்பு நடைமுறைகளை ஒருங்கிணைந்து அவற்றை ஒரே தளத்தில் கொண்டு வர உதவ இருக்கின்றது.
- இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக "1100" என்ற அழைப்பு எண்ணுடன் இணைந்த ஒரு உதவி மையம் அமைக்கப்பட உள்ளது.

## தமிழ்நாடு மாநில விருதுகள்

- முதல்வர் எடப்பாடி கே பழனிசாமி அவர்கள் 72வது குடியரசுத் தினத்தன்று மாநில விருதுகளை வழங்கினார்.
- சுகாதார மற்றும் காவல் துறைகளின் ஊர்திகள் முதல் பரிசை வென்று உள்ளன.
- ஊரக வளர்ச்சித் துறைக்கு இரண்டாம் பரிசு கிடைத்து உள்ளது.
- சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியவை மூன்றாம் பரிசை வென்று உள்ளன.
- சேலம் நகர காவல் நிலையம், திருவண்ணாமலை நகர காவல் நிலையம் மற்றும் கோட்டூபுரம் காவல் நிலையம் ஆகியவை மாநிலத்தின் சிறந்த முதல் மூன்று காவல்

நிலையங்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

- அதிக அரிசி உற்பத்தித் திறனுக்கான சி நாராயணசாமி நாயுடு விருதானது வடக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஜி.செல்வ குமாருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.அப்துல் ஜபார் அவர்கள் 2021 ஆம் ஆண்டுக்கான கோட்டை அமீர் மத நல்லிணக்க விருதைப் பெற்றார்.
- பின்வரும் நான்கு காவல் துறையினருக்கு காந்தியடிகள் காவல் பதக்கம் வழங்கப் பட்டுள்ளது.
    - டி.மகுடேஸ்வரி - புனித தோமையார் மலை
    - என்.செல்வராஜு - சேலம்
    - எஸ்.சண்முகநாதன் - ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும்
    - எஸ்.இராஜசேகரன் - திருவண்ணாமலை.
- வீர தீரச் செயல்களுக்கான அண்ணா பதக்கத்தைப் பெற்றவர்கள்
    - பி. முல்லை - LPG உருளை வெடித்த ஒரு விபத்தில் இருந்து 26 மாணவர்களைப் காப்பாற்றிய ஆசிரியை.
    - ஏ. பிரகாஷ் - 60 அடி ஆழமான கிணற்றில் விழுந்த யானையை மீட்பதில் ஈடுபட்ட வனக் கால்நடை உதவி அறுவை சிகிச்சை நிபுணர்.
    - லோகோ பைலட் ஜே.சுரேஷ் - இரயிலில் இருந்த 1,500க்கும் மேற்பட்ட பயணிகளின் உயிரைக் காப்பாற்றியவர்
    - ஆர். புகழேந்திரன் - மரம் விழுந்ததில் காயமடைந்த காவலரின் உயிரைக் காப்பாற்றியவர்.

## முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதாவின் நினைவிடம்

- முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதாவிற்காக மெரினா கடற்கரையில் கட்டப்பட்ட பிரம்மாண்டமான நினைவிடத்தை ஜனவரி 27 ஆம் தேதி தமிழக முதல்வர் எடப்பாடி கே பழனிசாமி திறந்து வைத்தார்.



- அனைத்துக் கடினமான சூழ்நிலைகளிலும் இருந்து மீண்டெழுந்த அவரது அரசியல் எழுச்சியைச் சித்தரிக்க வேண்டி இது ஒரு பீனிக்ஸ் பறவை போல உருவாக்கப் பட்டு உள்ளது.
- அவரது "மக்களால் நான் மக்களுக்காக நான்" என்ற முழக்கமானது அவரது கல்லறையில் பிரகாசமாக பொறிக்கப் பட்டுள்ளது.

## ஸ்மார்ட் மற்றும் அடுத்த தலைமுறை இருசக்கர வாகனங்கள்

- ஸ்மார்ட் மற்றும் அடுத்த தலைமுறை இருசக்கர வாகனங்களை சென்னை மெரினா கடற்கரையில் முதலமைச்சர் எடப்பாடி கே பழனிசாமி அவர்கள் அறிமுகப் படுத்தினார்.
- இது சென்னைப் பெருநகர மாநகராட்சி மேற்கொண்ட முயற்சியின் ஒரு பகுதி ஆகும்.
- மின்கலன் மூலம் இயங்கும் இந்த வாகனங்கள் முழுமையாக மின்னேற்றம் செய்யப் பட்டால் அவை 45 கி.மீ. தூரம் வரை இயங்கும்.
- இவற்றை மிதித்தும் இயக்க இயலும்.




## இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் – மதராசின் கலச்சாரத் திருவிழா “சாரங்”

- மதராஸ் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது அந்நிறுவனத்தின் ஒரு வருடாந்திர கலாச்சாரத் திருவிழாவான “சாரங்” என்ற விழாவானது இந்த ஆண்டு இணைய தள ரீதியில் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது.



- இது அதன் முதலாவது ஆன்லைன் பதிப்பாகும்.
- இந்த ஆண்டின் சாரங் விழாவிற்கான கருத்துரு "Vintage Vogue" என்பதாகும்.

## புதிய திட்டங்கள் மற்றும் நல உதவிகள்

- தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி கே பழனிசாமி அவர்கள் பிப்ரவரி 13 அன்று பயிர்க் கடன் தள்ளுபடி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- மாநில அரசானது இந்தக் கடன் தள்ளுபடிக்காக 2021 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி வரை பெறப்பட்ட கடன்கள் என்ற ஒரு காலக் கெடுவையும் நிர்ணயித்துள்ளது.
- முதல்வர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி அகழாய்வுத் தளத்தில் 7வது கட்ட அகழாய்வைத் தொடங்கி வைத்தார்.
- மேலும் இவர் தூத்துக்குடி மாவட்டத்தில் பாயும் தாமிரபரணி நதியின் குறுக்கே 4 தடுப்பு அணைகளைக் கட்டுவதற்காக வேண்டி அதற்கான அடிக்கல்லை நாட்டினார்.

## பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்ட முக்கியத் திட்டங்கள்

- Inauguration of Chennai Metro Rail Phase-I extension & inauguration of fourth Railway line between Chennai Beach and Attipattu
- Inauguration of Railway Electrification of single line section in Villupuram - Cuddalore - Mayiladuthurai - Thanjavur and Mayiladuthurai-Thiruvarur
- To hand over the State-of-the-Art Arjun Main Battle Tank (MK-1A) to the Indian Army
- To lay the foundation stone for the extension, renovation and modernization of the Grand Anicut Canal System & also to lay the foundation stone for the Discovery Campus of IIT Madras

- பிரதமர் அவர்கள் தமிழ்நாட்டில் பல்வேறு முக்கியத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.
- இவர் பின்வருவனவற்றைத் தொடங்கி வைத்தார்.
    - சென்னைக் கடற்கரை மற்றும் அத்திப்பட்டுக்கு இடையேயான 4வது மெட்ரோ இரயில் திட்டம்.
    - தமிழ்நாட்டில் விழுப்புரம் – கடலூர் – மயிலாடுதுறை – தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை – திருவாரூர் வழித்தடத்தில் ஒற்றை வழிப்பிரிவின் இரயில்வே மின்சாரமயமாக்கம்.
    - மதராஸின் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தில் கண்டுபிடிப்பு வளாகத்திற்கான அடிக்கல் திறப்பு.
    - கல்லணைக் கால்வாய் அமைப்பின் நீட்டிப்பு, புனரமைத்தல் மற்றும் நவீன மயமாக்கல் ஆகியவற்றுக்கான அடிக்கல் நாட்டுதல்.

## புதிய தொழிற்துறை மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) தொடர்பான கொள்கைகள்

- பிப்ரவரி 16 அன்று தமிழ்நாடு அரசானது ஒரு புதிய தொழிற்துறைக் கொள்கையை அறிவித்துள்ளது.
- இது பின்வரும் 4 முக்கிய குறிக்கோள்களை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - 2025 ஆம் ஆண்டிற்குள் 10 இலட்சம் கோடி மதிப்புள்ள (135 பில்லியன் அமெரிக்க டாலர்) முதலீடுகளை ஈர்த்தல்
  - இந்தக் கொள்கை காலத்தில் உற்பத்தித் துறையில் 15% வருடாந்திர வளர்ச்சியை அடைதல்
  - 2030 ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தின் பொருளாதாரத்தில் உற்பத்தித் துறையின் பங்களிப்பை தற்பொழுதுள்ள 25% என்ற அளவிலிருந்து 30% ஆக அதிகரித்தல்.
  - 2025 ஆம் ஆண்டிற்குள் 20 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்

***MSME கொள்கைகள்***

- மேலும் முதல்வர் அவர்கள் MSME/ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஆகியவற்றிற்காக ஒரு உறுதியான சூழலமைப்பை வழங்குவதற்காக MSME கொள்கையையும் வெளியிட்டு உள்ளார்.
- இது பின்வருவனவற்றை இலக்காக நிர்ணயித்துள்ளது.
  - 2025 ஆம் ஆண்டிற்குள் ரூ.2 இலட்சம் கோடி அளவில் புதிய முதலீடுகளை ஈர்த்தல்
  - 20 இலட்சம் மக்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.
- புதிய MSME மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் ஆகியவற்றிற்குச் சுயச் சான்றளிப்பு அடிப்படையில் 3 ஆண்டு காலத்திற்கு உருவாக்கம் மற்றும் செயல்பாடு ஆகியவற்றிற்கு ஒப்புதல் அளிக்கப் படுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.
- இந்த அலகுகள் 3 ஆண்டு காலம் முடிவடைந்த 1 ஆண்டிற்குள் கட்டாயமாக ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும்.
- இந்தப் புதிய கொள்கையானது MSME நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு மானியங்களுக்கான உச்ச வரம்பை அதிகரித்துள்ளது.
- மேலும் MSME நிறுவனங்களுக்குத் தயார் நிலையில் உள்ள வசதிகள்/இடங்கள், காப்பிடம் மற்றும் மனை ஆகியவை மேம்படுத்தப்பட்டு குறைந்த காலக் குத்தகைக்கு வழங்கப்படும்.

## தமிழ்நாட்டில் எண்ணெய் மற்றும் எரிவாயு துறை திட்டங்கள்

- பிரதமர் மோடி அவர்கள் தமிழ்நாட்டில் முக்கிய எண்ணெய் மற்றும் எரிவாயு துறை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
- ராமநாதபுரம் - தூத்துக்குடி இயற்கை எரிவாயு குழாய் திட்டம் மற்றும் சென்னை மணலியில் சி.பி.சி.எல். (சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்) வளாகத்தில் கேசோலினில் இருந்து கந்தகத்தை நீக்கும் வளாகத்தை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்தார்.
- நாகப்பட்டினத்தில் அமையும் காவிரிப் படுகை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை வளாகத்திற்கும் சேர்த்து அவர் அடிக்கல் நாட்டினார்.

## சென்னையில் அமேசான் உற்பத்தி பிரிவு

- அமேசான் சென்னையில் தனது உற்பத்தி பிரிவைத் தொடங்கப் போவதாக அறிவித்து உள்ளது.
- இது அமேசான் ஃபயர் டிவி ஸ்டிக் (Fire TV Stick) சாதனங்களைத் தயாரிக்கத் தொடங்க உள்ளது.
- இந்த உற்பத்திப் பிரிவானது ஃபாக்ஸ்கானின் துணை நிறுவனமான கிளவுட் நெட்வொர்க் தொழில்நுட்பத்துடன் இணைந்து அமைக்கப்படும்.

## கொத்தடிமை முறை ஒழிப்பு தினம்

- தமிழ்நாடு மாநில அரசானது பிப்ரவரி 09 ஆம் தேதியை கொத்தடிமை முறை ஒழிப்பு தினமாக அனுசரிக்க இருப்பதாக அறிவித்துள்ளது.
- இது போன்ற ஒரு அறிவிப்பை வெளியிட்ட நாட்டின் முதலாவது மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- மத்திய அரசானது 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி 09 அன்று கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டதைக் கொண்டு வந்தது.

## உதவி மையய எண் "1100"

- பொது மக்களின் குறைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்காக ஒரு "உதவி மைய எண்" சேவையை தமிழக முதல்வர் தொடங்கி வைத்துள்ளார்.
- இதன் மூலம், பொது மக்கள் தங்களது புகார்களை "1100" என்ற இலவச உதவி மைய எண்ணை அழைப்பதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.
- அதே நேரத்தில் பொது மக்கள் தங்களது புகார்களை 'cmhelpline@tn.gov.in' என்ற மின் அஞ்சல் முகவரிக்கும் அனுப்பலாம்.
- மேலும் பொது மக்கள் தங்களது திறன் பேசிகளைப் பயன்படுத்தி "cmhelpline citizen" என்ற செயலியின் மூலம் தங்களது புகார்களைப் பதிவு செய்யலாம்.



## தமிழ்நாடு இடைக்கால நிதிநிலை அறிக்கை

- தமிழ்நாட்டில் நடைபெற இருக்கும் தேர்தலை முன்னிட்டு தமிழ்நாடு துணை முதல்வர் மற்றும் நிதியமைச்சரான O. பன்னீர் செல்வம் அவர்கள் இடைக்கால நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.
- 2020-21 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட கணிப்புகளின்படி தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியானது (GSDP) ரூ. 19.43 இலட்சம் கோடியாக உள்ளது.
- இது 2021-22 ஆம் ஆண்டில் ரூ.23.42 இலட்சம் கோடியாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- கோவிட் நோய்த் தொற்றிற்கு எதிர்வினை ஆற்றியதற்காக தமிழ்நாடு அரசிற்கு ரூ.13,352.85 கோடி ரூபாய் செலவினமானது ஏற்பட்டுள்ளது.
- வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 55.67 இலட்சம் குடும்பங்களின் முதன்மை வருமானம் ஈட்டுபவர்களுக்கு விபத்து மற்றும் உயிர்க் காப்பீடானது வழங்கப் படுகின்றது.
- அரசுப் பணியாளர்களுக்கான மருத்துவக் காப்பீட்டு வரம்பை 4 இலட்சத்திலிருந்து 5 இலட்சமாக இந்த பட்ஜெட் உயர்த்தியுள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கள்ளபாளையத்தில் ஒரு தொழிற்துறைப் பூங்கா அமைப்பதற்கான அனுமதியானது வழங்கப்பட்டுள்ளது.
- ஏறத்தாழ 40 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பானது வழங்கப்பட இருக்கின்றது.
- பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான மானியமானது ரூ.70,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- கணினி அறிவியல் பாடமானது 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ/மாணவிகளுக்குப் பயிற்றுவிக்கப்பட இருக்கின்றது.
- இந்தியாவின் பட்டாசுத் தொழிற்சாலை மையமான சிவகாசியில் தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட இருக்கின்றன.

***நிதி ஒதுக்கீடுகள்***

- ரூ.144 கோடி நிதியானது அம்மா சிறிய மருத்துவமனைகளுக்கு (கிளினிக்) ஒதுக்கப் பட்டுள்ளது.
- உயர் கல்வித் துறைக்காக ரூ. 5,478.19 கோடி நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது.
- இது 8.42% ஆக அதிகரித்து உள்ளது.
- ரூ.688.48 கோடி நிதியானது மாற்றுத் திறன் கொண்ட நபர்களின் நலனுக்காக ஒதுக்கப் பட்டுள்ளது.
- இது “ரைட்ஸ்” (RIGHTS) எனப்படும் ஒரு சிறப்புத் திட்டத்தை நோக்கிச் செலுத்தப்பட உள்ளது.
- ரூ.6,683 கோடி நிதியானது கோயம்புத்தூர் மெட்ரோ திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- ரூ.7,217 கோடி நிதியானது மீன் வளத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
- பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.34,181 கோடியானது ஒதுக்கப்பட்டுள்ளது.
- விவசாயத் துறைக்கான நிதி ஒதுக்கீடானது 2021-22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் 7.8% என்ற அளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

- மாநிலத்தின் விவசாயத் துறைக்கு ரூ.1738 கோடி நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது.
- கூடுதலாக ரூ.5000 கோடி நிதியானது பயிர்க் கடன் தள்ளுபடிக்காக ஒதுக்கப் பட்டு உள்ளது.
- இயற்கைப் பேரிடர் காலத்தில் நெல் இழப்பிற்கான நிவாரணமானது ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு ரூ.13,000 ரூபாயிலிருந்து ரூ.20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ரூ.4371 கோடி நிதியானது மாநிலத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் உள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- மேலும், கடந்த 10 ஆண்டுகளில் அரசின் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 12.5 இலட்சம் மக்களுக்கு ரூ.1791 கோடி மதிப்பிலான தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

***கடன்***

- தமிழ்நாட்டின் ஒட்டு மொத்தக் கடன் 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வாக்கில் ரூ.5.70 இலட்சம் கோடியாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வாக்கில் ரூ.4.85 இலட்சம் கோடியாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- மாநிலமானது 2021-22 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்காக ரூ.84,686.75 கோடி அளவிற்கு நிகரக் கடனை வாங்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.


***வரி வருமானம் மற்றும் நிதிப் பற்றாக்குறை***

- 2021-22 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையானது மாநிலத்தின் சரக்கு மற்றும் சேவை வரி வருமானம் ரூ.45,395.50 கோடி என்றும் மதிப்புக் கூட்டு வரி வருமானம் ரூ.56,413.19 கோடி என்றும் மாநிலத்தின் கலால் வரி வருமானம் ரூ.9,613.91 கோடி என்றும் கணித்துள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் (மத்திய நிதிநிலை அறிக்கையில்) மத்திய வரியின் மூலமான தமிழ்நாட்டின் பங்கானது ரூ.32,849.34 கோடியிலிருந்து ரூ.23,039.46 கோடியாக (2020-21 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பு) குறைக்கப் பட்டுள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட கணிப்பில் மாநிலத்திற்கே உரிய வரி வருமானமானது ரூ.1.04 இலட்சம் கோடி என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இது 2020-21 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீட்டு அறிக்கையில் இருந்ததை விட ரூ.23,561 கோடி குறைவானது ஆகும்.
- இது 2021-22 ஆம் ஆண்டில் ரூ.1.35 இலட்சம் கோடியாக அதிகரிக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- ஒட்டு மொத்த வருமான ரசீதுகள் ரூ.2,18,991.96 கோடி என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அனைவருக்கும் வழங்கப்படும் ஊதியம், ஓய்வூதியம் வட்டி மற்றும் திட்டம் தொடர்பான செலவினம், வருவாய் செலவினம் ஆகியவற்றிற்கு ரூ.2,60,409.26 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டிற்கான ஒட்டு மொத்த வருவாய்ப் பற்றாக்குறையானது ரூ.41,417.30 கோடி என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட கணிப்பில் தமிழ்நாட்டின் நிதிப் பற்றாக் குறையானது ரூ.96,884.97 கோடி என்ற அளவிற்கு உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- இது மாநிலத்தின் GSDPயில் 4.99% ஆகும்.
- இது 15வது நிதி ஆணையத்தின் பரிந்துரைக்கப்பட்ட வரம்பிற்குள் இருக்கும்.

***GSDP***

- தமிழ்நாடு 2020-21 ஆம் ஆண்டில் (2020-21 ஆம் ஆண்டின் அடிப்படை விலையை அடிப்படையாகக் கொண்டு) 2.02% என்ற அளவில் நேர்மறையான GSDP வளர்ச்சியைப் பதிவு செய்தது. இது அகில இந்திய அளவில் 7.7% என்ற அளவில் எதிர்மறை வளர்ச்சியாகக் கணிக்கப் பட்டிருந்தது.
- இதில் 5.23% என்ற அளவு பங்குடன் முதல்நிலைத் துறையானது வலுவான செயல்பாட்டாளராக விளங்கியது. இதில் கால்நடை மற்றும் மீன்வளத் துறைகள் மிக வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்தன.
- 2020-21 ஆம் ஆண்டில் இரண்டாம் நிலைத் துறையின் வளர்ச்சி 1.25% என்ற அளவிலும் சேவைத் துறையின் வளர்ச்சி 1.64% என்ற அளவிலும் இருந்தது.



# தேசியச் செய்திகள்

## NCLAT சென்னை அமர்வு

- தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (National Company Law Appellate Tribunal - NCLAT) சென்னை அமர்வை மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் திறந்து வைத்தார்.
- இது கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, லட்சத்தீவு மற்றும் புதுச்சேரி ஆகிய பகுதிகளின் மீது அதிகார வரம்பைக் கொண்டிருக்கும்.



The National Company Law Appellate Tribunal
Cordially invites you to the Virtual Inaugural Ceremony
of
NCLAT, CHENNAI BENCH
by
Hon'ble Smt. Nirmala Sitharaman
Union Minister for Finance and Corporate Affairs
In the august presence of
Hon'ble Shri Anurag Singh Thakur
Minister of State for Finance and Corporate Affairs
Hon'ble Shri Justice Bansi Lal Bhat
Acting Chairperson, NCLAT
On 25th January, 2021 at 12:30 PM
Meeting Link : https://arsenalmeet.webex.com/arsenalmeet/onstage/g.php?MTID=e12bd617878cc4ff41f225fef336266b
Meeting Number : 158 769 5485
Meeting Password : 54321
6th Floor, Ezhilagam Annexe, Chepauk, Chennai-600005
Note : All invitees are requested to login (Virtual) at or before 12:15 PM

## குடியரசுத் தின அணி வகுப்பில் வங்க தேச இராணுவம்

- முதன்முறையாக, வங்க தேச முப்படைகளின் அணிவகுப்புப் படையானது குடியரசுத் தின அணிவகுப்பில் பங்கு பெற்றது.
- இது 1971 ஆம் ஆண்டுப் போரில் பாகிஸ்தானிற்கு எதிரான இந்தியாவின் வெற்றியை அனுசரிக்கின்றது.
- இந்தப் போர் வங்க தேசத்தின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது.
- வங்க தேச ஆயுதப் படைகளின் 122 நபர்களைக் கொண்ட ஒரு படைப் பிரிவானது வங்க தேச இராணுவம், கடற்படை, விமானப் படையைச் சேர்ந்த வீரர்களைக் கொண்டு இதில் பங்கேற்றுள்ளது.
- இது படைப்பிரிவு தலைமைத் தளபதியான அபு முகம்மது சாஹ்னூர் சவோன் மற்றும் அவரது துணை அதிகாரிகளால் வழி நடத்தப்பட்டது.

## அயோத்தியா மசூதி

- அயோத்தியா மாவட்டத்தில் கட்டப்பட உள்ள மசூதியானது அகமதுல்லாஹ் சாஹி என்பவருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

- இது பாபர் மஸ்ஜித் நிலத்திற்குப் பதிலாக வழங்கப்பட்ட பகுதியில் கட்டப்பட உள்ளது.
- இவருக்கு 1857 ஆம் ஆண்டில் ஆங்கிலேயருக்கு எதிரான முதல் விடுதலைப் போரின் போது "அவாத் புரட்சியின் கலங்கரை விளக்கம்" என்ற பட்டப் பெயரானது வழங்கப் பட்டுள்ளது.



## தேசிய தொற்றா நோய்களுக்கான கண்காணிப்பு ஆய்வு

- இது சமீபத்தில் இந்தியாவில் சுகாதார அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டது.
- 2017-18 ஆம் ஆண்டிற்கான காலகட்டத்தில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- இது தொற்றா நோய்கள் குறித்த முதலாவது விரிவான ஒரு கணக்கெடுப்பாகும்.
- இந்தக் கணக்கெடுப்பானது 15-69 வயதுடைய நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் உள்ளடக்கியது ஆகும்.

***முக்கியக் கண்டுபிடிப்புகள்***

- இந்தியாவில் ஐந்து பெரியவர்களுள் இருவர் தொற்றா நோய்களுக்கான மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆபத்துக் காரணிகளைக் கொண்டுள்ளனர்.
- நான்கு பெரியவர்களில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களும் 6.2% இளம் பருவத்தினரும் அதிக எடை அல்லது பருமன் கொண்டுள்ளனர்.
- பத்து பேரில் மூன்று பேர் உயர் இரத்த அழுத்தத்தைக் கொண்டுள்ளனர்.
- 3 சதவீத பேர் அதிக இரத்த குளுக்கோஸ் அளவைக் கொண்டுள்ளனர்.
- ஒவ்வொரு மூன்று பெரியவர்களுள் ஒருவர் மற்றும் நான்கில் ஒரு பங்கு ஆண்கள் கடந்த 12 மாதங்களில் புகையிலை நுகர்வு மற்றும் மது ஆகியவற்றை உட்கொண்டு உள்ளனர்.


## 72வது குடியரசு தின அணிவகுப்பின் தனித்துவமான அம்சங்கள்

- இந்தியாவின் 72வது குடியரசு நாள் அணிவகுப்பானது ஐந்து தசாப்தங்களில் முதல் முறையாக சிறப்பு விருந்தினர் யாரும் இல்லாமல் நடைபெற்றுள்ளது.
- அந்தமான் & நிக்கோபார் தீவுகளில் உள்ள துருப்புக்கள் இந்தியாவின் முதல் பெண் போர் விமானியுடன் பங்கேற்றன.
- ஒன்றியப் பிரதேசமான லடாக்கின் புதிதாக உருவாக்கப்பட்ட ஊர்தியும் இவ்விழாவில் காட்சிப் படுத்தப் பட்டது.

- புதிதாக வாங்கிய ரஃபேல் போர் விமானங்களும் இராஜபாதை மீது பறந்தன.
- முன்னாள் ராணுவ வீரர்களின் பங்கேற்பும், மோட்டார் சைக்கிள் சாகசங்களும் இதில் இடம் பெறவில்லை.
- அணிவகுப்பின் பாதையும் தேசிய அரங்கம் வரை குறைக்கப்பட்டது.
- அணிவகுப்பு அணிகளின் அளவு வழக்கமான 144 என்ற அளவிலிருந்து 96 ஆக குறைக்கப் பட்டது.
- பார்வையாளர்களின் எண்ணிக்கை 25,000 ஆக குறைக்கப்பட்டது.
- அணிவகுப்பில் முதல் முறையாக 122 உறுப்பினர்களைக் கொண்ட வங்கதேசத்தின் குழு ஒன்று பங்கேற்றது.

## உலகின் வேகமாக வளரும் முதிர்நிலைத் தொழில்நுட்பச் சூழலமைப்பு

- பெங்களூரு நகரமானது 2016 ஆம் ஆண்டு முதல் உலகில் வேகமாக வளரும் முதிர்நிலைத் தொழில்நுட்பச் சூழலமைப்பு கொண்ட நகரமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளது.
- இந்த அறிக்கையானது இலண்டன் & பார்ட்னர்ஸ் என்ற நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது தரவரிசையைக் கணக்கிடுவதற்காக Dealroom.co என்ற நிறுவனத்திடமிருந்த தரவை ஆய்வு செய்துள்ளது.
- இந்தப் பட்டியலில் இலண்டன் நகரம் 2வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் முனிச், பெர்லின், பாரிஸ் ஆகிய நகரங்கள் முறையே 3வது, 4வது, 5வது இடங்களைப் பிடித்துள்ளது.
- இதில் மும்பை நகரம் 6வது இடத்தைப் பிடித்துள்ளது.
- மேலும் பெங்களூரு நகரமானது உலகில் தொழில்நுட்ப துணிகர முதலீட்டிற்கான (venture capitalist - VC) பிரிவில் 6வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ஷாங்காய் நகரமானது இந்த உலகப் பட்டியலில் VC பிரிவில் முதலிடத்தைப் பிடித்து உள்ளது.




## மெய்நிகர் நுண்ணறிவுக் கூறு – தேஜாஸ்

- தேசியத் தகவல் மையச் சேவைகள் அமைப்பானது (National Informatics Centre Services Inc - NICSI) தனது 25வது ஆண்டு நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- இந்த நிகழ்வில், ஒரு மெய்நிகர் நுண்ணறிவுக் கூறான "தேஜாஸ்" ஆனது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது தரவு தளத்திலிருந்து முக்கியமான தகவல்களைப் பிரித்தெடுக்க இருக்கின்றது.
- இது அரசுச் சேவைகளின் திறன்கள் மற்றும் கொள்கை முடிவுகள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு உதவ இருக்கின்றது.
- மேலும் "எங்கிருந்தும் பணியாற்றுதல்" என்ற தளமானது தேஜாஸ் உடன் இணைந்து தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் தளமானது பணியாளர்கள் எந்தவொரு இடத்திலிருந்தும் மின்னஞ்சல், மின்னணு-அலுவலகம், நாள்காட்டி மற்றும் இதர துறைசார் செயலிகளை அணுக வழிவகை செய்கின்றது.
- NICSI ஆனது தேசியத் தகவல் மையத்தின் கீழ் செயல்படுகின்றது.




## பாரத் பயோடெக்கின் பிபிவி 154 தடுப்பூசி

- பாரத் பயோடெக்கின் பிபிவி 154 என்பது நாசி வழியே செலுத்தப்படும் வகையிலான (இன்ட்ரானேசல்) கோவிட் -19 தடுப்பூசியைப் பெறுவதற்கான முதல் முயற்சியாகும்.
- தடுப்பூசிகள் பொதுவாக தசைகள் அல்லது தோல் மற்றும் தசைகளுக்கு இடையில் உள்ள திசுக்களில் ஊசியின் வழியாக செலுத்தப் படுகின்றன.
- ஆனால் இன்ட்ரானேசல் தடுப்பூசிகள் என்பது நாசிக்குள் மருந்து தெளிக்கப் படுவதைக் குறிப்பிடுகிறது.
- இது உட்செலுத்துவதற்குப் பதிலாக உள்ளிழுக்கப் படுகிறது.
- ஆனால் தடுப்பூசி செலுத்துவதற்கான ஒரு பொதுவான முறை இதுவல்ல.
- இதுவரையில், சில காய்ச்சல்களுக்கு மட்டுமே இந்த முறையில் மருந்து செலுத்தப் படுகின்றன.





## IEA உடனான இந்தியாவின் ஒப்பந்தம்

- சர்வதேச எரிசக்தி முகமை உறுப்பினர்களுக்கும் (IEA - International Energy Agency) இந்திய அரசாங்கத்திற்கும் இடையிலான ஒரு மூலோபாயக் கூட்டாண்மைக்கான கட்டமைப்பு சமீபத்தில் கையெழுத்தானது.
- இந்தக் கட்டமைப்பானது பரஸ்பர நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது உலகளாவிய எரிசக்திப் பாதுகாப்பு, உறுதி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்தும்.
- இது IEA அமைப்பில் ஒரு முழு உறுப்பினராக இந்தியா உருவாவதை நோக்கிய ஒரு படியாக அமையும்.
- IEA என்பது அரசுகளுக்கிடையேயான ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- இது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் கட்டமைப்பின் படி 1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## மைத்ரி தடுப்பூசி முன்னெடுப்பு

- இந்த முன்னெடுப்பை இந்தியா அறிமுகப் படுத்தியது.
- இது அண்டை நாடுகளுக்கு கோவிட்-19 தடுப்பூசிகளைப் பரிசளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சமீபத்தில், இந்த முயற்சியின் கீழ் இலங்கை மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகள் இந்தியாவில் இருந்து கோவிட் -19 தடுப்பூசிகளைப் பெற்றுள்ளன.
- இந்த முயற்சியின் கீழ் இந்தியா ஏற்கனவே 5 மில்லியனுக்கும் அதிகமான மருந்துகளை ஏழு அண்டை நாடுகளுக்கு வழங்கியுள்ளது.
- மாலத்தீவு, பூடான், நேபாளம், வங்கதேசம், மியான்மர், மொரீஷியஸ் மற்றும் செசல்ஸ் ஆகியவை அந்த 7 நாடுகளாகும்.
- கோவிஷீல்டின் வணிக ரீதியான வழங்கல் மொராக்கோ, பிரேசில் மற்றும் வங்க தேசம் ஆகிய நாடுகளுக்கு அளிக்கப் பட்டுள்ளன.




## தேசிய கடல் ஆமை செயல் திட்டம்

- இதைப் புதுதில்லியில் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- கடல் ஆமை செயல் திட்டத்துடன் சேர்த்து 'Marine Mega Fauna Stranding Guidelines' என்ற விதிமுறைகளையும் அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இந்த இரண்டு ஆவணங்களிலும் சுகாதார ரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான வழிகள் மற்றும் நடவடிக்கைகள் அடங்கும்.

## "பிரபுத்தா பாரத்தின்" 125வது நினைவு தினம்

- 2021 ஆம் ஆண்டு ஜனவரி 31 அன்று "பிரபுத்தா பாரத்தின்" 125வது நினைவு தினமானது அனுசரிக்கப் பட்டது.
- "பிரபுத்தா பாரத்" என்பது ராமகிருஷ்ணரின் நினைவாக தொடங்கப்பட்ட மாதாந்திரப் பத்திரிக்கையாகும்.
- இந்தப் பத்திரிக்கையானது 1896 ஆம் ஆண்டில் P. அய்யாசாமி, B.R. ராஜம் அய்யர், G.G. நரசிம்மாச்சாரியா மற்றும் B.V. சாமேஸ்வர அய்யர் ஆகியோரால் தொடங்கப் பட்டு உள்ளது.
- இது சுவாமி விவேகானந்தரின் வழிகாட்டுதலின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தப் பத்திரிக்கையானது 2 ஆண்டுகளுக்கு சென்னையிலிருந்துப் பிரசுரித்து வெளியிடப் பட்டது.
- அதன் பிறகு, இந்தப் பத்திரிக்கையானது அல்மோராவில் இருந்து வெளியிடப் பட்டது.
- 1899 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து இந்தப் பத்திரிக்கையானது கொல்கத்தாவில் உள்ள அத்வைதா ஆசிரமத்திலிருந்து வெளியிடப் படுகின்றது.

## இந்திய நீதி அறிக்கை - 2020

- இது பின்வருவனவற்றுடன் இணைந்து டாடா அறக்கட்டளை அமைப்பால் தயாரிக்கப் பட்டுள்ளது.
    - சமூக நீதி மையம்
    - காமன் காஸ்,
    - தக்ஸ் அமைப்பு
    - சட்டப்பூர்வக் கொள்கைக்கான விதி மையம் மற்றும்
    - காமன்வெல்த் மனித உரிமைகள் முன்னெடுப்பு
- இந்த அறிக்கையானது நீதியை வழங்குவதற்கான பல்வேறு மாநிலங்களின் திறனை ஆய்வு செய்துள்ளது.
- இதில் ஆய்வு செய்யப்பட்ட 18 மாநிலங்களில் மகாராஷ்டிரா மாநிலமானது தொடர்ந்து 2வது முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இதற்கு அடுத்து தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- இதில் உத்தரப் பிரதேசம் கடைசி இடத்தில் உள்ளது.
- சிறிய மாநிலங்களில் கோவா முதலிடத்தையும் அருணாச்சலப் பிரதேசம் கடைசி இடத்தையும் பிடித்துள்ளன.

***முக்கிய அம்சங்கள்***

- தனது காவல் துறையில் (25.3%) அதிக எண்ணிக்கையில் பெண்களைப் பணி அமர்த்தியதற்காக 25 மாநிலங்களைக் கொண்ட ஒரு பட்டியலில் பீகார் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- தனது காவல் துறையில் 20%ற்கும் மேல் பெண்களைக் கொண்ட ஒரே மாநிலம் பீகார் ஆகும்.
- தமிழ்நாடு ஆனது அதிக சதவிகித அளவில் (24.8%) பெண் காவல் துறை அதிகாரிகளைக் கொண்டுள்ளது.
- இதற்கு அடுத்து மிசோரம் ஆனது அதிக சதவிகித அளவில் (20.1%) பெண் காவல் துறை அதிகாரிகளைக் கொண்டுள்ளது.
- நாட்டில் உள்ள உயர் நீதிமன்றங்களில் 29% பெண் நீதிபதிகள் மட்டுமே உள்ளனர்.
- ஆனால் சிக்கிம் மாநிலத்தைத் தவிர வேறு எந்த மாநிலமும் 20%ற்கும் மேல் பெண் நீதிபதிகளைக் கொண்டிருக்க வில்லை.
- பீகார், உத்தரகாண்ட், திரிபுரா மற்றும் மேகாலயா ஆகிய மாநிலங்கள் உயர் நீதிமன்ற அளவில் பெண் நீதிபதிகளைக் கொண்டிருக்கவில்லை.
- அதிகாரி மற்றும் பணியாளர் ஆகிய பணி நிலை இரண்டிலும் எஸ்சி, எஸ்டி, ஒபிசி பிரிவிற்கான இடஒதுக்கீட்டைப் பூர்த்தி செய்த ஒரே மாநிலம் கர்நாடகம் ஆகும்.


## கலா உத்சவம்

- இது கல்வியில் கலையை ஊக்குவிப்பதற்கான ஒரு வருடாந்திர விழாவாகும்.
- இது மத்தியக் கல்வித் துறை அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.

- இந்தத் திட்டமானது ராஷ்டிரிய மாத்தியமிக் சிக்சா அபியான் (RMSA) என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டது.
- தற்பொழுது RMSA ஆனது மற்ற இதர திட்டங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- இது பள்ளிக் கல்விக்கான ஒரு ஒருங்கிணைந்த திட்டமான "சமக்ரா சிக்சா" என்பதின் கீழ் தற்பொழுது செயல்படுகின்றது.

## குடியரசு தினத்திற்கான காட்சிப்பட அணிவகுப்பின் வெற்றியாளர்கள்

- உத்தரப் பிரதேசத்தின் இராமர் கோயில் காட்சிப் படமானது அனைத்துக் காட்சிப் படங்களிடையே முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- இது 2021 ஆம் ஆண்டு குடியரசு தினக் கொண்டாட்டத்தின் போது காட்சிப் படுத்தப் பட்டது.
    - இதன் கருத்துரு, "அயோத்தியா : உத்தரப் பிரதேசத்தின் கலாச்சாரப் பாரம்பரியம்" என்பதாகும்.
- திரிபுரா மாநிலக் காட்சிப் படமானது குடியரசு தினக் காட்சிப் பட அணிவகுப்பில் 2வது இடத்தைப் பிடித்துள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலக் காட்சிப் படமானது மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிடையே மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
    - இதன் கருத்துரு, "தேவ பூமி – தெய்வங்களின் இருப்பிடம்" என்பதாகும்.
- மத்தியப் பொதுப் பணித் துறையின் காட்சிப் படமானது ஆயுதப் படை வீரர்களின் உயிர்த் தியாகங்களுக்கு அஞ்சலி செலுத்தியதற்காக ஒரு சிறப்புப் பரிசைப் பெற்று உள்ளது.
    - இதன் கருத்துரு, "அமர் ஜவான்" என்பதாகும்.




## MSPயின் கீழ் புதிய சிறிய ரக வன உற்பத்திப் பொருட்கள்

- 14 புதிய சிறிய ரக வன உற்பத்திப் பொருட்களைக் குறைந்தபட்ச ஆதரவு விலையின் (MSP) கீழ் சேர்க்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.
- இந்தத் திட்டத்தில் தசார் ஓடு, மூங்கில் கிளைகள், உலர் விளாம்பழம், உலர்ந்த வன காளான் மற்றும் குவரிகுண்டல் விதை ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

## 8வது இந்திய சர்வதேசப் பட்டுக் கண்காட்சி

- மத்திய ஜவுளித் துறை அமைச்சரான ஸ்மிருதி இராணி அவர்கள் காணொலி வாயிலாக 8வது இந்திய சர்வதேசப் பட்டுக் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவின் மிகப்பெரிய பட்டுக் கண்காட்சி இதுவாகும்.
- இந்தக் கண்காட்சியானது இந்தியப் பட்டு ஏற்றுமதி ஊக்குவிப்பு ஆணையத்தின் கீழ் காணொலித் தளத்தின் வாயிலாக நடத்தப்படுகின்றது.

### *இந்தியாவில் பட்டு*

- சீனாவிற்கு அடுத்து 2வது மிகப்பெரிய பட்டு உற்பத்தியாளர் நாடு இந்தியா ஆகும்.
- உலகெங்கிலும் பட்டின் மிகப்பெரிய நுகர்வைக் கொண்ட நாடு இந்தியா ஆகும்.
- ஏறத்தாழ 97% கச்சா மல்பெரி வகை பட்டானது 5 மாநிலங்களில் உற்பத்தி செய்யப் படுகின்றது.
- தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் குஜராத் ஆகியவை அந்த 5 மாநிலங்களாகும்.
- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஐதராபாத் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள கோபிசெட்டிப் பாளையம் ஆகியவை முதலில் தானியங்கி பட்டு நூற்பு அலகுகளை ஏற்படுத்திய சில இடங்களில் ஒன்றாகும்.
- தமிழ்நாட்டில், மல்பெரி பட்டு உற்பத்தியானது சேலம், ஈரோடு மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றது.

## 15வது நிதி ஆணையத்தின் அறிக்கை

- 2021-22 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டிற்கான இந்தியாவின் 15வது நிதி ஆணையத்தின் இறுதி அறிக்கையானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- பொதுவாக நிதி ஆணையங்கள் 5 ஆண்டு கால இடைவெளியில் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.
- இந்த அறிக்கையானது பின்வரும் 4 தொகுதிகளில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
    - தொகுதி I மற்றும் II – முதன்மை அறிக்கை
    - தொகுதி III – இது மத்திய அரசின் மீது கவனம் செலுத்துகின்றது. இது இடைக்காலச் சவால்கள் மற்றும் செயல்பட வேண்டிய வழிகளுடன் சேர்த்து மிக ஆழமாக மிக முக்கியத் துறைகளை ஆய்வு செய்கின்றது.
    - தொகுதி IV – முழுவதும் மாநிலங்களின் மீது கவனம் செலுத்துகின்றது. இது ஒவ்வொரு மாநிலத்தின் நிதி நிலைமையையும் மிக ஆழமாக ஆய்வு செய்து ஒவ்வொரு மாநிலமும் எதிர்கொள்ளும் முக்கியமான சவால்களைக் களைவதற்காக மாநிலங்கள் வாரியாக தீர்வுகளைப் பரிந்துரைக்கின்றது.

### *முக்கியமான பரிந்துரைகள்*

- வளங்களின் கணிப்பு மற்றும் நிலைத் தன்மையைப் பராமரிப்பதற்காக 41% என்ற அளவில் செங்குத்துப் பகிர்வைத் தொடர்ந்து செயல்படுத்துதல்.
- மாநிலத்தினால் மேற்கொள்ளப்படும் சுகாதாரத்தின் மீதான செலவினமானது 2022 ஆம் ஆண்டில் அதன் நிதிநிலை அறிக்கையில் 8%ற்கும் மேல் அதிகரிக்கப்பட வேண்டும்.

- மின்துறைச் சீர்திருத்தங்களின் செயல்பாடுகளைப் பொறுத்து மாநிலங்களும் கூடுதலாக கடன் பெறும் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

## இந்தியாவின் முதலாவது "கை-கால்கள் இழப்பு மருத்துவமனை"

- இந்தியாவின் முதலாவது கை-கால்கள் இழப்பு மருத்துவமனையானது சண்டிகரில் உள்ள முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது குறிப்பிடத்தக்க ஒத்துழைப்புடன் ஒரே தளத்தின் கீழ் அதிக வரம்பிலான சேவைகளை அளிப்பதன் மூலம் கை-கால்களை இழந்த நோயாளிகளின் நலத்தை மேம்படுத்துவதற்காக அமைக்கப் படுகின்றது.
- இந்தக் கை-கால் இழப்பு மருத்துவமனையானது ஒரே தளத்தின் கீழ் மீட்டுருவாக்கம் மற்றும் நோயாளிகளின் ஆரோக்கியத்திற்கு உதவும் வகையில் குறிப்பிடத்தக்க அனைத்து சிறப்பு வசதிகளையும் கொண்டிருக்கும்.

## தேசியப் பழங்குடியினர் விழா "ஆதி மஹோத்ஸவ்"

- தேசியப் பழங்குடினர் விழாவான "ஆடி மஹோத்ஸவ்" விழாவை துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு துவக்கி வைத்தார்.
- இதை இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டுக் கூட்டமைப்பு நிறுவனம் (TRIFED - Tribal Co-operative Marketing Development Federation Ltd) ஏற்பாடு செய்துள்ளது.
- இது பழங்குடியினக் கலாச்சாரம், கைவினைப் பொருட்கள், உணவு வகைகள் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் ஒரு கொண்டாட்டமாகும்.
- இது 2017 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு வருடாந்திர முயற்சியாகும்.

## ஏரோ இந்தியா 2021

- இந்தியாவின் முதன்மை விண்வெளி மற்றும் பாதுகாப்புக் கண்காட்சியின் 13வது பதிப்பான ஏரோ இந்தியா 2021 ஆனது பெங்களூரில் உள்ள விமானப் படை நிலையமான யெலஹங்காவில் துவங்கப் பட்டுள்ளது.
- இது நேரிலும் இணைய வழியிலும் நடத்தப்படுகிறது.
- இது ஈராண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஒரு சர்வதேச நிகழ்வாகும்
- இந்தப் பதிப்பானது இரண்டு விதமாகவும் நடத்தப் படும் உலகின் முதல் வான்வெளி நிகழ்ச்சியாகும்.

## மாநிலங்களவையில் அலைபேசிகளைப் பயன்படுத்துதல்

- சபையின் நடவடிக்கைகளைப் பதிவு செய்ய அலைபேசிகளைப் பயன்படுத்துவதை எதிர்த்து மாநிலங்களவைத் தலைவர் அதன் உறுப்பினர்களை சமீபத்தில் எச்சரித்து உள்ளார்.
- அங்கீகரிக்கப்படாத முறையில் பதிவு செய்வதும் சமூக ஊடகங்களில் அதைப் பரப்புவதும் பாராளுமன்றத்தின் தனியுரிமைகளை மீறுவதாகும்.

- இது சபையின் அவமதிப்பு என்றும் கருதப்படும்.
- ராஜ்ய சபையின் அறைகளுக்குள் அலைபேசிகளைப் பயன்படுத்த நாடாளுமன்ற விதிகள் அனுமதிக்காது.

## 2021 ஆம் ஆண்டில் இரண்டாவது மிகச் செழுமையான பொருளாதாரம்

- 2021 ஆம் ஆண்டில் இந்தியா இரண்டாவது மிகச் செழுமையான பொருளாதாரமாக உருவெடுக்கும்.
- இது சர்வதேசப் பொருளாதார தாங்குதிறன் தரவரிசை (International Economic Resilience) என்ற அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- இதை PHD Chamber of Commerce and Industry எனும் அமைப்பு வெளியிட்டுள்ளது.
- இந்தத் தரவரிசையின் முதல் 10 முன்னணிப் பொருளாதாரங்களில் ஜெர்மனி முதலிடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் தென் கொரியா மூன்றாவது இடத்தில் உள்ளது.


| Top 10 Leading Economies | International Economic Resilience (IER) Rank | Real GDP growth Rate | Merchandise Export Growth | Current Account Balance % of GDP | General Govt. net lending / borrowing (% of GDP) | Gross Debt to GDP ratio | Aggregate of ranks of each leading indicator |
|---|---|---|---|---|---|---|---|
| Germany | 1 | 7 | 5 | 1 | 2 | 3 | 18 |
| India | 2 | 1 | 1 | 6 | 8 | 4 | 20 |
| South Korea | 3 | 8 | 10 | 2 | 1 | 1 | 22 |
| China | 4 | 2 | 8 | 5 | 9 | 2 | 26 |
| Canada | 5 | 6 | 2 | 9 | 6 | 6 | 29 |
| France | 5 | 3 | 7 | 7 | 5 | 7 | 29 |
| Japan | 5 | 8 | 4 | 3 | 4 | 10 | 29 |
| U S A | 5 | 4 | 3 | 8 | 6 | 8 | 29 |
| Italy | 6 | 9 | 6 | 4 | 3 | 9 | 31 |
| U K | 7 | 5 | 9 | 10 | 7 | 5 | 36 |

## யுத் அபியாஸ் கூட்டு இராணுவப் பயிற்சி

- இந்திய-அமெரிக்க கூட்டு இராணுவப் பயிற்சியான 'யுத் அபியாஸின்' 16வது பதிப்பு ராஜஸ்தானில் நடத்தப்பட இருக்கின்றது.
- பிரான்ஸ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் விமானப் படைகள் ராஜஸ்தானில் 5 நாள் கூட்டுப் பயிற்சியை நடத்திய அடுத்த சில நாட்களில் இந்தப் பயிற்சியானது துவங்க உள்ளது.
- இந்தியா-பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டு இராணுவப் பயிற்சியானது இரு படைகளுக்கிடையேயான இயங்குந்தன்மை மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் கட்டளைகளின் கீழ் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மீதும் கவனம் செலுத்தும்.

## தன்னார்வ வாகன உடைப்புக் கொள்கை

- 2022 நிதியாண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கையை வழங்கும் போது இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டது.
- இது தகுதியற்ற மற்றும் அதிகளவில் மாசுபடுத்தும் வாகனங்களை அகற்ற உதவும்.
- குறைந்த எரிபொருளைப் பயன்படுத்துகின்ற மற்றும் சுற்றுச்சூழலிற்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வாகனங்களை ஊக்குவிக்கவும் இது உதவும்.
- இதனால், இது வாகன மாசுபாட்டையும் இந்தியாவின் எண்ணெய் இறக்குமதிக் கட்டணங்களையும் குறைக்கும்.
- தகுதிச் சோதனைகளின் அடிப்படையில் இந்த தன்னார்வ வாகன உடைப்புக் கொள்கை இருக்கும்.
- இதில் தனிப்பயன் வாகனங்கள் என்றால் அதன் ஆயுட்காலம் 20 ஆண்டுகளாகவும், வணிக வாகனங்களுக்கு அதன் ஆயுட்காலம் 15 ஆண்டுகளாகவும் வேண்டி நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கொள்கை மத்திய மற்றும் மாநில அரசுகளுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் பொருந்தும்.




## விவசாய உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வரி (AIDC)

- மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2021 ஆம் ஆண்டிற்கான தனது மத்திய நிதிநிலை அறிக்கையில் AIDC (Agricultural infrastructure and development cess) என்ற ஒரு வரியை விதிக்க முன்மொழிந்து உள்ளார்.
- செஸ் எனப்படும் இந்த வரியானது அனைத்துப் பொருட்களுக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை, எனவே இது பொருளுக்குப் பொருள் மாறுபடும்.
- இது பெட்ரோல் மீது 1 லிட்டருக்கு ரூ.2.5 மற்றும் டீசல் மீது 1 லிட்டருக்கு ரூ.4 என அறிவிக்கப் பட்டுள்ளது.
- இதன் விளைவாக தர அடையாளம் செய்யப்படாத பெட்ரோல் மற்றும் டீசல் முறையே ஒரு லிட்டருக்கு ரூ .1.4 மற்றும் ரூ .1.8 என்ற கலால் வரி (உற்பத்தி வரி) விதிக்கப் பெறும்.
- மேலும் தர அடையாளம் செய்யப்படாத பெட்ரோல் மற்றும் டீசல் மீதான சிறப்பு கூடுதல் கலால் வரி (SAED - Special Additional Excise Duty) முறையே லிட்டருக்கு ரூ .11 மற்றும் ரூ .8 என்ற அளவில் இருக்கும்.

- கலப்பு எரிபொருட்களுக்கு (Blended fuel) செஸ் மற்றும் கூடுதல் கட்டணங்களிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.
- இதில் எம் - 15 பெட்ரோல் மற்றும் இ - 20 பெட்ரோல் ஆகியவை அடங்கும்.

## பிரதம மந்திரி ஆத்மநிர்பர் ஸ்வஸ்த் பாரத் யோஜனா மற்றும் மிஷன் போஷான் 2.0

- இந்திய நிதியமைச்சர் மத்திய நிதியுதவியைப் பெறும் இந்த இரண்டு புதிய திட்டங்களை அறிவித்துள்ளார். அவை
    - பிரதம மந்திரி ஆத்ம நிர்பர் ஸ்வஸ்த் பாரத் யோஜனா மற்றும்
    - போஷான் திட்டம் 2.0 ஆகும்.
- இது தேசிய சுகாதாரத் திட்டத்தோடுச் சேர்த்து கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- பிரதம மந்திரி ஆத்ம நிர்பர் ஸ்வஸ்த் பாரத் யோஜனாவானது கூடுதல் சுகாதாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உள்கட்டமைப்புகளை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- போஷான் திட்டம் 2.0 திட்டமானது ஊட்டச்சத்து உள்ளடக்கம், விநியோகம் மற்றும் அதன் விளைவுகள் ஆகியவற்றை மேம்படுத்துவதையும் பலப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டமானது போஷான் அபியான் மற்றும் கூடுதல் சத்துணவுத் திட்டத்தை ஒன்றிணைக்கும்.
- 112 இலட்சிய நோக்கு மாவட்டங்களில் ஊட்டச்சத்து விளைவுகளை மேம்படுத்த இந்த நோக்கம் முயல்கிறது.

## புதிய சொத்துப் புனரமைப்பு மற்றும் சொத்து மேலாண்மை நிறுவனம்


- 2021 ஆம் ஆண்டின் மத்திய நிதிநிலை அறிக்கையானது ஒரு புதிய சொத்துப் புனரமைப்பு மற்றும் சொத்து மேலாண்மை நிறுவனத்தை உருவாக்குவதாக அறிவித்துள்ளது.
- புதிய சொத்துப் புனரமைப்பு மற்றும் சொத்து மேலாண்மை நிறுவனமானது பாதிப்புக்குள்ளான வங்கிகளின் வாராக் கடன்களைக் கவனிக்கும்.
- இதில் புதிய திருத்தங்கள் இணைக்கப்பட்டு அதனால் சொத்துப் புனரமைப்பு வைப்பீட்டாளர்கள் தங்கள் சேமிப்புகளை எளிதாகவும் சரியான நேரத்திலும் அணுக முடியும்.
- இதனால் அது பாதிப்புக்குள்ளான வங்கிகளின் வைப்பீட்டாளர்களுக்கு உதவும்.

## மின்சார விநியோகச் சீர்திருத்தத் திட்டம்

- 2021 ஆம் ஆண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் 3.05 டிரில்லியன் மதிப்புள்ள ஒரு மின்சார விநியோக சீர்திருத்தத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது மின்சார விநியோக நிறுவனங்களின் இழப்புகளைக் குறைக்கவும் அதன் செயல்திறனை மேம்படுத்தவும் உதவும்.
- நிதிநிலை அறிக்கையின் விளக்கத்தின் போது இதற்கான ஒரு கட்டமைப்பும் அறிவிக்கப் பட்டது.

- இது நுகர்வோருக்கு மின்சாரம் வழங்கும் நிறுவனத்தைத் தேர்வு செய்ய ஒரு விருப்பத்தை அனுமதிக்கிறது.
- மேலும் அரசாங்கம் மின்சார திருத்த மசோதா, 2021 என்ற ஒரு மசோதாவைக் கொண்டு வர பரிசீலித்து கொண்டு இருக்கின்றது .

## நகர்ப்புறத்திற்கான ஜல் ஜீவன் திட்டம்


In the pipeline

As of October 2018, 40.9% of the Indian urban households had piped water connection which acts as their principal source of drinking water in their homes. Top and bottom five States:

% URBAN HOMES WITH PIPED WATER CONNECTION

| States/U.T. | % |
|---|---|
| Uttarakhand | 72.6 |
| J&K U.T. | 69.3 |
| Maharashtra | 67 |
| Delhi | 63.3 |
| Gujarat | 62.2 |
| West Bengal | 25.5 |
| Tamil Nadu | 20.5 |
| Kerala | 18.8 |
| A.P. | 17.3 |
| Bihar | 17.2 |

- ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் நகர்ப்புற நீர் வழங்கல் திட்டமானது நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டுள்ளது.
- இதில் நீர்நிலைகளைப் புனரமைத்தல் மற்றும் மறுபயன்பாட்டு நீரிலிருந்து 20% அளவிற்கு குடிநீர் வழங்கல் ஆகியவை அடங்கும்.
- 2.68 கோடி நகர்ப்புற வீடுகளில் குழாய் இணைப்புகள் இல்லை என்று தற்போது மதிப்பிடப் பட்டுள்ளது.
- அனைத்து 4,378 சட்ட ரீதியான நகரங்களிலும் குடிநீர் இணைப்புகளின் பற்றாக்குறையைக் குறைக்க இந்தத் திட்டம் முயற்சிக்கும்.
- 500 நகரங்களில் 2.64 கோடி என்ற அளவில் கழிவுநீர் இணைப்புகள் மீதான பற்றாக்குறையைக் குறைப்பதும் இதன் நோக்கமாகும்.
- இது தற்போதைய புனரமைப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் திட்டத்தின் கீழ் இருக்கும்.
- இந்தத் திட்டத்தில் நிலையான நன்னீர் விநியோகத்தை அதிகரிக்க நீர்நிலைகளைப் புனரமைப்பதும் அடங்கும்.
- மேலும் பசுமையான இடங்களை (green spaces) உருவாக்குவதும் இதில் அடங்கும்.

## மெகா முதலீட்டு ஜவுளிப் பூங்காக்கள் (மித்ரா) திட்டம்

- மெகா முதலீட்டு ஜவுளிப் பூங்காக்கள் (MITRA - Mega Investment Textiles Parks) என்ற ஒரு திட்டத்தை அமைக்க நிதியமைச்சர் முன்மொழிந்து உள்ளார்.

- ❖ இது ஜவுளித் தொழிலை உலகளவில் போட்டித் தன்மையுடன் நீடிக்கச் செய்யவும், பெரிய முதலீடுகளை ஈர்க்கச் செய்யவும், வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதியை உயர்த்தச் செய்யவும் வேண்டி எண்ணுகின்றது.
- ❖ ஏற்றுமதியில் உலகளாவிய வெற்றியாளர்களை உருவாக்க இது தயார் நிலை வசதிகளுடன் உலகத் தரம் வாய்ந்த ஒரு உள்கட்டமைப்பை உருவாக்கும்.




## தேசியத் தோட்டக் கலைக் கண்காட்சி 2021

- ❖ இது 5 நாட்கள் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.
- ❖ இது இந்தியத் தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனத்தின் (Indian Institute of Horticultural Research - IIHR) வளாகத்தில் நடத்தப்பட்டது.
- ❖ இது காணொலி வாயிலாகவும் நேரடியாகவும் நடத்தப்பட்டது.
- ❖ இந்தக் கண்காட்சியின் கருத்துரு, "புதிதாகத் தொழில் தொடங்குதல் மற்றும் எழுச்சி பெறும் இந்தியாவிற்கான தோட்டக்கலை" என்பதாகும்.
- ❖ IIHR என்பது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒரு துணை நிறுவனமாகும்.



## கோப்ரா படையின் முதலாவது பெண்கள் குழு

- 34 சிஆர்பிஎப் (CRPF) பெண் பாதுகாப்புப் படை வீரர்கள் கோப்ரா எனப்படும் சிறப்பு வன யுத்தப் பகுதி என்ற கமாண்டோ படையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
- இந்தப் படைப் பிரிவானது தற்பொழுது இந்தியாவின் நக்சல் எதிர்ப்பு நடவடிக்கைப் பிரிவில் பணியமர்த்தப்பட உள்ளது.
- கோப்ரா என்பது இந்தியாவின் மத்திய ரிசர்வ் காவல் படையின் ஒரு சிறப்பு நடவடிக்கைப் பிரிவாகும்.
- இந்த பாதுகாப்புப் படைப் பிரிவானது கொரில்லா போர் முறை மற்றும் வனங்களில் போரிடும் முறை ஆகியவற்றில் திறன் பெற்று விளங்குகின்றது.
- இது நக்சலைட் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 2009 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

## MCA21 பதிப்பு 3.0

- பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சகமானது தரவுப் பகுப்பாய்வு சார்ந்த MCA21 எனும் திட்டத்தின் பதிப்பு 3.0 என்பதை அக்டோபர் 2021 ஆம் ஆண்டிற்குள் தொடங்க உள்ளது.
- MCA21 பதிப்பு 3.0 என்பது இந்தியாவின் திட்ட மாதிரியில் அமைந்த ஒரு மின் -ஆளுகைத் திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தில் மின்னணு ரீதியில் வழக்குகளுக்குத் தீர்ப்பு, மின்னணு -ஆலோசனை மற்றும் இணக்க மேலாண்மை போன்றவைக்கான கூடுதல் தொகுதிகள் ஆகியவற்றைக் கொண்டு இருக்கும்.




## மேலும் 26 பச்சை மண்டலத் தளங்கள்

- ஆளில்லா விமானங்களுக்காக (ட்ரோன்) வேண்டி மேலும் 26 பச்சை மண்டலத் தளங்களுக்கு மத்திய அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- அனுமதியில்லையெனில் அந்த ட்ரோன்கள் மேலெழும்பக் கூடாது எனும் பெரு வரைமுறையின் கீழ் ட்ரோன்களின் செயல்பாட்டை எளிதாக்குவதற்காக வேண்டி இந்த ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.
- இதற்கு உள்துறை அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் ஆகியன ஒப்புதல் அளித்துள்ளன.

- முன்னதாக ஆறு பச்சை மண்டலத் தளங்களுக்கு அந்த அமைச்சகம் ஒப்புதல் அளித்திருந்தது.
- இந்த அங்கீகரிக்கப்பட்ட தளங்கள் இப்போது டிஜிட்டல் ஸ்கை தளத்தில் (Digital Sky Platform) இடம் பெறும்.
- அதன் பிறகு, அனைத்துத் தனிப்பட்ட அடையாள எண் வைத்திருப்பவர்களுக்கும் இணைய வழியில் உடனடியாக பறப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

***புதிய பசுமை மண்டலத் தளங்கள்***

- அதிகபட்சமாக உத்தரப் பிரதேசத்தில் 8 தளங்கள்
- ஜார்க்கண்டில் 6 தளங்கள்
- சத்தீஸ்கரில் 4 தளங்கள்
- தெலுங்கானாவில் 2 தளங்கள்
- தமிழ்நாடு, ஆந்திரா, மேகாலயா, குஜராத், ஒடிசா மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் தலா ஒரு தளம்.

## பிரதான் மந்திரி உர்ஜா கங்கைத் திட்டம்

- பிரதமர் அவர்கள் நீர்மப் பெட்ரோலிய வாயு (LPG) இறக்குமதி முனையத்தை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.
- இது 348 கிலோ மீட்டர் நீளம் கொண்ட தோப்கி-துர்காபூர் இயற்கை வாயு குழாய்த் தொடர் பிரிவாகும்.
- இது பிரதான் மந்திரி உர்ஜா கங்கைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- மொத்தமாக 2540 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்தக் குழாய்த் தொடரானது உத்தரப் பிரதேசம் முதல் ஒடிசா வரை கட்டமைக்கப்பட்டு வருகின்றது.
- தற்பொழுது இந்தத் திட்டத்தில் மேற்கு வங்க மாநிலமும் சேர்க்கப்பட்டுள்ளது.
- இது அடுத்த 2 ஆண்டில் வாரணாசியில் உள்ள குடும்பங்களுக்கும் அதற்கு அடுத்த ஆண்டில் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் (மாநிலங்களில்) வாழும் லட்சக் கணக்கான குடும்பங்களுக்கும் குழாய் வழியிலான சமையல் எரிவாயுவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

***தொலைவு வாரியான பகிர்வு***

- உத்தரப் பிரதேசமானது 338 கிலோ மீட்டர் நீளம் கொண்ட எரிவாயுக் குழாய்த் தொடரைப் பெறுகின்றது.
- பீகார் மாநிலமானது 441 கிலோ மீட்டர் நீளம் கொண்ட எரிவாயுக் குழாய்த் தொடரைப் பெறுகின்றது.
- ஜார்க்கண்ட் ஆனது 500 கிலோ மீட்டர் நீளம் கொண்ட எரிவாயுக் குழாய்த் தொடரைப் பெறுகின்றது.
- மேற்கு வங்க மாநிலமானது 542 கிலோ மீட்டர் நீளம் கொண்ட எரிவாயுக் குழாய்த் தொடரைப் பெற உள்ளது.
- ஒடிசா மாநிலமானது 718 கிலோ மீட்டர் நீளம் கொண்ட குழாய்த் தொடரின் மூலம் பயன் பெறுகின்றது.

## ஐஎன்எஸ் விராத் உடைப்பு

- இந்திய உச்ச நீதிமன்றமானது ஐஎன்எஸ் விராத் கப்பல் மேலும் உடைக்கப்படுவதற்குத் தடை விதித்துள்ளது.
- என்விடெக் கடல்சார் ஆலோசக நிறுவனமானது ஐஎன்எஸ் விராத் போர்க் கப்பலைப் பெற்று, அதனைக் கடல்சார் அருங்காட்சியமாக மாற்ற முடிவு செய்திருந்தது.
- இது 1986 ஆம் ஆண்டில் ஐக்கிய இராஜ்ஜியத்திடமிருந்துப் பெறப்பட்டது.
- இதற்கு முன்பு, ஐஎன்எஸ் விராத் ஆனது அந்த நாட்டின் ராயல் கடற்படையில் எச்எம்எஸ் ஹெர்ப்ஸ் எனும் பெயரில் பணியாற்றியது.
- இந்தக் கப்பலானது 2017 ஆம் ஆண்டில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டது.
- அதனைத் தொடர்ந்து இது உடைப்பதற்காக வேண்டி ஸ்ரீ ராம் குழுமத்திற்கு விற்கப் பட்டது.

## பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள்

- பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது.
- இதை ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்கான சங்கம் தெரிவித்துள்ளது.
- ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கமானது இந்தியாவின் ஓர் அரசு சாரா அமைப்பாகும்.
- புதுதில்லியில் தலைமையகத்தைக் கொண்டுள்ள இது 1999 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இந்தியத் தேர்தல் ஆணையத்தில் 2,360 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இதில் 97.50% அங்கீகரிக்கப்படாதவை ஆகும்.
- 2010 ஆம் ஆண்டில் 1,112 ஆக இருந்த பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டில் 2,301 ஆக உயர்ந்துள்ளது.
- பின்வருபவை அங்கீகரிக்கப்படாத கட்சிகளாகக் கருதப்படுகின்றன
    - புதிதாகப் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் அல்லது
    - மாநிலக் கட்சியாக மாற சட்டமன்றத் தேர்தல்களில் அல்லது பொதுத் தேர்தல்களில் போதுமான வாக்குகளைப் பெறாதவை அல்லது
    - பதிவு செய்யப்பட்டதிலிருந்து தேர்தலில் போட்டியிடாத கட்சிகள்.
- பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்தால் மட்டுமே ஓர் அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சியானது ஒரு தேசியக் கட்சியாக அல்லது ஒரு மாநிலக் கட்சியாக இருக்கலாம்.

## சாக்சம் தளம்

- தொழில்நுட்பத் தகவல், முன்கணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுவானது சாக்சம் என்ற வேலைவாய்ப்புக்கான தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது MSMEக்களுக்குத் தேவைப்படும் திறன்சார் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது இடைத்தரகர்கள் மற்றும் தொழிலாளர் ஒப்பந்தக்காரர்களை அகற்ற உதவும்.
- 'ஷ்ரமிக்ஸ்' என்பவர்களுக்கான (தொழிலாளர்கள்) திறன் அட்டைகளை உருவாக்க இந்தத் தளம் உதவும்.

## கடற்பாசி சாகுபடித் திட்டம்

- தொழில்நுட்பத் தகவல், முன்கணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுவானது (Technology Information, Forecasting and Assessment Council) ஒரு கடற்பாசி சாகுபடித் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- கடற்பாசிகளின் வணிக ரீதியான விவசாயத்தையும் அதன் செயலாக்கத்தையும் ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கடற்பாசி சாகுபடியானது கெல்ப் விவசாயம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இது கடற்பாசியைப் பயிரிட்டு அறுவடை செய்யும் ஒரு முறையாகும்.

## திவ்ய-த்ரிஷ்டி 2021

- "திவ்ய-த்ரிஷ்டி 2021" என பெயரிடப்பட்ட இந்திய ராணுவத்தின் தேசியக் கருத்தரங்கு மற்றும் இணைய வழி வகுப்பு சமீபத்தில் நடத்தப்பட்டது.
- இதை நிலவழியிலான போர் ஆய்வுகளுக்கான மையம் ஏற்பாடு செய்தது.
- இது 'பல்வேறு தளத்திலான நடவடிக்கைகள்: எதிர்கால முரண்பாடுகள்' (Multi-Domain Operations: Future of Conflicts) என்ற தலைப்பில் நடத்தப் பட்டது.

## மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலாளர்கள் குறித்த தரவு

- நாடு முழுவதும் மொத்தம் 66,692 மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலாளர்கள் (Manual Scavengers) அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
- அதிக எண்ணிக்கையில் மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலாளர்கள் உத்தரப் பிரதேசத்தில் (37,379) அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
- இதற்கு அடுத்து மகாராஷ்டிராவில் 7378 தொழிலாளர்களும் உத்தரகாண்ட்டில் 6170 தொழிலாளர்களும் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.
- கடந்த 5 ஆண்டுகளில் சாக்கடைகள் மற்றும் கழிவுநீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்யும் போது ஏறத்தாழ 340 தொழிலாளர்கள் இறந்துள்ளனர்.
- மொத்த இறப்புகளில் 75% இறப்புகள் உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, தில்லி, மகாராஷ்டிரா, குஜராத், ஹரியானா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் பதிவாகி உள்ளன.
- உத்தரப் பிரதேசம் (52), தமிழ்நாடு (43) மற்றும் தில்லி (36) ஆகியவை இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளன.
- மகாராஷ்டிராவில் 34 இறப்புகளும் ஹரியானா மற்றும் குஜராத்தில் தலா 31 இறப்புகளும் பதிவாகியுள்ளன.

## மாநிலங்களவை உறுப்பினர் பதவி துறப்பு

- திரிணாமுல் காங்கிரசைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான தினேஷ் திரிவேதி அவர்கள் மாநிலங்களவையில் தனது பதவித் துறப்பை அறிவித்துள்ளார்.
- 2019 ஆம் ஆண்டில் பாரக்பூர் மக்களவைத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட பின்பும் கூட இவர் மாநிலங்களவை உறுப்பினர் ஆனார்.

## 2017-2019 காலகட்டத்தில் பயிர்கள் இழப்பு

- இந்தியாவானது 18.176 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் மிகப்பெரிய அளவிலான பயிர்கள் இழப்பினைச் சந்தித்து இருக்கின்றது.
- இது மொத்த நிகர அளவில் பயிரிடப்பட்ட பகுதியில் 8.5% என்ற அளவில் பாதிக்கப் பட்டுள்ளது.
- பயிர்கள் இழப்பானது 2017 முதல் 2019 வரையிலான காலகட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக நிகழ்ந்துள்ளது.
- மொத்த இழப்புகளில், ஏறத்தாழ 10.68 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பானது 2019 ஆம் ஆண்டில் மட்டும் பாதிப்படைந்துள்ளது.
- இந்தத் தரவின்படி, வெள்ளம் ஏற்படக் கூடிய மாநிலங்களான பீகார், அசாம், உத்தரப் பிரதேசம் ஆகியவை மிகக் கடுமையான வெள்ளத்தைச் சந்தித்துள்ளன.
- மிகக் கடுமையான வெள்ளமானது கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலும் நிகழ்ந்துள்ளது.
- இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிடையே மத்தியப் பிரதேசமானது மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.
- இந்த மாநிலங்கள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சுழிய ரீதியிலான அளவிலேயே பயிர்கள் இழப்பைப் பதிவு செய்து இருந்தன.
- ஆனால் 2019 ஆம் ஆண்டில் மட்டும் அவை 6.047 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் அதிக இழப்பைச் சந்தித்துள்ளது.

## இந்தியாவின் முதலாவது அழுத்தப்பட்ட இயற்கை வாயுவினால் இயக்கப் படும் (CNG) இழுவை இயந்திரம்

- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரான நிதின் கட்கரி அவர்கள் இந்தியாவின் முதலாவது CNG இழுவை இயந்திரத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இது வருடத்திற்கு 1 இலட்சம் மதிப்பிலான எரிபொருள் செலவை மிச்சப்படுத்த விவசாயிகளுக்கு உதவ இருக்கின்றது.
- இது அமைச்சரின் சொந்த டீசல் இழுவை இயந்திரம் ஆகும். இதை அவர் 2012 ஆம் ஆண்டில் வாங்கி உள்ளார்.
- இது Rawmatt Techno Solutions மற்றும் Tomasetto Achille India ஆகிய நிறுவனங்களினால் கூட்டாக CNG இழுவை இயந்திரமாக மாற்றப் பட்டுள்ளது.




## ட்ரோபெக்ஸ் – 21 பயிற்சி

- ❖ கட்டுப்பாட்டக நிலையிலான செயல்பாட்டுத் தயார் நிலைப் பயிற்சி என்பது இந்தியக் கப்பற்படையின் ஒரு மிகப்பெரிய பயிற்சியாகும்.
- ❖ இது தற்போதைய புவி-உத்திசார் சூழலமைப்பில் சிக்கலான பல பரிமாணச் சூழலமைப்பில் இந்தியக் கடற்படையின் போர்த் தயார் நிலையைச் சோதனை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றது.
- ❖ முதலாவது ட்ரோபெக்ஸ் பயிற்சியானது 2005 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

## வணிக நம்பிக்கைக் குறியீடு

- ❖ இதை தில்லியைத் தளமாகக் கொண்ட ஒரு பொருளாதாரச் சிந்தனைக் குழுவான தேசியப் பயன்பாட்டுப் பொருளாதார ஆராய்ச்சிக் குழுவானது உருவாக்கியுள்ளது.
- ❖ இக்குறியீட்டின்படி, நடப்பு நிதியாண்டின் இரண்டாவது மற்றும் மூன்றாம் காலாண்டில் வணிக நம்பிக்கையானது 29.6 சதவீதம் உயர்ந்தது.
- ❖ இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் கோவிட்-19 தடுப்பூசிகள் வெளியிடப்பட்டதன் காரணமாக இந்த உயர்வு ஏற்பட்டது.

## நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் குடியிருப்புப் பள்ளிகள்

- ❖ நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களைக் கௌரவிக்கும் விதமாக, சமக்ரா சிக்சா என்ற திட்டத்தின் கீழ் நிதியளிக்கப்பட்ட உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு அவரது பெயரிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ இதற்கு நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் உறைவிடப் பள்ளிகள்/விடுதிகள் என்று பெயரிடப் படும்.
- ❖ இதுவரை, பல்வேறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு மொத்தம் 1063 உறைவிட வசதிகள் (383 உறைவிடப் பள்ளிகள் மற்றும் 680 விடுதிகள்) அனுமதிக்கப் பட்டுள்ளன.

- இவற்றில், 12 பள்ளிகளும், 19 விடுதிகளும் தேர்தலை எதிர்நோக்கி இருக்கும் மேற்கு வங்க மாவட்டத்தில் அமைந்துள்ளன.

## டிஜிட்டல் காப்பீட்டுத் திட்டங்கள்

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையமானது தங்களிடம் காப்பீடு வைத்துள்ளவர்களுக்கு டிஜிலாக்கரில் டிஜிட்டல் காப்பீட்டுத் திட்டங்களை வழங்குமாறு காப்பீடு வழங்கும் நிறுவனங்களை கேட்டுக் கொண்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது செலவினத்தைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல் காப்பீட்டுக் கோரிக்கைத் தீர்வுச் செயல்முறையை விரைவுபடுத்தவும் வேண்டி உதவ இருக்கின்றது.
- டிஜிலாக்கர் என்பது மத்திய அரசினால் தொடங்கப்பட்ட டிஜிட்டல் இந்தியா என்ற திட்டத்தின் கீழ் உள்ள ஒரு முன்னெடுப்பாகும்.
- இதனைப் பயன்படுத்தி, குடிமக்கள் அசல் சான்றிதழ்களை வழங்குபவரிடமிருந்து டிஜிட்டல் வடிவில் செல்லத்தக்க வகையிலான அதிகாரப்பூர்வ ஆவணங்களை / சான்றிதழ்களைப் பெற முடியும்.

## விக்யான் ஜோதி திட்டத்தின் இரண்டாவது நிலை

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது விக்யான் ஜோதி என்ற திட்டத்தின் 2வது நிலையைத் தொடங்கியுள்ளது.
- இது பிப்ரவரி 11 அன்று அறிவியலில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் என்பதின் மீதான சர்வதேச தினக் கொண்டாட்டத்தின்போது தொடங்கப்பட்டது.
- இது அறிவியல் துறையில் பெண் குழந்தைகளுக்கு நாட்டத்தை ஏற்படுத்தி, தங்களது வாழ்க்கையைக் கட்டமைப்பதை ஊக்குவிப்பதற்காக என்று தொடங்கப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- இது STEM (Science, Technology, Engineering and Mathematics) என்ற முறையைக் கற்றுக் கொள்வதற்காக வேண்டி சிறப்பான குழந்தைகளுக்கான மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு நிலையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 50 ஜவஹர் நவோதயா வித்யாலயாக்களில் (JNV) வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றது.
- தற்பொழுது இது 2021-22 ஆம் ஆண்டிற்கு வேண்டி மேலும் 50 JNV-களுக்கு விரிவு படுத்தப் பட்டுள்ளது.

## மகாத்மா காந்தி தேசிய தோழமைத் திட்டம்

- திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகமானது சமீபத்தில் இந்தியாவின் அனைத்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இந்தத் திட்டம் முன்னதாக 69 மாவட்டங்களில் செயல்பட்டு வந்தது.
- இந்தத் திட்டத்தின் கீழ் உள்ள உறுப்பினர்கள் கல்வி நிபுணத்துவம் மற்றும் தொழில் நுட்பத் திறன் ஆகியவற்றைப் பெறுவார்கள்.
- இது இரண்டு ஆண்டு கால அளவிலான திறன் பெறும் திட்டமாகும்.

- இதில் இணைவோர் 21 முதல் 30 வரையிலான வயதிற்குள் இருக்க வேண்டும்.
- இது சங்கல்ப் என்ற திட்டத்தின் கீழ் வடிவமைக்கப் பட்டுள்ளது.

## ராஷ்டிரிய சமஸ்கிருத மஹோத்ஸவ்

- மேற்கு வங்கத்தில் 11வது ராஷ்டிரிய சமஸ்கிருத மஹோத்ஸவ் துவக்கி வைக்கப் பட்டது.
- இது மத்தியக் கலாச்சார அமைச்சகத்தின் ஒரு முதன்மைத் திட்டமாகும்.
- இது “ஏக் பாரத் ஸ்ரேஷ்தா பாரத்” என்ற திட்டத்தின் கீழ், 2015 ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது.
- இது வேற்றுமையில் ஒற்றுமை என்ற கருத்தைக் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வணிக சணல் விதை விநியோகத் திட்டம்

- மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி அவர்கள் வணிக சணல் விதை விநியோகத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்திய சணல் நிறுவனம் மற்றும் தேசிய விதைக் கழகம் ஆகியவற்றுக்கிடையே கையெழுத்திடப் பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னணியில் இது தொடங்கப் பட்டது.
- 2021-22 ஆம் ஆண்டில் 1 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிலான சான்றளிக்கப்பட்ட சணல் விதைகளை வணிக ரீதியாக விநியோகிக்க இந்த 2020 ஆம் ஆண்டின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கோருகிறது.
- இந்தியாவில் தங்க இழைப் புரட்சி சணல் உற்பத்தியுடன் தொடர்புடையது.

## இ-சவானி தளம்

- இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் இ-சவானி தளத்தை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- இதைப் பயன்படுத்தி, கன்டோன்மென்ட் பகுதிகளில் வசிப்பவர்கள் குடிமைப் பிரச்சினைகள் தொடர்பாக தங்கள் புகார்களைப் பதிவு செய்யலாம்.
- கன்டோன்மென்ட் வாரியமானது ஒரு குடிமை நிர்வாக அமைப்பாகும்.
- இது இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- கன்டோன்மென்ட் சட்டம் - 2006 என்ற சட்டத்தின் படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அலுவல் ரீதியான உறுப்பினர்கள் மற்றும் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரால் இந்த வாரியமானது அமைக்கப் பட்டுள்ளது.

## தனியார்மயமாக்கலுக்காக திருத்தங்கள்

- பொதுத் துறை வங்கிகளின் (PSB) தனியார்மயமாக்கல் வசதிக்காக பின்வரும் 2 சட்டங்களின் மீது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.
  - வங்கியியல் நிறுவனங்கள் (நிறுவனங்களின் கையகப்படுத்துதல் மற்றும் மாற்றம்) சட்டம், 1970 மற்றும்

- வங்கியியல் நிறுவனங்கள் (நிறுவனங்களின் கையகப்படுத்துதல் மற்றும் மாற்றம்) சட்டம், 1980

- இந்த 2 சட்டங்கள் 2 நிலைகளில் வங்கிகளின் தேசியமயமாக்கத்திற்கு வழிவகை செய்துள்ளன.
- தற்பொழுது PSB வங்கிகளை தனியார்மயமாக்கல் செய்வதற்காக இந்தச் சட்டத்தின் விதிகள் மாற்றப்பட உள்ளன.

## பே ஜல் சர்வேக்சன்

- மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் சோதனை அடிப்படையிலான பே ஜல் சர்வேக்சன் என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இது ஜல் ஜீவன் திட்டம் – நகர்ப்புறம் என்பதின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- இது சமமான நீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காகவும் கழிவு நீரை மீண்டும் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காகவும் நகரங்களில் மேற்கொள்ளப்பட உள்ளது.
- மேலும் இது நீர் நிலைகளை அடையாளம் காணவும் உதவ இருக்கின்றது.
- இந்த சர்வேக்சன் ஆனது பட்லாபூர், ஆக்ரா, சுரு, புவனேஸ்வர், மதுரை, கொச்சி, பாட்டியாலா, சூரத், ரோத்தக் மற்றும் தும்கூர் ஆகிய 10 நகரங்களில் தொடங்கப்பட உள்ளது.

## கணக்கெடுப்புகளுக்கான மென்பொருள் பயன்பாடுகள்

- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சரான சந்தோஷ் கங்வார் அவர்கள் ஐந்து அகில இந்தியக் கணக்கெடுப்புகளுக்கான மென்பொருள் பயன்பாடுகளை வெளியிடவுள்ளார்.
- இதில் புலம்பெயர்ந்தோர் மற்றும் வீட்டு வேலை செய்வோர்களின் தரவுகளும் அடங்கும்.
- ஐந்து அகில இந்தியக் கணக்கெடுப்புகளுக்குரிய கேள்விகளையும், நெறிமுறைக் கையேடுகளையும் அமைச்சர் வெளியிடுவார்.
- இந்த அகில இந்திய ஐந்துக் கணக்கெடுப்புளும்
    - புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்
    - வீட்டுவேலை செய்வோர்கள்
    - தொழில் வல்லுநர்களால் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு
    - போக்குவரத்து துறையில் உருவாக்கப்படும் வேலைவாய்ப்பு மற்றும்
    - காலாண்டு அடிப்படையிலான நிறுவன வேலைவாய்ப்புக் கணக்கெடுப்பு ஆகியவற்றை உள்ளடக்கும்.

## டிஜிட்டல் நுண்ணறிவுப் பிரிவு

- தகவல் தொடர்பு அமைச்சகமானது டிஜிட்டல் நுண்ணறிவுப் பிரிவை அமைக்க முடிவு செய்துள்ளது.
- UCC (unsolicited commercial communication) மற்றும் நிதி மோசடி வழக்குகள், குறிப்பாக

டிஜிட்டல் கொடுப்பனவுகளில் வழங்கப்படும் புகார்களைக் கையாள இது ஒரு முதன்மை அமைப்பாக செயல்படும்.

- டிஜிட்டல் நுண்ணறிவு பிரிவைத் தவிர, மோசடி நிர்வாகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பிற்கான தொலைத் தொடர்பு தகவல் ஆய்வு அமைப்புகள் 22 உரிமை சேவைப் பிரிவுகள் அளவில் அமைக்கப்படும்.
- இது தொலைத் தொடர்பு வர்த்தக தகவல் தொடர்பு வாடிக்கையாளர் விருப்பத் தேர்வுகள் விதிமுறைகள் 2018 (TCCCPR - Telecom Commercial Communications Customer Preferences Regulations 2018) என்ற விதிமுறைகளின் கீழ் கண்டிப்பான இணக்கத்தையும் உறுதி செய்யும்.
- இந்தியாவில் UCC அமைப்பை ஒழுங்குபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு திருத்தப் பட்ட ஒழுங்குமுறைக் கட்டமைப்பை, தொலைத்தொடர்பு வர்த்தக தகவல் தொடர்பு வாடிக்கையாளர் விருப்பத் தேர்வுகள் மீதான விதிமுறைகள் வழங்குகிறது.

## மகாபாஹு-பிரம்மபுத்ரா திட்டம்

- பிரதமர் அசாமில் 'மகாபாஹு-பிரம்மபுத்ரா' திட்டத்தை இணையவழியில் தொடங்கி வைத்தார்.
- ரோ-பாக்ஸ் கப்பல் நடவடிக்கைகளின் தொடக்கமானது மகாபாஹு-பிரம்மபுத்ரா திட்டத்தின் துவக்கத்தைக் குறிப்பிடுகிறது.
- ரோ-பாக்ஸ் கப்பல் நடவடிக்கைகள் நீமதிகாட் & மஜூலி, துப்ரி-ஹட்சிங்கிமாரி மற்றும் வடக்கு-தெற்கு குவஹாத்தி ஆகிய இடங்களுக்கு இடையே தொடங்கப்படும்.
- இந்த திட்டத்தின் கீழ் ஜோகிகோபாவில் உள்ள உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து நிலையத்தின் தொடக்கமும் அடங்கும்.
- மேலும் அவர் துப்ரி புல்பாரி பாலத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- அசாமில் உள்ள துப்ரியை மேகாலயாவில் உள்ள புல்பாரி, துரா, ரோங்கிராம் மற்றும் ரோங்ஜெங் ஆகியவற்றுடன் இணைக்கும் வகையில் பிரம்மபுத்ரா ஆற்றின் மீது இது கட்டப்படும்.
- அசாமில் மஜூலி பாலம் கட்டுவதற்காக வேண்டி அவர் பூமி பூஜையையும் செய்தார்.

## மாநிலங்களவையில் எதிர்க் கட்சித் தலைவர்

- மூத்த காங்கிரஸ் தலைவரான மல்லிகார்ஜுன கார்கே அவர்கள் மாநிலங்களவையின் எதிர்க் கட்சித் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இவர் 2014 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் மக்களவையில் காங்கிரஸ் கட்சின் மக்களவைத் தலைவராகச் செயல்பட்டார்.
- இப்பதவியில் இருக்கும் தற்போதைய தலைவரான குலாம் நபி ஆசாத்தின் பதவிக் காலமானது பிப்ரவரி 15 அன்று முடிவடைந்தது.




## இந்திய சைகை மொழி அகராதி

- மத்திய சமுக நீதி மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது இந்திய சைகை மொழி (Indian Sign Language - ISL) அகராதியின் மூன்றாவது பதிப்பை வெளியிட்டுள்ளது.
- இந்தப் புதிய பதிப்பானது தினசரி உபயோகப்படும் 10,000 சொற்கூறுகளைக் கொண்டிருக்கும்.
- மேலும் இது கல்வி, சட்டம், மருத்துவத் தொழில்நுட்பம், நிர்வாகம் மற்றும் விவசாயச் சொற் கூறுகள் ஆகிய பலவற்றையும் உள்ளடக்கி இருக்கும்.
- ISL அகராதியின் இரண்டாவது பதிப்பானது 6,000 சொற்கூறுகளுடன் 2019 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது.
- இதன் முதலாவது பதிப்பானது 3000 சொற் கூறுகளுடன் 2018 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது.

## 6வது மண் வள (ஆரோக்கிய) அட்டை தினம்

- ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 19 அன்று இந்தியாவானது மண் வள அட்டை தினத்தை அனுசரிக்கின்றது.
- இது மண் வள அட்டைத் திட்டம் தொடங்கப்பட்டதை அனுசரிப்பதையும் இத்திட்டத்தில் பயன்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டானது இந்தத் திட்டம் தொடங்கப் பட்டதின் 6வது ஆண்டைக் குறிக்கின்றது.
- பிரதமர் அவர்கள் 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 அன்று மண் வள அட்டைத் திட்டத்தை இராஜஸ்தானில் உள்ள சூரத்கார்க்கில் தொடங்கி வைத்தார்.




## "மின்மயமாக்கம் நோக்கிய பிரச்சாரம்"

- மத்திய சாலைப் போக்குவரத்து நெடுஞ்சாலைத் துறை அமைச்சரான நிதின் கட்காரி அவர்கள் "மின்மயமாக்கம் நோக்கிய பிரச்சாரத்தை" தொடங்கி வைத்தார்.
- இந்தப் பிரச்சாரமானது மின் வாகனங்கள் மின்னேற்றுக் கட்டமைப்புகளின் பயன்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.
- மேலும் இந்தப் பிரச்சாரமானது இந்தியா முழுவதும் மின்சாரப் போக்குவரத்து மற்றும் மின்சாரச் சமையல் ஆகியவை குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த இருக்கின்றது.



## சுற்றுப்புறத்தை மேம்படுத்துதல் தொடர்பான சவால்

- மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது சுற்றுப் புறத்தை மேம்படுத்துதல் தொடர்பான சவாலிற்காக வேண்டி 25 நகரங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இது பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் செயல்படவுள்ளது.
- இது ஒரு 3 ஆண்டு கால முன்னெடுப்பாகும்.
- இது பொது இடங்கள், போக்குவரத்து, சுற்றுப்புறத் திட்டமிடல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு என்று ஒரு சோதனை முயற்சியாக இந்திய நகரங்கள் மற்றும் அதன் பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இது நகர நிறுவனங்களிடையே தரவு மேலாண்மை மற்றும் ஆரம்பக் கால குழந்தை நல சேவைகள் மற்றும் வசதிகள் ஆகியவற்றை அணுகுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்திய நகரங்களிடையே குழந்தைகளின் ஆரம்ப காலச் சூழலை மையமாகக் கொண்ட அணுகுமுறை குறித்து பிரச்சாரம் செய்கின்றது.

## 100% நேரடிப் பணமற்ற முறையில் சுங்கக் கட்டண வசூல்

- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது நாடு முழுவதும் உள்ள தேசிய நெடுஞ்சாலை சுங்கக் கட்டண வசூலிப்பகங்களில் 100% நேரடிப் பணமற்ற முறையிலான சுங்கக் கட்டண வசூலை வெற்றிகரமாக எட்டியுள்ளது.
- தேசிய நெஞ்சாலைகளில் உள்ள கட்டண வசூலிப்பகங்களிடையே இருக்கும் அனைத்து சாலைகளும் 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 16 ஆம் தேதி முதல் “ஃபாஸ்டேக்” சாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- தற்பொழுது வரை நாட்டின் மொத்த “ஃபாஸ்டேக்” அணுகலானது 87 சதவீதத்தை எட்டியுள்ளது.

## மாநில இட ஒதுக்கீட்டு முடிவுகளில் மத்திய அரசின் பங்கு

- மாநில அரசு வேலைகள் மற்றும் சேர்க்கைகளில் குறிப்பிட்ட சாதிகள் அல்லது சமூகங்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக தமிழக அரசு எடுத்த முடிவுகளில் தனக்கு எந்தப் பங்கும் இல்லை என்று மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.
- மத்திய அரசானது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், எஸ்.சி மற்றும் எஸ்.டி சட்டம் - 1993' (மாநிலத்தில் உள்ள கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு அல்லது அரசு வேலைகளில் வேலைவாய்ப்பு வழங்குதல்) என்ற சட்டத்தின் செல்லுபடித்தன்மையை எதிர்த்து தாக்கல் செய்த மனுவின் மீது இந்தப் பதிலை அளித்துள்ளது.
- இந்த சட்டம் மாநிலத்தில் 69% இடஒதுக்கீட்டை வழங்குகிறது.

*மத்திய அரசின் நிலைப்பாடு*

- சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்புகளின் மாநிலப் பட்டியலில் எந்தவொரு சாதி / சமூகத்தையும் சேர்ப்பது அல்லது விலக்குவது என்பது மாநில அரசின் விருப்பமாகும், எனவே இந்த விவகாரத்தில் இந்திய அரசுக்கு எந்தப் பங்கும் இல்லை.

- இது 2018 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு (102வது திருத்தம்) சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்புகளுக்கான மாநிலப் பட்டியலிலும் மற்றும் மத்தியப் பட்டியலிலும் சாதிகள் மற்றும் சமூகங்களைச் சேர்ப்பது அல்லது விலக்குவதற்கான நடைமுறையில் உள்ள வேறுபாட்டை விவரிக்கிறது.
- சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்புகளை அடையாளம் கண்டு குறிப்பிடும் அதிகாரமானது மத்தியப் பட்டியலைப் பொறுத்தவரையில் அது பாராளுமன்றத்திடம் மட்டுமே உள்ளது.
- 2018 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு (102வது திருத்தம்) சட்டத்தின் படி புதிதாக சேர்க்கப்பட்ட பிரிவு 342ஏ என்பதின் கீழ், ஒரு மாநில ஆளுநருடன் கலந்தாலோசித்த பின்னர் குடியரசுத் தலைவர் அந்த மாநிலத்தில் சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்பினைச் சேர்ந்த மக்களை அறிவிப்பார்.

## தூக்கிலிடப்படும் முதல் பெண்

- சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் முதல்முறையாக ஒரு பெண் தனது குடும்பத்தில் ஏழு பேரைக் கொன்றதாக குற்றம் சாட்டப் பட்டு தண்டிக்கப் பட்டுள்ளார்.
- இதை அனைத்து நீதிமன்றங்களும் விசாரித்து மரண தண்டனை விதித்தன.
- இந்தப் பெண் மதுரா சிறையில் தூக்கிலிடப்படுவார்.
- ஒரு பெண் குற்றவாளியைத் தூக்கிலிடுவதற்கு ஏற்ற வகையில் அனைத்து வசதிகளும் பொருந்திய ஒரே இந்தியச் சிறை மதுரா சிறை ஆகும் .
- இந்தப் பெண்கள் தூக்கு மேடையானது கிட்டத்தட்ட 150 ஆண்டுகளுக்கு முன்பு முதல் முறையாக மதுரா சிறையில் கட்டப்பட்டது.
- ஆனால் சுதந்திரத்திற்குப் பின்னர் எந்தப் பெண்ணும் அங்கு தூக்கிலிடப்படவில்லை.
- லக்னோவைச் சேர்ந்த ராம்ஸ்ரீ என்ற பெண்ணுக்கு 1998 ஏப்ரல் 6 ஆம் தேதி மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- ஆனால் அவரது மரண தண்டனை பின்னர் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

## ஹரித்வார் கும்பமேளா 2021

- இந்த ஆண்டு கும்பமேளா விழாவானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் ஏப்ரல் 30 வரை ஏற்பாடு செய்யப்படவுள்ளது.
- கடைசியாக கும்பமேளா விழாவானது மகர சங்கராந்தி தினம் முதல் உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹரித்வாரில் கொண்டாடப்பட்டது.
- இந்தியாவில் கும்பமேளா 12 வருட கால இடைவெளியில் நான்கு இடங்களில் நடத்தப் படுகின்றது.
- கும்பமேளாவில் 3 வகைகள் உள்ளன, அவை பூர்ண கும்ப மேளா, அர்த்த கும்ப மேளா மற்றும் மகா கும்ப மேளா ஆகும்.

## தேசிய பொம்மை கண்காட்சி

- முதல் தேசிய பொம்மை கண்காட்சியானது பிப்ரவரி 27 முதல் தொடங்கவுள்ளது.
- இந்த நிகழ்வின் போது, ஐ.ஐ.டி காந்தி நகரின் படைப்பாற்றல் கற்றல் மையமானது அதன் 75 பொம்மை படைப்புகளை இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தும்.
- படைப்பாற்றல் கற்றலுக்காக இந்த மையத்தை நடத்தும் நாட்டின் ஒரே இந்திய தொழில்நுட்பக் கழகம் ஐ.ஐ.டி காந்தி நகர் ஆகும்.
- இந்தப் பொம்மை கண்காட்சியை ஜவுளி அமைச்சகம் ஏற்பாடு செய்து வருகிறது.




## நிதி ஆயோக்கின் நிர்வாக ஆணையத்தின் 6வது சந்திப்பு

- பிரதமர் அவர்கள் நிதி ஆயோக்கின் நிர்வாக ஆணையத்தின் 6வது சந்திப்பிற்குத் தலைமை தாங்கினார்.
- இந்தச் சந்திப்பின் செயல் திட்டமானது விவசாயம், உள்கட்டமைப்பு, உற்பத்தி, மனித வள மேம்பாடு, கடைமட்ட அளவில் சேவை விநியோகம், சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது.
- மேலும் இந்த 6வது சந்திப்பில் ஒரு ஒன்றியப் பிரதேசமாக ஜம்மு காஷ்மீர் கலந்து கொண்டதுடன் சேர்த்து முதல்முறையாக லடாக்கும் இதில் கலந்து கொண்டுள்ளது.

## புதுச்சேரி அரசு ராஜினாமா

- புதுச்சேரி ஒன்றியப் பிரதேசத்தின் முதல்வரான V. நாராயணசாமி அவர்கள் தனது அமைச்சரவையின் ராஜினாமா கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார்.
- புதுச்சேரி ஒன்றியப் பிரதேச சட்டமன்றத்தில் காங்கிரஸ் தலைமையிலான அரசு தனது பெரும்பான்மையை (14 இடங்கள்) இழந்ததைத் தொடர்ந்து இந்த முடிவானது எடுக்கப் பட்டுள்ளது.
- ஒரு தொடர் பதவி விலகல்களை அடுத்து, ஆளும் அரசின் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது 12 ஆகக் குறைந்தது.
- 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 2 சட்டமன்ற உறுப்பினர்களும் 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மேலும் 2 சட்டமன்ற உறுப்பினர்களும் பதவி விலகினர்.

## NAFLD ஒருங்கிணைப்பிற்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்கள்

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமானது புற்றுநோய், நீரிழிவு நோய், இதய நோய் மற்றும் பக்கவாதம் ஆகியவற்றிற்கான தேசியத் திட்டத்துடன் (NAFLD) மதுசாரா கொழுப்புநிறை கல்லீரல் நோயை (NPCDCS) ஒருங்கிணைப்பதற்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

***NAFLD- Non-Alcoholic Fatty Liver Disease***

- இது கொழுப்பு நிறை கல்லீரலின் இரண்டாம் நிலைத் தூண்டுதல் இல்லாமல் கல்லீரலில் கொழுப்பு சேர்ந்துள்ள ஒரு இயல்பற்ற நிகழ்வாகும்.
- மேலும் இது வைரஸ் கல்லீரல் அழற்சி, மதுப் பயன்பாடு மற்றும் மருந்தளிப்பு ஆகிய நோய்களையும் உள்ளடக்கியுள்ளது.

***NPCDCS- National Programme for Prevention & Control of Cancer, Diabetes, Cardiovascular Diseases and Stroke***

- இந்தத் திட்டமானது முக்கியமான தொற்றா நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றிற்காக 2010 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது மனித வள மேம்பாடு, உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல், முன்கூட்டியே நோய் கண்டறிதல், சுகாதார ஊக்குவிப்பு, மேலாண்மை மற்றும் மேற்கோள் காட்டல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.

## இந்திரதனுஷ் திட்டம் 3.0

- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் அவர்கள் தீவிரமயமாக்கப்பட்ட இந்திரதனுஷ் திட்டம் 3.0 (IMI 3.0) என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளார்.
- இது நாடு முழுவதும் தடுப்பூசி வழங்குதலின் விரிவாக்கத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கோவிட்-19 கொள்ளை நோய் காலத்தில் தடுப்பூசி பெறுதலை தவற விட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் மீது IMI 3.0 கவனம் செலுத்தும்.
- நாட்டின் அனைத்துக் குடிமக்களுக்கும் மலிவு மற்றும் அணுகக் கூடிய வகையில் சுகாதாரச் சேவையை வழங்குவதற்காக இந்திரதனுஷ் திட்டம் 2014 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

## தன்னாட்சிக்கான குழு

- ஐ.ஐ.டி கவுன்சில் ஆனது தன்னாட்சிக்காக நான்கு குழுக்களை அமைத்துள்ளது.
- இந்த கவுன்சில் ஐ.ஐ.டி.களின் முடிவுகளை எடுக்கும் ஒரு முதன்மை அமைப்பாகும்.
- இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களில் நிதியளித்தல் முதல் தரப்படுத்தப்பட்ட தன்னாட்சி வரையிலான பல்வேறு விவகாரங்கள் மேல் இந்தக் குழு கவனம் செலுத்தும்.

## 'ஹுனார் ஹாத்' கண்காட்சியின் 26வது பதிப்பு

- புதுடில்லியில் 'ஹுனார் ஹாத்' கண்காட்சியின் 26வது பதிப்பை பாதுகாப்பு அமைச்சர் திறந்து வைத்துள்ளார்.

- இதன் கருத்துரு "உள்ளூர் தொழில்களுக்கு ஊக்கம்" (Vocal for Local) என்பதாகும்.
- இது சிறுபான்மை விவகார அமைச்சகத்தின் தலைமையில் மிகவும் திறமையான கைவினை கலைஞர்களுக்கு ஒரு பணித் தளத்தை வழங்குவதற்கான ஒரு முயற்சி ஆகும்.




## தீ பாதுகாப்பு நடவடிக்கை பயிற்சிக்கான திறன் மையம்

- இது உத்தரப் பிரதேசத்தின் பில்குவாவில் திறக்கப்பட்டது.
- இந்தியாவில் இவ்வாறான மையம் அமைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறை ஆகும்.
- இந்த வசதியை டெல்லியைச் சேர்ந்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் ஆய்வகமான 'தீ, வெடி பொருள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம்' உருவாக்கியுள்ளது.

## கடல்சார் இந்தியா உச்சி மாநாடு 2021

- கடல்சார் இந்தியா மெய்நிகர் உச்சி மாநாடு-2021 என்ற மாநாட்டைப் பிரதமர் துவக்கி வைக்க உள்ளார்.
- இது சர்வதேச பங்காளர் நாடுகளின் ஒத்துழைப்புடன் அறிவு மற்றும் வாய்ப்புகளின் பரஸ்பர பரிமாற்றத்திற்கான சக்தி வாய்ந்த தளமாக அமைய விரும்புகிறது.
- இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறை பங்காளர்களின் கூட்டமைப்பானது (FICCI - Federation of Indian Chambers of Commerce & Industry) இந்த உச்சி மாநாட்டிற்கான ஒரு தொழில் ரீதியான பங்காளர் ஆகும்.

## 8 புதிய பொம்மை உற்பத்தி தொகுதிகள்

- எட்டு புதிய பொம்மை உற்பத்தி தொகுதிகளை அமைத்திட அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இது இந்தியாவின் பாரம்பரிய பொம்மைத் தொழிலை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தொகுதிகள் மரம், அரக்கு, பனை ஓலை, மூங்கில் மற்றும் துணி ஆகியவற்றால் செய்யப்பட்ட பொம்மைகளைத் தயாரிக்கும்.

- பின்வரும் மாநிலங்களில் இந்தத் தொகுதிகள் ஏற்படுத்தப்படும்.
  - மத்தியப் பிரதேசம்: 3
  - ராஜஸ்தான்: 2
  - கர்நாடகா: 1
  - உத்தரப் பிரதேசம்: 1 மற்றும்
  - தமிழ்நாடு: 1.
- கர்நாடகா மற்றும் ஆந்திராவில் ஏற்கனவே 2 பொம்மைத் தொகுதிகள் உள்ளன.

### உலகின் மிகப்பெரிய விளையாட்டு அரங்கத்தின் மறுபெயரிடுதல்

- அகமதாபாத்தின் மோட்டேராவில் உள்ள உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானமானது நரேந்திர மோடி விளையாட்டரங்கம் என மறுபெயரிடப் பட்டது.
- புனரமைக்கப்பட்ட இந்த அரங்கம் முன்மொழியப்பட்டுள்ள பரந்த சர்தார் வல்லபாய் படேல் விளையாட்டரங்கத்தின் ஒரு பகுதியாகும்.
- குஜராத்தில் அகமதாபாத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள சபர்மதி ஆற்றங் கரையில் 220 ஏக்கர் பரப்பளவில் இந்த விளையாட்டரங்கம் அமைந்துள்ளது.

## சர்வதேசச் செய்திகள்

### உலகின் மிகப்பெரிய நடப்புக் கணக்கு உபரி

- 2020 ஆம் ஆண்டில் ஜெர்மனியை முந்தி உலகின் மிகப்பெரிய நடப்புக் கணக்கு உபரி கொண்ட நாடாக சீனா உருவெடுத்துள்ளது.
- சீனாவின் நடப்புக் கணக்கு உபரியானது 2020 ஆம் ஆண்டில் இருமடங்கு உயர்ந்து 310 பில்லியன் டாலர்களாக அதிகரித்துள்ளது.
- 158 பில்லியன் டாலர் நடப்பு கணக்கு உபரியுடன் ஜப்பான் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- உலகின் மிகப்பெரிய நடப்புக் கணக்குப் பற்றாக்குறை கொண்ட நாடாக அமெரிக்கா உள்ளது.

### இந்தியா மற்றும் அணுசக்தி ஒப்பந்தம்

- "அணு ஆயுதங்களை தடை செய்வதற்கான ஒப்பந்தத்தை" ஆதரிக்கவில்லை என்று இந்தியா சமீபத்தில் ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- ஆயினும், "ஆயுதக் குறைப்பு தொடர்பான மாநாட்டில் விரிவான அணு ஆயுதங்கள் மீதான ஒரு ஒப்பந்தம்" என்பது குறித்த பேச்சுவார்த்தைகளைத் தொடங்க இந்தியா தனது ஆதரவைக் காட்டியுள்ளது.
- இது ஒருமித்த கருத்து அடிப்படையில் செயல்படுகின்ற மற்றும் ஆயுதக் குறைப்பிற்காக பேசுகின்ற ஒரே பலதரப்பு மன்றமாகும்.

## உலகப் பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை

- ❖ இந்த அறிக்கையை ஐக்கிய நாடுகளின் வர்த்தக மற்றும் மேம்பாட்டு மாநாடு, ஐந்து ஐக்கிய நாடுகளின் பிராந்திய பொருளாதார ஆணையங்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை இணைந்து வெளியிட்டுள்ளது.
- ❖ இந்தியாவின் பொருளாதாரம் 2021 ஆம் ஆண்டில் 7.3 சதவீதமாக வளரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## ஆல்பா உலக ஒன்றியம்

- ❖ உலகம் முழுவதும் உள்ள கூகுள் பணியாளர்கள் அனைவரும் "ஆல்பா உலகம்" எனப்படும் ஒரு சர்வதேச தொழிற்சங்க ஒன்றியத்தை உருவாக்கியுள்ளார்.
- ❖ இந்தப் புதிய ஒன்றியமானது கூகுளின் தாய் நிறுவனமான ஆல்பஃபெட்டின் நினைவாகப் பெயரிடப் பட்டுள்ளது.
- ❖ இந்த ஒன்றியமானது சர்வதேச தொழிற்சங்க ஒன்றிய அமைப்பின் (Union Network International) ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

## ஜெயதி கோஷ்

- ❖ இந்திய மேம்பாட்டுப் பொருளாதாரவியல் வல்லுநரான ஜெயதி கோஷ் அவர்கள் 20 புகழ்பெற்ற ஆளுமைகளில் ஒருவராக உருவெடுத்துள்ளார்.
- ❖ இவர் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஒரு உயர்மட்ட ஆலோசனை வாரியத்தில் ஒருவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ❖ இந்த வாரியமானது கோவிட்-19 நோய்த் தொற்றுக்குப் பிந்தைய காலத்தில் தற்போதைய மற்றும் எதிர்கால சமூகப் பொருளாதாரச் சவால்களுக்கு எதிர்வினை ஆற்றுவதற்காக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளருக்குப் பரிந்துரைக்கும்.

## பழைமையான அணைகள் குறித்து ஐ.நா.வின் அறிக்கை

- ❖ இந்த அறிக்கை 'Ageing water infrastructure: An emerging global risk' என்ற தலைப்பில் அமைந்துள்ளது.
- ❖ இந்த அறிக்கையின்படி, 2050 ஆம் ஆண்டில் பூமியில் உள்ள பெரும்பாலான மக்கள் 20 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பல்லாயிரக்கணக்கான அணைகள் உள்ள பகுதிகளின் அருகில் வாழ்வார்கள்.
- ❖ உலகம் முழுவதும் 58,700 பெரிய அணைகள் உள்ளன.
- ❖ அவற்றில் பெரும்பாலானவை 1930 முதல் 1970 வரை 50 முதல் 100 ஆண்டுகள் கால ஆயுட்காலத்துடன் வடிவமைத்துக் கட்டப்பட்டுள்ளன.
- ❖ இந்தப் பகுப்பாய்வு இந்தியா, பிரான்ஸ், அமெரிக்கா, கனடா, ஜப்பான், ஜிம்பாபே மற்றும் ஸாம்பியா ஆகிய நாடுகளில் உள்ள பழைமையான அணைகள் குறித்த ஆய்வுகளையும் உள்ளடக்கியது ஆகும்.

- உலகின் மொத்த பெரிய அணைகளில் 55% அல்லது சுமார் 32,716 பெரிய அணைகள் இந்தியா, சீனா, தென் கொரியா மற்றும் ஜப்பான் என்ற நான்கு ஆசிய நாடுகளில் காணப்படுகின்றன.
- இந்தச் சிக்கல்கள் 25 நாடுகளில் எதிர்கொள்ளப் படுகிறது.
- 93% பெரிய அணைகள் இந்த 25 நாடுகளில் அமைந்து உள்ளன.

***இந்தியாவில் பழைமையான அணைகள்***

- இந்தியாவில் 1,115க்கும் மேற்பட்ட பெரிய அணைகள் 2025 ஆம் ஆண்டில் 50 ஆண்டுகள் பழைமையானதாக உருவெடுக்கும்.
- 2050 ஆம் ஆண்டில் நாட்டில் 4,250க்கும் மேற்பட்ட பெரிய அணைகள் 50 ஆண்டுகளுக்கும் மேலுள்ளதாக இருக்கும்.
- 64 பெரிய அணைகள் 2050 ஆம் ஆண்டில் 150 ஆண்டுகளுக்கும் மேலுள்ளதாக இருக்கும்.
- கேரளாவின் முல்லைப் பெரியார் அணை பழுதடைந்தால், சுமார் 3.5 மில்லியன் மக்கள் ஆபத்திற்குள்ளாவர்.
- இந்த அணை 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும்.

## புதிய மாறுபாட்டு ஆய்வுத் திட்டம்

- ஐக்கிய இராஜ்ஜியமானது ஒரு புதிய மாறுபாட்டு ஆய்வுத் தளத்தைத் தொடங்கி உள்ளது.
- இது ஐக்கிய இராஜ்ஜியத்தைச் சேர்ந்த உலகின் முன்னோடி மரபியல் நிபுணத்துவம் கொண்ட ஒரு தளமாகும்.
- இது கோவிட்-19 வைரஸின் புதிய மாறுபாட்டுத் திரளைக் கண்டறிவதற்காக வேண்டி குறைந்த தகவல்களைக் கொண்டுள்ள இன்ன பிற நாடுகளுக்கு உதவ இருக்கின்றது.
- இந்தத் தளமானது பிற நாடுகளினால் வழங்கப்பட்ட மாதிரிகள் குறித்து நேரடியாக பணியாற்றவோ அல்லது தேவைப்பட்டால் நிபுணத்துவ ஆலோசனை வழங்கவோ உள்ளது.
- தற்பொழுதைய தொகுப்பை ஐக்கிய இராஜ்ஜியத்துடன் பகிராத நாடுகள் உலக சுகாதார அமைப்பைத் தொடர்பு கொள்வதின் மூலம் உதவி பெறுவதற்கு வேண்டி விண்ணப்பிக்க முடியும்.

## பாலினச் சமத்துவம் குறித்த சர்வதேசக் கருத்தரங்கு

- இதன் இரண்டாம் பதிப்பு பெண்கள் தங்களை நீடித்தத் தொழில்முனைவோர்களாக மாற்றிக் கொள்வதற்கும் பெண்கள் மற்றும் திருநர்களின் பொருளாதாரத் தகுதி நிலையை வலுப்படுத்துவதற்குமான பல்வேறு வழிகளை வெளிக் கொணர உள்ளது.
- இந்த நிகழ்வின் மையக் கருத்துரு, "நீடித்த தொழில்முனைவுத் திறன் மற்றும் சமூக வணிகத்தில் பாலினம் : அதிகாரமளித்தலில் ஒரு இடைநிலை அழைப்பின் பங்கு" என்பதாக இருக்கும்.
- இது ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்புடன் இணைந்து ஒருங்கிணைக்கப்பட்டது.





## இந்தியா - பிரெஞ்சு சுற்றுச்சூழல் ஆண்டு

- ❖ மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் அவர்கள் பிரெஞ்சு சுற்றுச்சூழல் அமைச்சருடன் இணைந்து இந்தியா - பிரெஞ்சு சுற்றுச்சூழல் ஆண்டைத் தொடங்கியுள்ளார்.
- ❖ இது 2021-22 ஆம் ஆண்டு காலகட்டத்தில் பின்வரும் 5 கருத்துருக்களின் அடிப்படையில் செயல்பட உள்ளது.
  - ○ காலநிலை மாற்றம்
  - ○ சுற்றுச்சூழல் பாதுகாப்பு
  - ○ நீடித்த நகர்ப்புற வளர்ச்சி
  - ○ பல்லுயிர்ப் பெருக்கப் பாதுகாப்பு
  - ○ புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் ஆற்றல் செயல் திறனின் மேம்பாடு



## உலகின் புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்கள்

- இரண்டாவது வருடாந்திர உலகின் புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 30 அன்று கொண்டாடப்பட்டது.
- புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் குறித்த 2012 ஆம் ஆண்டின் லண்டன் பிரகடனத்தின் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப் படுகிறது.
- புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களை எதிர்த்துப் போராட வேண்டி இந்தியாவும் இதில் இணைந்துள்ளது.
- புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களானது வைரஸ்கள், புரோட்டோசோவா, பாக்டீரியா மற்றும் ஒட்டுண்ணிப் புழுக்கள் ஆகியவற்றால் ஏற்படும் வெப்பமண்டல நோய்த் தொற்றுகள் ஆகும்.
- எச்.ஐ.வி/எய்ட்ஸ், மலேரியா மற்றும் காசநோய் போன்ற முக்கிய நோய்களுடன் ஒப்பிடப் படும் போது இவை குறைவான முக்கியத்துவம் மற்றும் சிகிச்சை ஆகியவற்றைப் பெறும் நோய்கள் ஆகும்.
- இந்த நோய்கள் ஏழை நாடுகளில் வாழும் 1.7 பில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பாதிக்கின்றன.
- புருலி குடல் புண், நிணநீர் ஃபைலேரியாஸிஸ், ரேபிஸ், டெங்கு மற்றும் சிக்குன் குனியா போன்றவை புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களாகும்.




## கோவிட்-19 செயல்திறன் குறியீடு

- ஆஸ்திரேலியச் சிந்தனைக் குழுவான லோவி நிறுவனம் சமீபத்தில் ஒரு கோவிட்-19 மீதான "செயல்திறன் குறியீட்டை" வெளியிட்டுள்ளது.
- இக்குறியீட்டின்படி, கோவிட்-19 தொற்றுக்கு எதிராக சிறந்த செயல்திறன் கொண்ட நாடு நியூசிலாந்து ஆகும்.
- இதில் வியட்நாம் 2வது இடத்தைப் பிடித்துள்ளது.
- வியட்நாமை அடுத்து முறையே 3, 4 மற்றும் 5 ஆகிய இடங்களில் தைவான், தாய்லாந்து மற்றும் சைப்ரஸ் ஆகிய நாடுகள் உள்ளன.

- இந்தக் குறியீடு 98 நாடுகளின் கோவிட் -19 சார்ந்த செயல்திறனை அணுகியுள்ளது.
- இந்தக் குறியீட்டில் இந்தியா 86வது இடத்திலும் அமெரிக்கா 94வது இடத்திலும் உள்ளது.
- இந்தியாவின் அண்டை நாடுகளான இலங்கை 10வது இடத்திலும், மாலத்தீவு 25வது இடத்திலும், நேபாளம் 70வது இடத்திலும், பாகிஸ்தான் 69வது இடத்திலும், வங்கதேசம் 84வது இடத்திலும் உள்ளன.
- இந்தக் குறியீட்டின் இறுதி இடத்தில் பிரேசில் உள்ளது.

| RANK | COUNTRY | AVERAGE |
|---|---|---|
| 1 | New Zealand | 94.4 |
| 2 | Vietnam | 90.8 |
| 3 | Taiwan | 86.4 |
| 4 | Thailand | 84.2 |
| 5 | Cyprus | 83.3 |
| 6 | Rwanda | 80.8 |
| 7 | Iceland | 80.1 |

## ஸ்டார்ட் அப் இந்தியா தொடக்க நிறுவனங்களுக்கான நிதி

- ஸ்டார்ட் அப் இந்தியா தொடக்க நிறுவனங்களுக்கான நிதி என்ற ஒரு திட்டத்தை ரூ.945 கோடி அளவிலான நிதிய மூலதனத்துடன் அரசு அறிவித்துள்ளது.
- இது உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை மற்றும் தொழில் துறை மூலம் வெளியிடப்பட்டது.
- இது தயாரிப்புகளின் சோதனை, கருத்து ஆதாரம், சந்தை நுழைவு, மாதிரி தயாரித்தல் மற்றும் வணிகமயமாக்கல் ஆகியவற்றிற்காக வேண்டி தொடக்க நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமாகும்.

## பதிவுகளில் மிக மோசமான ஆண்டு

- சமீபத்தில் ஐக்கிய நாடுகள் உலகச் சுற்றுலா அமைப்பானது 2020 ஆம் ஆண்டை “பதிவானதில் மோசமான ஆண்டு” என்பதை உறுதி செய்துள்ளது.
- கோவிட் – 19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி செயல்படுத்தப் பட்ட சர்வதேசப் பயணத் தடைகளால் உலகச் சுற்றுலாவானது பெருமளவில் பாதிப்பு அடைந்துள்ளது.
- மேலும் கோவிட்-19 நோய்த் தொற்றுப் பிரச்சினையானது 100-120 மில்லியன் நேரடி சுற்றுலாத் துறை வேலைவாய்ப்புகளை ஆபத்தில் தள்ளியுள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது.

## அண்டார்டிகாவில் அரிய வகைத் தாது கண்டுபிடிப்பு

- ஜாரோசைட் என்ற ஒரு அரிய வகைக் கடல்சார் தாதுவானது அண்டார்டிகா பனி மண்டலத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இது அண்டார்டிகா பனி மண்டலத்தில் ஆழ் துளையிடுதலின் போது கண்டுபிடிக்கப் பட்டது.
- இதே போன்று செவ்வாயில் ஜாரோசைட்டின் இருப்பிற்கான ஒரு கோட்பாட்டிற்கு இது ஆதரவளிக்கின்றது.
- இந்தத் தாதுக்கள் செவ்வாயில் அடர்த்தியான படிவுகளை உருவாக்கும் திறனைக் கொண்டது.
- ஏனெனில் செவ்வாய் கோளானது அண்டார்டிகாவை விட அதிக அளவிலான தூசுக்களைக் கொண்டுள்ளது.

***ஜாரோசைட்***

- ஜாரோசைட் என்பது செவ்வாயில் உள்ள ஒரு தாதுவாகும்.
- இது புவியில் மிகவும் அரிதாகக் காணப்படுகின்றது.
- இது இரும்பு மற்றும் பொட்டாசியத்தின் ஒரு சல்பேட் ஆகும்.
- இந்தத் தாதுவானது நீர் மற்றும் அமிலச் சூழ்நிலைகளின் மூலம் உருவாகும் திறன் கொண்டது.
- இது "ஆப்பர்சூனிட்டி" என்ற ஒரு ஆய்வுக் கலன் மூலம் 2004 ஆம் ஆண்டில் செவ்வாயில் முதன்முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டது.
- இதர ஜாராசைட் தாதுக்களானது வெள்ளி, சோடியம், ஈயம் மற்றும் அம்மோனியம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- இந்தத் தாதுவானது முதன்முறையாக ஆகஸ்ட் பிரெய்த்தப்ட் என்பவரால் 1852 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

## ஐக்கிய அரபு அமீரகத்தின் (UAE) புதிய குடியுரிமைக் கொள்கை

- UAE ஆனது தனது புதிய குடியுரிமைக் கொள்கையை அறிவித்துள்ளது.
- அந்த அரசானது தேர்ந்தெடுக்கப்பட்ட (குறிப்பிட்ட) வெளிநாட்டவருக்கு குடியுரிமை வழங்க முடிவு செய்துள்ளது.
- தனது பொருளாதாரத்தில் அதிக அளவில் வெளிநாட்டவர்களைப் பங்கு கொள்ள வைக்கும் முதலாவது வளைகுடா அரபு நாடு UAE ஆகும்.
- இதற்கு முன்பு UAE ஆனது சில சிறப்பு நிகழ்வுகளில் சில வெளிநாட்டவர்களுக்குக் குடியுரிமையை வழங்கியுள்ளது.
- UAEக்குச் சேவையை அளிப்பதற்காக அவர்களுக்கு அந்நாட்டுக் குடியுரிமை வழங்கப் பட்டது.

## எடிசன் (EDISON) கூட்டிணைவு

- உலகப் பொருளாதார மன்றமானது (WEF) அத்தியாவசிய டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் அமைப்புக் கூட்டிணைவை (Essential Digital Infrastructure and Services Network - EDISON) தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.
- WEF ஆனது EDISON தளத்திற்குச் செயலகமாகவும் ஒரு தளமாகவும் செயல்படும்.
- இந்தக் கூட்டிணைவானது டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு உலக அளவில் மற்றும் சமமான முறையில் அணுகலை உறுதி செய்வதை நோக்கிப் பணியாற்ற இருக்கின்றது.

## நேபாள அரசாங்கத்தின் நீர்மின் திட்டம்

- நேபாளமானது கீழ் அருண் நீர்மின் திட்டத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை இந்தியாவின் சட்லஜ் ஜல் வித்யுத் நிகாம் என்ற நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது
- இந்த ஒப்பந்தம் கட்டுதல், சொந்தமாக்கிக் கொள்தல், இயக்குதல் மற்றும் உரிமையை மாற்றிக் கொடுத்தல் எனப்படும் BOOT என்ற மாதிரியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது (BOOT - Build, Own, Operate, and Transfer).
- இந்த திட்டத்தின் மூலம் 679 மெகாவாட் மின்சார உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.
- இது மாகாணம் 1 என்ற பகுதியின் போஜ்பூர் மற்றும் சங்குவாசபா மாவட்டங்களில் அமைந்திருக்கும்.

## 2020 ஆம் ஆண்டின் ஆக்ஸ்ஃபோர்டு இந்திச் சொல்

- ஆக்ஸ்ஃபோர்டு மொழிகளால் 2020 ஆம் ஆண்டின் இந்தி வார்த்தையாக 'ஆத்மநிர்பர்தா' என்ற வார்த்தை தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இது சுயச் சார்பு என்பதைக் குறிக்கிறது.
- இதற்கு முன் தேர்ந்தெடுக்கப்பட்ட முந்தைய இந்திச் சொற்கள் ஆதார் (2017), நாரி சக்தி (2018) மற்றும் சம்விதான் (2019) ஆகும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆக்ஸ்போர்டு இந்திச் சொல்லானது கடந்த ஆண்டின் நெறிமுறைகள், மனநிலை அல்லது சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் வகையில் தேர்வு செய்யப் பட்டு இருக்கிறது.

## மியான்மர் இராணுவப் புரட்சி 3.0

- மியான்மர் நாட்டின் இராணுவமானது பிப்ரவரி 1 அன்று புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றியது.
- 1948 ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியிடமிருந்து அந்த நாடு விடுதலையடைந்த பின்பு அந்த நாட்டின் வரலாற்றில் நிகழ்ந்த 3வது நிகழ்வு இதுவாகும்.
- 1962 ஆம் ஆண்டில், இராணுவமானது முதன்முறையாக மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றியது.
- அந்தப் புரட்சி 1974 ஆம் ஆண்டில் அந்நாட்டின் பெயரை "பர்மிய ஒன்றிய சோஷலிசக் குடியரசு" என்று அதிகாரப் பூர்வமாகப் பெயரை மாற்றியது.

- அதன் பிறகு 1988 ஆம் ஆண்டில், மியான்மரின் ஆயுதப் படையானது அந்நாட்டில் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியது.
- இந்த முறை அது அந்நாட்டின் அதிகாரப்பூர்வ பெயரை "பர்மிய ஒன்றியம்" என்று மாற்றியது.
- ஆனால் ஓராண்டு கழித்து, அப்போதைய ஆட்சியாளர் பர்மாவை மியான்மர் எனப் பெயர் மாற்றும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்.
- இது அந்நாட்டை "மியான்மர் ஒன்றியம்" என்றாக்கியது.

## நெப்டியூன் பிரகடனம்

- "மாலுமிகளின் நலம் மற்றும் கப்பல் பணியாளர் மாற்றம்" குறித்த நெப்டியூன் பிரகடனத்தில் உலக அளவில் 400ற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் இணைந்து கொண்டு இருக்கின்றன.
- இது கோவிட்-19 நோய்த் தொற்றால் ஏற்பட்ட கப்பல் பணியாளர் மாற்றம் குறித்த ஒரு பிரச்சினைக்கு கூடிய விரைவில் தீர்வு காண்பதை நோக்கிப் பணியாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் 4 முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு
  - மாலுமிகளை முக்கியப் பணியாளர்களாக அங்கீகரித்து, கோவிட் – 19 தடுப்பூசி வழங்குவதில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.
  - உயர்தர சுகாதார நெறிமுறைகளைச் செயல்படுத்துதல்.
  - கப்பல் பணியாளர் மாற்றங்களுக்கு வழி செய்வதற்காக வேண்டி கப்பல் செயற்பாட்டாளர்கள் மற்றும் சாசனங்களுக்கிடையே இருக்கும் ஒத்துழைப்பை அதிகரித்தல்.
  - மாலுமிகளுக்கான முக்கியக் கடல்சார் மையங்களுக்கிடையே இருக்கும் விமானச் சேவையை உறுதி செய்தல்.

## ஆசியா-பசிபிக் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் இணையவுள்ள ஐக்கிய ராஜ்ஜியம்

- ஐக்கிய ராஜ்ஜிய அரசாங்கமானது விரிவான மற்றும் முற்போக்கான டிரான்ஸ் - பசிபிக் கூட்டுறவில் சேரவுள்ளது.
- இது உலகின் மிகப்பெரிய சுதந்திர வர்த்தக கூட்டாண்மைகளுள் ஒன்றாகும்.
- இது பசிபிக் பகுதியில் வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் 11 பொருளாதாரங்களால் ஆனது.
- கடந்த ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி ஐக்கிய ராஜ்ஜியம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறியது.

## அரசு நிர்வாக ஆணையம் - மியான்மர்

- மியான்மரில் உள்ள இராணுவ ஆட்சியானது ஒரு புதிய அரசு நிர்வாக ஆணையத்தை ஏற்படுத்தியுள்ளது.
- இந்த நிர்வாக ஆணையமானது இராணுவத்தின் தலைமைத் தளபதியான மின் ஆங்க் ஹிலாய்ங் என்பவரால் தலைமை தாங்கப்படுகின்றது.

- இது மொத்தம் 11 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- இந்த 11 உறுப்பினர்களில் 8 உறுப்பினர்கள் இராணுவத்தைச் சேர்ந்தவர்களாவர்.

## உலகின் முதல் 'ஆற்றல் தீவு'

- உலகின் முதல் ஆற்றல் தீவை (Energy island) வடக்குக் கடலில் கட்டும் ஒரு திட்டத்திற்கு டென்மார்க் ஒப்புதல் அளித்துள்ளது.
- இது ஐரோப்பிய நாடுகளில் உள்ள மூன்று மில்லியன் குடும்பங்களின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமான பசுமை சக்தியை உற்பத்தி செய்து சேமிக்கும்.
- ஐரோப்பாவின் மின் கட்டங்களின் ஒருங்கிணைப்பை இந்த மையம் பலப்படுத்தும்.
- மேலும், இது புதுப்பிக்கத் தக்க வகை மின்சார உற்பத்தியை அதிகரிக்கும்.
- இது ஒரு காலநிலை-சமநிலை ரீதியில் அமைந்த ஐரோப்பாவிற்கு மிகவும் அவசியம் ஆகும்.




## உலக நீடித்த வளர்ச்சி மாநாடு 2021

- இந்தியப் பிரதமர் அவர்கள் 2021 ஆம் ஆண்டின் உலக நீடித்த வளர்ச்சி மாநாட்டை (World Sustainable Development - WSD) தொடங்கி வைத்தார்.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "நமது பொது எதிர்காலத்தை மீண்டும் வடிவமைத்தல் : அனைவருக்குமான பாதுகாப்பான சுற்றுச்சூழல்" என்பதாகும்.
- 2021 WSD மாநாடானது இந்தத் தலைமை மாநாட்டின் 20வது பதிப்பாகும்.
- இது ஆற்றல் மற்றும் வள மையத்தினால் நடத்தப்பட்டது.



## ஷாதூத் அணை ஒப்பந்தம்

- ❖ இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவை காபூலில் ஷாதூத் என்ற ஒரு அணையைக் கட்டமைப்பதற்காக ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
- ❖ இது ஆப்கானின் தலைநகரத்தில் குடிநீர் வசதியை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது ஆப்கானிஸ்தானின் 5 நதிநீர்ப் படுகைகளில் ஒன்றாகும்.




## டிரம்ப்பின் பதவி நீக்கம்

- ❖ அமெரிக்க செனட் ஆனது முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப்பின் 2வது பதவி நீக்கம் செல்லுபடியாகும் என்று அறிவித்துள்ளது.
- ❖ இந்த முதல் சோதனையானது இந்தத் தீர்மானத்தின் செல்லுபடித் தன்மையைக் குறிப்பதாகும்.
- ❖ இது டிரம்ப்பின் வழக்குரைஞர்கள் மற்றும் எதிர் ஜனநாயகக் கட்சியின் பதவி நீக்க மேலாளர்கள் ஆகியோருக்கிடையே நடைபெற்றது.

## அமான் பயிற்சி

- ❖ பாகிஸ்தான் கடற்படையானது கராச்சி கடற்கரையில் அமான் எனும் இராணுவ பயிற்சியை ஏற்பாடு செய்தது.
- ❖ அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இங்கிலாந்து, துருக்கி, ஈரான், இந்தோனேசியா உள்ளிட்ட 46 நாடுகள் இதில் பங்கேற்கின்றன.
- ❖ இந்தப் பயிற்சியானது கடல்சார் உள்கட்டமைப்பு மற்றும் வளங்களுக்கான எதிர் தந்திர உபாயங்கள், நுட்பங்கள் மற்றும் விதிமுறைகளை உருவாக்கி அதன் பிறகு பயிற்சி செய்ய முயல்கிறது.

## அமெரிக்கா – மெக்சிகோ எல்லை சுற்றுச்சுவர் திட்டம்

- முன்னாள் அதிபரான டொனால்டு ட்ரம்பினால் வெளியிடப்பட்ட ஒரு அவசரகால உத்தரவை ரத்து அமெரிக்க அதிபர் செய்துள்ளார்.
- இது அமெரிக்கா-மெக்சிகோ நாடுகளுக்கு இடையில் ஒரு எல்லை சுற்றுச் சுவரைக் கட்டமைப்பதற்காக வெளியிடப் பட்டது.
- 2019 ஆம் ஆண்டில் ட்ரம்ப் நிர்வாகமானது ஒரு நிர்வாக ஆணையில் கையெழுத்திட்டது.
- அந்த நிர்வாக ஆணையானது அமெரிக்கா-மெக்சிகோ நாடுகளுக்கு இடையில் ஒரு எல்லைச் சுற்றுச் சுவரைக் கட்டமைப்பதற்காக ஒரு தேசிய அவசர நிலையை அறிவித்தது.
- இந்தத் திட்டத்திற்கான நிதியளிப்பு தொடர்பாக சட்டம் இயற்றுபவர்களுடன் ஏற்பட்ட தொடர் மோதலைத் தொடர்ந்து இந்த அவசர நிலையானது அறிவிக்கப்பட்டது.




## நீடித்த மீன் வளம் மற்றும் மீன் வளர்ப்பிற்கான பிரகடனம்

- மீன்வளக் குழுவை (Committee on Fisheries-COFI) சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட 34வது அமர்வானது நீடித்த மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்பிற்கான முதலாவது பிரகடனத்திற்கு ஆதரவளித்துள்ளது.
- COFI-34 என்பது ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (UNFAO) மீன் வளக் குழுவின் 34வது அமர்வாகும்.
- இந்தப் பிரகடனமானது சட்ட விரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப் படாத மீன் பிடிப்பைத் தடுப்பதற்கான ஒரு வலுவான நடவடிக்கைக்கு அழைப்பு விடுக்கின்றது.
- மேலும் இது கோவிட்-19 நோய்த் தொற்றின் தாக்கங்களிலிருந்து மீண்டு வருவதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்துகின்றது.
- COFI-34 ஆனது 1995 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொறுப்புமிக்க மீன் பிடிப்பிற்கான நடத்தை விதிகளின் 25வது நினைவு ஆண்டைக் குறிக்கின்றது.
- இந்த விதியானது உலகம் முழுவதும் நீடித்த மீன்வளம் மற்றும் மீன் பிடிப்பை நோக்கிய ஒரு முக்கிய வழிகாட்டுக் கூறாகச் செயல்படுகின்றது.

## பாகிஸ்தான் போர்ப் பயிற்சி

- பாகிஸ்தான் இராணுவமானது சிந்து மாகாணத்தில் உள்ள தார் பாலைவனத்தில் ஒரு மாத கால அளவுள்ள ஒரு பயிற்சியை நடத்திக் கொண்டிருக்கின்றது.
- இது கடுமையான பாலைவனச் சூழலமைப்பில் பிரச்சினைக்கான தயார் நிலையை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஜனவரி 28 ஆம் தேதி அன்று தொடங்கி பிப்ரவரி 28 ஆம் தேதி வரை நடத்தப்படும் இந்தப் பயிற்சியின் குறியீட்டுப் பெயர் "ஜிதார்-உல்-ஹடீட்" என்பதாகும்.

## பதவி நீக்கத்திலிருந்து டிரம்ப் விடுவிப்பு

- அமெரிக்க செனட் சபையானது இரண்டாவது முறையாக பதவி நீக்கத்திலிருந்து முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்பை விடுவித்தது.
- பதவி நீக்கத் தீர்மான விசாரணை தொடங்கி 1 வார காலத்திற்குப் பின்பு, குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 7 உறுப்பினர்கள் உட்பட 57 செனட் உறுப்பினர்கள் மட்டுமே அவரை தண்டிப்பதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- அவரை குற்றவாளி என்று நிரூபிப்பதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு, 10 வாக்குகள் குறைவாக, 57-43 என்ற அளவில் வாக்குகள் பதிவாகின.
- 67 வாக்குகள் என்பது எதிர்காலத்தில் பதவியை வகிப்பதிலிருந்து அவரைத் தகுதி நீக்கம் செய்வதற்கு செனட் சபையை அனுமதிக்கும்.

## புதிய START அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்

- ரஷ்யாவுடனான "புதிய ஸ்டார்ட்" என்ற அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தை அமெரிக்கா ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.
- புதிய மூலோபாய ஆயுதக் குறைப்பு ஒப்பந்தமானது (New STrategic Arms Reduction Treaty) 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 8, அன்று முறையாக கையெழுத்தானது.
- ஒப்புதலுக்குப் பிறகு, இது 2011 ஆம் ஆண்டின் பிப்ரவரி 5 அன்று நடைமுறைக்கு வந்தது.
- புதிய START ஒப்பந்தமானது 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 5, அன்று காலாவதியாக இருந்தது.
- ஆனால் இரு தரப்புகளும் இதை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை நீட்டித்துள்ளன.

## விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு ஒப்பந்தம்

- மத்திய அமைச்சரவையானது இந்தியா மற்றும் மொரீஷியஸ் ஆகியவற்றிற்கிடையே விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு ஒப்பந்தம் என்ற ஒன்றில் கையெழுத்திடுவதற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இது இந்தியா மற்றும் மொரீஷியஸ் ஆகியவற்றிற்கிடையேயான ஒரு வகையான தடையில்லா வர்த்தக ஒப்பந்தமாகும்.
- இது இரு-வழி வணிகத்தை ஊக்கப்படுத்துவதற்காக விதிகளைத் தளர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கரிமம் குறைந்த புதிய வகை கான்கிரீட்

- ACC தயார் நிலை கான்கிரீட் நிறுவனமானது “EcoPact” என்ற பெயர் கொண்ட தனது கரிமம் குறைந்த புதிய வகை கான்கிரீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது உயர் செயல்பாடு, நீடித்த மற்றும் சுழல் கட்டமைப்பிற்கான ஒரு பசுமை கான்கிரீட் ஆகும்.
- இது முதல் நிலையில் மும்பை மற்றும் ஹைதராபாத்தில் அறிமுகப்படுத்தப் பட்டு உள்ளது.

## எபோலா திடீர்ப் பெருக்கம்

- கினியாவின் சுகாதார அமைச்சகமானது அந்நாடு எபோலா "தொற்றுநோய்க்கு" மத்தியில் இருப்பதாக அறிவித்துள்ளது.
- 2013-16 ஆம் ஆண்டில் வெடித்தத் தொற்றானது பெரும்பாலும் கினியா, சியரா லியோன் மற்றும் லைபீரியா ஆகிய நாடுகளில் 11,300 பேரைக் கொன்றது.
- எபோலா வைரஸ் ஆனது கடுமையான இரத்தப் போக்கு மற்றும் உறுப்புச் செயலிழப்பு ஆகியவற்றை ஏற்படுத்துகிறது.
- இது உடல் திரவங்களுடனான தொடர்பு மூலம் பரவுகிறது.

## தீவிரவாத எதிர்ப்பு மசோதா

- பிரெஞ்சு நாடாளுமன்றமானது இஸ்லாமிய தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் ஒரு முயற்சியாக தீவிரவாத எதிர்ப்பு மசோதாவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த மசோதாவானது மசூதிகள் மற்றும் மதம்சார் பள்ளிகளின் மீது அரசாங்கக் கண்காணிப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இது பலதார மணம் மற்றும் கட்டாயத் திருமணம் ஆகியவற்றிற்கு எதிரான வலுவான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உள்ளது.
- இந்த மசோதாவானது இஸ்லாமிய தீவிரவாதத்தை ஆராய்ந்துக் களைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் நோக்கத்துடன் உள்ள பிரான்ஸின் விரிவான முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.
- இது பிரெஞ்சு நாட்டின் விழுமியங்களின் மீதான மரியாதையை ஊக்கப்படுத்த உள்ளது.

## காணொலி வாயிலான சார்க் சந்திப்பு

- இந்தியாவானது தெற்காசிய பிராந்தியக் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பு நாடுகளுடன் (SAARC) காணொலி வாயிலாக சுகாதாரச் செயலாளர் மட்டத்திலான ஒரு சந்திப்பை நடத்த உள்ளது.
- இந்தச் சந்திப்பின் போது உறுப்பு நாடுகள் தற்பொழுது நிலவி வரும் கோவிட்-19 தொற்றுப் பிரச்சினை குறித்து விவாதிக்க உள்ளனர்.
- இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள பாகிஸ்தான் நாட்டிற்கும் அழைப்பு விடுக்கப் பட்டு உள்ளது.

- இதற்கு முன்னதாக கொரானா – 19 நோய்த் தொற்றிற்கு எதிர்வினையாக சார்க் உறுப்பு நாடுகளால் கொரானா வைரஸ் அவசர கால நிதியமானது உருவாக்கப் பட்டு உள்ளது.
- இந்த நிதியத்திற்கு இந்தியா 10 மில்லியன் அமெரிக்க டாலரை அளிக்க முன்வந்து உள்ளது.
- சார்க் ஆனது 1985 ஆம் ஆண்டு டிசம்பர் 08 அன்று தொடங்கப்பட்டது.
- இதன் தலைமையகமானது நேபாளத்தில் உள்ள காத்மண்டுவில் அமைந்துள்ளது.

## உலக கோவிட் – 19 தடுப்பூசித் திட்டம்

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது "உலக கோவிட்-19 தடுப்பூசித் திட்டம்" ஒன்றைத் தயாரிக்குமாறு ஜி20 நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.
- இது உலகம் முழுவதும் உள்ள 10 செல்வந்த நாடுகள் உலக அளவில் 75% தடுப்பூசிகளை வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.
- உலகில் உள்ள 130 ஏழை நாடுகள் ஒரு தடுப்பூசி கூட இன்னும் பெறவில்லை.
- உலக சுகாதார அமைப்பின் கோவேக்ஸ் எனும் திட்டமானது ஏழை நாடுகளுக்கு 40 மில்லியன் என்ற அளவில் கொரானா வைரஸ் தடுப்பூசிக்காக ஃபிசர்-பயோன்டெக் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

## உலக சூரிய ஒளி வங்கி

- சர்வதேச சூரிய ஒளிக் கூட்டமைப்பானது கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றக் கருத்தரங்கில் உலக சூரிய ஒளி வங்கியை (World Solar Bank- WSB) தொடங்க முடிவு செய்துள்ளது.
- இந்தக் கருத்தரங்கானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது.
- இது காலநிலை சார்ந்த பகுதியில் இந்தியாவில் தலைமைத்துவத்தை எடுத்துக் காட்டும் முயற்சிக்கு உதவ இருக்கின்றது.
- WSBன் தலைமையகமானது இந்தியாவில் அமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்தியாவில் அமைக்கப்பட இருக்கும் முதலாவது பன்னாட்டு வங்கி இதுவாகும்.
- WSB ஆனது அடுத்த 10 ஆண்டுகளில் ISA அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கு 50 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியை வழங்க முடிவு செய்துள்ளது.

## நாஸ்காம் தொழில்நுட்பம் மற்றும் தலைமைத்துவம் மன்றம் 2021

- நாஸ்காம் தொழில்நுட்பம் மற்றும் தலைமைத்துவ மன்றத்தின் (Nasscom Technology and Leadership Forum-NTLP) 29வது பதிப்பானது சமீபத்தில் நடத்தப்பட்டது.
- இது தேசிய மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்கள் கூட்டமைப்பின் ஒரு முதன்மை நிகழ்வாகும்.
- NTLF 2021 ஆனது "சிறந்த வழக்கமான நிகழ்வை நோக்கிய எதிர்காலத்தை வடிவமைத்தல்" என்ற கருத்துருவின் கீழ் நடத்தப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி ஆனது நாஸ்காம் தொழில்நுட்பம் மற்றும் தலைமைதத்துவ மன்றத்தின் 29வது ஆண்டைக் குறிக்கின்றது.

## இந்தியா-ஆஸ்திரேலியா சுழற்சி முறை பொருளாதார ஹேக்கத்தான்

- பிரதமர் அவர்கள் இந்தியா - ஆஸ்திரேலியா சுழற்சி முறை பொருளாதார ஹேக்கத்தானின் (India Australia Circular Economy Hackathon- I-ACE) நிறைவு விழாவில் உரையாற்றினார்.
- I-ACE ஆனது நிதி ஆயோக்கின் அடல் புத்தாக்கத் திட்டம் மற்றும் ஆஸ்திரேலியாவின் காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி அமைப்பு ஆகிய அமைப்புகளால் இணைந்து நடத்தப்பட்டது.
- இதில் இந்தியாவிலிருந்து 39 குழுக்களைச் சேர்ந்த மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து 33 குழுக்களைச் சேர்ந்த 200 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## கெய்ர்ன் ஆற்றல் - நடுவர் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு

- இந்திய அரசானது 1.2 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள சர்வதேச நடுவர் தீர்ப்பாயத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய முடிவு செய்துள்ளது.
- வரி தொடர்பான ஒரு பிரச்சினையில் Cairn Energy Plc என்ற நிறுவனத்தினால் அந்த வழக்கு வெற்றி கொள்ளப் பட்டது.
- இந்நிறுவனமானது 2006-07 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஜெர்சியில் உள்ள நிறுவனங்களுடன் இணைந்து பரிவர்த்தனைகளை மேற்கொண்டது.
- இது ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள கெய்ர்ன் நிறுவனத்திற்கு மூலதன ஆதாயத்திற்கு வழிவகுத்தது.
- இந்த ஆதாயமானது இந்தியாவில் வரி செலுத்தப்பட வேண்டியதாகும்.
- எனவே வரியை ஏய்க்கும் நோக்கத்துடன் கெய்ர்ன் நிறுவனம் இந்தியாவிற்கு வெளியே பரிவர்த்தனையை மேற்கொண்டதாக கெய்ர்ன் நிறுவனத்தின் மீது மத்திய அரசு குற்றம் சுமத்துகின்றது.
- இந்தியாவானது 104 பில்லியன் அளவில் வரியைச் செலுத்துமாறு அந்த நிறுவனத்திடம் கோரி வருகின்றது.
- மேலும் இதற்கு சமமான அளவிலான அபராதத் தொகையையும் பெறப்பட்ட வட்டித் தொகையையும் கோரி வருகின்றது.



## ஆசியப் பொருளாதார பேச்சுவார்த்தை

- புனே சர்வதேச மையமானது இந்த ஆண்டின் ஆசியப் பொருளாதார பேச்சு வார்த்தையின் இணைத் தலைமையாக இயங்கும்.
- இதில் வெளியறவு விவகார அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்கள் உரை நிகழ்த்த உள்ளார்.
- ஜப்பான், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, மொரீஷியஸ் மற்றும் பூடான் ஆகிய நாடுகள் இதில் பங்கேற்கின்றன.
- இதை வெளியறவு விவகார அமைச்சகம் மற்றும் ஆசியப் பொருளாதார உரையாடல் அமைப்பு ஆகியன இணைந்து வழங்கும்.
- இதன் கருத்துரு 'கோவிட் தொற்றுக்குப் பிந்தைய உலகளாவிய வர்த்தகம் மற்றும் நிதி இயக்கவியல்' என்பதாகும்.

## 11வது உலக பெட்ரோலிய நிலக்கரி காங்கிரஸ் (மாநாடு) – 2021

- 11வது உலக பெட்ரோலிய நிலக்கரி மாநாடு – சர்வதேசக் கருத்தரங்கு மற்றும் கண்காட்சி – 2021 என்ற நிகழ்வானது ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பினால் நடத்தப் பட்டது.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "பெட்ரோலியம் நிலக்கரி வாயு : உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோருக்கான வெற்றிசார் உத்தியை நோக்கி" என்பதாகும்.




## உலக எதிர்கால எரிபொருள் மாநாடு 2021

- உலக எதிர்கால எரிபொருள் மாநாடு மற்றும் கண்காட்சி – 2021 என்ற நிகழ்வானது ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பினால் நடத்தப்பட்டது.
- இது உலகம் முழுவதும் உள்ள உலக வணிகத் தலைவர்கள், எதிர்காலத் தலைவர்கள் (மாணவர்கள்), அரசு, சிறப்புமிகு கண்காட்சியாளர் ஆகியோரை ஒருங்கிணைக்கச் செய்வதற்கான ஒரு வருடாந்திர மாநாடாகும்.
- இது உலகிற்கான தூய்மையான எதிர்கால ஆற்றலில் முதன்மைத் தொழில்நுட்பத்தை எடுத்துக் காட்டுகின்றது.

## ஆயுதப் படைகளில் பெண்கள்

- சவுதி அரேபியாவானது பெண்களை ஆயுதப் படைகளில் சேர்க்க முடிவு செய்துள்ளது.
- தற்பொழுது, பெண்கள் இராணுவ சீருடைகளுக்காக தங்களது முழுநீள மேலங்கியை மாற்றிக் கொள்ள முடியும்.
- எனினும், சவுதி அரேபியக் குடியுரிமை பெறாதவர்களை திருமணம் செய்துள்ள விண்ணப்பதாரர்கள் இந்த ஆட்சேர்ப்பு பணிகளுக்குத் தகுதியற்றவர்களாவர்.
- 2016 ஆம் ஆண்டின் உலகப் பொருளாதார மன்றத்தின் உலகப் பாலின இடைவெளி அறிக்கையின்படி, சவுதி அரேபியாவானது பாலின சமநிலையில் மொத்தமுள்ள 144 நாடுகளில் 141வது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.

## H5N8 பறவைக் காய்ச்சல் – உலகின் முதலாவது பாதிப்பு

- ரஷ்யாவானது மனிதர்களுக்கு பறவைக் காய்ச்சலின் H5N8 திரள் பரவுதல் குறித்த முதலாவது பாதிப்பைப் பதிவு செய்துள்ளது.
- H5N8 என்பது இன்புளுயன்சா A வைரஸின் ஒரு துணை வகையாகும்.
- இது பறவைகள் மற்றும் பாலூட்டிகளில் காய்ச்சல் போன்ற அறிகுறிகளை ஏற்படுத்துகின்றது.
- மனிதர்களுக்கிடையே இந்தக் காய்ச்சல் பரவுதல் குறித்து எந்தவொரு அறிகுறியும் இதுவரை காணப்படவில்லை.
- தற்பொழுது வரை, இது பறவைகள் மற்றும் கோழியினங்களில் மட்டுமே மிக அதிக அளவில் காணப்படுகின்றது.
- சமீபத்தில், மகாராஷ்டிராவின் பீடு மாவட்டத்தைச் சேர்ந்த காக்கை மாதிரிகளில் H5N8 திரளானது காணப்பட்டுள்ளது.

## NAVDEX 21 மற்றும் IDEX 21

- கடற்படைப் பாதுகாப்புக் கண்காட்சி (Naval Defence Exhibition - NAVDEX 21) மற்றும் சர்வதேச பாதுகாப்புக் கண்காட்சி (IDEX 21) ஆகியவற்றில் பங்கேற்க இந்தியக் கடற்படைக் கப்பலான பிரலயா என்ற கப்பலானது அபுதாபியை அடைந்துள்ளது.
- NAVDEX 21 மற்றும் IDEX 21 ஆகியவை இப்பிராந்தியத்தின் முன்னணி சர்வதேச கடற்படை மற்றும் பாதுகாப்புக் கண்காட்சிகளில் ஒன்றாகும்.
- பிரலயா கப்பல் ஆனது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பிரபல வகுப்பு ஏவுகணை தாங்கி கப்பல்களில் இரண்டாவதாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## சமத்துவமின்மை கிருமி

- ஆக்ஸ்பாம் அமைப்பானது சமீபத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடந்த உலகப் பொருளாதார மன்றத்தின் துவக்க நாளில் வெளியிடப்பட்டது.
- கோவிட்-19 தொற்றுநோயானது இந்தியா மற்றும் உலகெங்கிலும் தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகளை ஆழப்படுத்தியுள்ளது என்று அது கண்டறிந்துள்ளது.
- அமெரிக்கா, சீனா, ஜெர்மனி, ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து இந்தியா உலகின் ஆறாவது இடத்தில் உள்ளது.
- இருப்பினும், இந்தியாவில் பெரும் பணக்காரக் கோடீஸ்வரர்கள் ஊரடங்கு காலத்தில் தங்கள் செல்வத்தை 35 சதவீதம் அதிகரித்துள்ளனர்.





## சமையல் எண்ணெய்க்கான தேசிய திட்டம்

- வேளாண் அமைச்சகம் இந்தத் திட்டத்தை முன்மொழிந்துள்ளது.
- இது உள்நாட்டில் கிடைக்கும் தன்மையை அதிகரிப்பதையும் மற்றும் இறக்குமதி சார்புநிலையைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020-21 முதல் 2024-25 வரையிலான காலப்பகுதியில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இந்தத் திட்டம் முன்மொழியப் பட்டுள்ளது.
- இது மூன்று துணைத் திட்டங்களைக் கொண்டுள்ளது.
- இவை மூன்று மூலங்களிலிருந்து எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் உள்ளன.
    - முதன்மை ஆதாரங்கள் - இதில் வருடாந்திரப் பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்கள் மற்றும் மரத்திலிருந்துப் பெறப்படுகின்ற உணவிற்குப் பயன்படும் எண்ணெய் வித்துக்கள் ஆகியன இதில் அடங்கும்.
    - இரண்டாம் நிலை ஆதாரங்கள் - இதில் அரிசியின் உமி எண்ணெய் மற்றும் பருத்தி விதை எண்ணெய் ஆகியவை அடங்கும்.
    - ஒரு நபர் ஆண்டுக்கு 19.00 கிலோ என்ற அளவில் சமையல் எண்ணெய் நுகர்வை நிலையாக பராமரிப்பதற்கான நுகர்வோர் விழிப்புணர்வு.

- ❖ இந்தியாவில், 25 மில்லியன் டன் சமையல் எண்ணெய்கள் தேவைப்படுகின்றன.
- ❖ இதில் 60% தேவை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது.

## அந்நிய நேரடி முதலீட்டில் 13% அதிகரிப்பு

- ❖ இந்தியாவானது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது அந்நிய நேரடி முதலீட்டில் (FDI) 13% அதிகரிப்பை, அதாவது 57 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.
- ❖ உள்நாட்டு உயர்வானது டிஜிட்டல் பொருளாதாரத்தில் முதலீடு செய்ததன் மூலம் அதிகரித்துள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் மேம்பாட்டுக் கருத்தரங்கின் படி, உலக அளவில் FDIயின் மிகப்பெரிய பெறுநர் நாடாக சீனாவானது அமெரிக்காவை முந்தியுள்ளது.
- ❖ 2020 ஆம் ஆண்டில் FDIயின் அதிகரிப்பைக் கண்ட இரு நாடுகள் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் மட்டுமே.
- ❖ ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள் உள்ளிட்ட இதர உலக நாடுகள் மிகப்பெரிய சரிவைக் கண்டுள்ளன.




## இந்தியாவின் புதிய மத்திய வங்கி எண்ம (டிஜிட்டல்) நாணயம்

- ❖ இந்தியாவிற்குப் புதிய மத்திய வங்கி எண்ம நாணயம் தேவையா என்று ரிசர்வ் வங்கி ஆய்வு செய்து வருகிறது.
- ❖ இது ஒரு எண்ம நாணயத்தைச் செயல்படுத்துவதற்கான வழிகளையும் ஆராய்ந்து வருகிறது.
- ❖ புதிய மத்திய வங்கி எண்ம நாணயம் என்பது சட்டப்பூர்வ ஒப்பந்தம் மற்றும் எண்ம வடிவத்தில் உள்ள மத்திய வங்கியின் ஒரு பொறுப்புடைமையாகும்.
- ❖ ஒரு எண்ம நாணயம் என்பது ஓர் இறையாண்மை கொண்ட நாணயத்தில் குறிப்பிடப் படுகிறது.

- ❖ இது மத்திய வங்கியின் இருப்புநிலைக் குறிப்பிலும் தோன்றும்.
- ❖ இது நாணயத்தின் ஒரு மின்னணுப் பதிப்பாகும்.
- ❖ இதை ஒத்த மதிப்புள்ள பணம் மற்றும் பாரம்பரிய மத்திய வங்கி வைப்பு ஆகியவற்றுடன் மாற்றலாம் அல்லது பரிமாறிக் கொள்ளலாம்.

## உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2021

**Latest World Economic Outlook Growth Projections**

| (real GDP, annual percent change) | ESTIMATE 2020 | PROJECTIONS 2021 | PROJECTIONS 2022 |
|---|---|---|---|
| World Output | -3.5 | 5.5 | 4.2 |
| Emerging Markets and Developing Economies | -2.4 | 6.3 | 5.0 |
| Emerging and Developing Asia | -1.1 | 8.3 | 5.9 |
| China | 2.3 | 8.1 | 5.6 |
| India | -8.0 | 11.5 | 6.8 |
| ASEAN-5 | -3.7 | 5.2 | 6.0 |
| Emerging and Developing Europe | -2.8 | 4.0 | 3.9 |
| Russia | -3.6 | 3.0 | 3.9 |
| Japan | -5.1 | 3.1 | 2.4 |
| United Kingdom | -10.0 | 4.5 | 5.0 |
| Canada | -5.5 | 3.6 | 4.1 |
| Other Advanced Economies | -2.5 | 3.6 | 3.1 |

- ❖ சர்வதேச நாணய நிதியமானது "உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2021" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்த அறிக்கையின்படி, இந்தியாவின் பொருளாதாரமானது 2021 ஆம் ஆண்டில் 11.5% என்ற அளவிற்கு வளர்ச்சியடைய இருக்கின்றது.
- ❖ இதற்கு முன்பு இது 8.8% வளர்ச்சி அடையும் என்று கணிக்கப்பட்டிருந்தது.
- ❖ 2022 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சியானது 6.8% ஆக இருக்கும் என்று கணிக்கப் பட்டு உள்ளது.
- ❖ உலகின் பொருளாதார வளர்ச்சியானது 2022 ஆம் ஆண்டில் 4.2% ஆக இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- ❖ இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்யும் ஒரே நாடாக இந்தியா உருவெடுக்க இருக்கின்றது.
- ❖ இந்தியாவானது உலகில் வேகமாக வளரும் மிகப்பெரிய பொருளாதார நாடு என்ற நிலையை மீண்டும் பிடிக்கவுள்ளது.

## ஜி20 பொதுக் கட்டமைப்பின் கீழ் கடன் சீரமைப்பு

- ஒரு புதிய பொதுக் கட்டமைப்பின் கீழ் கடன் மறுசீரமைப்பை அதிகாரப்பூர்வமாக கோரிய முதல் நாடு சாட் ஆகும்.
- இது “ஜி 20 பொதுக் கட்டமைப்பு” (G20 Common Framework) அல்லது “Common Framework for Debt Treatments beyond the Debt Service Suspension Initiative” என்றும் அழைக்கப் படுகிறது.
- இதைக் கடந்த ஆண்டு பாரீஸ் மன்றத்தின் உதவியுடன் சீனா மற்றும் இதர மற்ற 20 நாடுகளின் குழு அறிமுகப் படுத்தியது.
- பாரீஸ் மன்றம் என்பது முக்கிய கடன் வழங்கும் நாடுகளின் ஒரு அதிகாரிகள் குழு ஆகும்.
- இது 1956 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## 25 ஆண்டுக் காலத்தில் குறைந்த அளவிலான தங்கத் தேவை

- கோவிட் - 19 நோய்த் தொற்றால் ஏற்பட்ட பொது முடக்கத்தின் காரணமாக இந்தியாவில் தங்கத்தின் தேவையானது கடந்த 25 ஆண்டு காலத்தில் தற்பொழுது ஒரு மிகக் குறைந்த அளவாக 446.4 டன்களாக உள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டில் 690.4 டன்களாக இருந்தது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இந்தியாவில் மொத்த அணிகலன் தேவையானது 42% என்ற அளவில் குறைந்து 315.9 டன்களாக உள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டில் 544.6 டன்களாக இருந்தது.
- ஒரு ஆண்டிற்கான மொத்த முதலீட்டுத் தேவையானது 130.4 டன்களாக, 11% என்ற அளவில் குறைந்துள்ளது.
- இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 145.8 டன்களாக இருந்தது.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் தங்கத் தேவையானது மூன்றில் ஒரு பங்கு என்ற அளவிற்குக் குறைந்துள்ளது.


## அபாய நேர்வு அடிப்படையிலான உள் தணிக்கை

- ரிசர்வ் வங்கியானது அபாய நேர்வு அடிப்படையிலான ஓர் உள் தணிக்கை முறையை (risk-based internal audit system) அறிமுகப் படுத்தியுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட சில வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்கு இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- இதன் விதிமுறைகளின்படி, 5,000 கோடி ரூபாய் மதிப்பு சொத்து கொண்டுள்ள, வைப்புத் தொகையைப் பெறும் அனைத்து வங்கி சாரா நிதி நிறுவனங்களும் இந்த முறையைச் செயல்படுத்த வேண்டும்.
- இந்த முறை 2022 ஆம் ஆண்டின் மார்ச் 31 ஆம் தேதிக்குள் செயல்படுத்தப்பட வேண்டும்.

## குழந்தைகளுக்கான சேமிப்பு வங்கிக் கணக்குத் திட்டம்

- பெடரல் வங்கியானது “பெட்ஃபர்ஸ்ட்” (FedFirst) எனும் திட்டம் தொடங்கப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

- இது 18 வயதிற்குக் குறைவாக உள்ள குழந்தைகளுக்கான ஒரு சிறப்பு சேமிப்பு வங்கிக் கணக்குத் திட்டமாகும்.
- இந்த வங்கிக் கணக்கானது குழந்தைகளிடம் சேமிப்புப் பழக்கத்தை வளர்க்கவும் ஆரோக்கியமாக செலவிடவும் வழிவகை செய்கின்றது.
- இது சேமிக்க, செலவிட, வருமானம் ஈட்டுவதற்கான சுதந்திரத்தை குழந்தைகளுக்கு வழங்கவுள்ளது.




## "ஒரே நாடு ஒரே தீர்ப்பாயம்" அணுகுமுறை


- இந்திய ரிசர்வ் வங்கியானது நுகர்வோர்களுக்கான குறை தீர்ப்பு அமைப்பை ஒரே தீர்ப்பாயத்தின் கீழ் ஒன்றிணைக்கவுள்ளது.
- இது தற்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கும் 3 குறை தீர்ப்புத் திட்டங்களை மாற்ற உள்ளது.
- தற்பொழுது வங்கியியல், வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மீதான நுகர்வோர்களுக்கான குறை தீர்ப்பிற்காக தனித்தனியான பிரத்தியேக தீர்ப்பாயத் திட்டங்கள் உள்ளன.

## நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளுக்கான குழு

- நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் குறித்து ஆராய ஒரு நிபுணர் குழுவை அமைக்க ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது.
- ஒரு இடைக்கால வழிகாட்டுதலை வழங்க, இக்குழு அனைத்துப் பங்குதாரர்களையும் உள்ளடக்கியதாக இருக்கும்.
- இந்த வழிகாட்டுதல் அந்தத் துறையை வலுப்படுத்த உதவும்.
- இது நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் புனரமைப்பை விரைவாகச் செயல்படுத்த உதவும்.
- இந்த நிறுவனங்கள் தொடர்பான பிற முக்கியமான அம்சங்களையும் இக்குழு ஆராயும்.
- 2020 ஆம் ஆண்டு வங்கி ஒழுங்கு முறைச் சட்டம் (திருத்தச் சட்டம்) என்ற சட்டத்தின் விதிகளின் படி இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## 2030 ஆம் ஆண்டில் உலகின் 3வது மிகப்பெரிய ஆற்றல் நுகர்வோர் நாடு

- சர்வதேச ஆற்றல் நிறுவனமானது (IEA) சமீபத்தில் "இந்திய ஆற்றல் கண்ணோட்டம் 2021" என்ற தலைப்பு கொண்ட ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2030 ஆம் ஆண்டில் இந்தியாவானது சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக, உலகின் 3வது மிகப்பெரிய ஆற்றல் நுகர்வாளர் நாடாக ஐரோப்பிய ஒன்றியத்தை முந்தவுள்ளது.
- மேலும் இந்த அறிக்கையானது இந்தியாவானது 2019-2040 காலத்தில் உலகத் தேவையின் வளர்ச்சியில் கால் பகுதி வளர்ச்சியை ஏற்படுத்தும் என்றும் கூறுகின்றது.




## 8 உறுப்பினர்கள் நிபுணர் குழு

- முதன்மை (நகர்ப்புற) கூட்டுறவு வங்கிகள் குறித்து எட்டு பேர் கொண்ட நிபுணர் ஒரு குழுவை இந்திய ரிசர்வ் வங்கி அமைத்துள்ளது.
- இது சிக்கல்களை ஆராய்வதையும், அத்துறையை வலுப்படுத்துவதற்கான ஒரு திட்டத்தைப் பரிந்துரைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இக்குழுவிற்கு ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் என்.எஸ். விஸ்வநாதன் தலைமை தாங்குவார்.

## பெருநிறுவன இந்தியா இடர்க் குறியீடு

- ஐசிஐசிஐ லோம்பார்ட் நிறுவனமானது 'பெருநிறுவன இந்தியா இடர்க் குறியீட்டை' அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களை உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த, தரப்படுத்தப்பட்ட பெருநிறுவன இடர்க் குறியீடாக இருக்க முனைகிறது.
- இது நிறுவனங்கள் தங்கள் வணிகத்தை எதிர்கொள்ளும் இடர்களின் அளவைப் புரிந்து கொள்ள உதவும்.
- வெற்றிகரமான இடர் விலக்குத் திட்டத்தை உருவாக்கவும் இது உதவும்.

## பருப்பு வகைகள் – இந்தியாவின் பங்களிப்பு

- உலக அளவில் பருப்பு வகைகளின் மொத்த உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு ஏறத்தாழ 24% ஆகும்.


- மேலும் உலக அளவில் பருப்பு வகைகளின் மிகப்பெரிய உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் நாடு இந்தியா ஆகும்.
- நாட்டின் பருப்பு வகைகளின் உற்பத்தியானது கடந்த 5 முதல் 6 ஆண்டுகளில் 14 மில்லியன் டன்னிலிருந்து (140 இலட்சம் டன்) 24 மில்லியன் டன்களாக (240 இலட்சம் டன்) வளர்ச்சி அடைந்துள்ளது.

## DHFL நிறுவனத்தைக் கையகப்படுத்தல்

- திவான் வீட்டு வசதி நிதியியல் கழகமானது (DHFL) பிராமல் குழுமத்தால் கையகப்படுத்தப் படுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- தற்பொழுது பிராமல் குழுமமானது DHFL நிறுவனத்தைக் கையகப்படுத்துவதற்கு வேண்டி தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயத்திடம் அனுமதி பெற வேண்டும்.
- DHFL என்பது வைப்பு-எடுப்பு வசதிக் கொண்ட ஒரு வீட்டுவசதி நிதியியல் நிறுவனம் ஆகும்.
- இது இந்தியாவின் 2வது வீட்டுவசதி நிதியியல் நிறுவனமாகும்.
- தற்பொழுது இந்த நிறுவனமானது திவாலாகியுள்ளது.

## கடன் குறித்த IIF அறிக்கை

- சர்வதேச நிதியியல் மையமானது (IIF) உலகக் கடனானது 2020 ஆம் ஆண்டின் முடிவில் 281 டிரில்லியன் அமெரிக்க டாலரை அளவை எட்டியுள்ளதாக அறிவித்துள்ளது.
- இது உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 335% அளவிற்கும் அதிகமாகும் .
- அரசியல் மற்றும் சமூக அழுத்தங்கள் நாடுகளை மேலும் செலவிடும்படி வற்புறுத்தச் செய்வதால் 2021 ஆம் ஆண்டில் இந்தக் கடன் ஆனது மேலும் 10 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவில் அதிகரிக்கும்.
- இது 2021 ஆம் ஆண்டு முடிவில் கடன் மதிப்பானது 92 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற அதிகரிப்பிற்கு வழிவகுக்கும்.



## இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) கீழ் ஸ்டேட் பேங்க் ஆப் சிக்கிம்

- RBI ஆனது ஸ்டேட் பேங்க் ஆப் சிக்கிமை தனது ஒழுங்குமுறை விதிகளின் கீழ் கொண்டு வந்துள்ளது.
- இது தற்பொழுது வரை மற்ற வங்கிகளைப் போல் அல்லாமல் RBI வங்கியினால் ஒழுங்குமுறைப் படுத்தப்படவில்லை.
- தற்பொழுது வரை, RBI ஆனது சிக்கிம் மாநில அரசைத் தவிர்த்து அனைத்து மாநில அரசுகளுக்கான வங்கியாளராக செயல்படுவதற்கான வேண்டிய உரிமையையும் கடமையையும் கொண்டுள்ளது.
- இனி இந்த வங்கியானது மற்ற வங்கிகளைப் போல் RBI வங்கியினால் ஒழுங்குமுறைப் படுத்தப் படும்.
- எனினும், அந்த வங்கியின் உரிமைக் கட்டமைப்பானது மாற்றப்படவில்லை.

***ஸ்டேட் பேங்க் ஆப் சிக்கிம்***

- இது ஒரு தன்னாட்சி அமைப்பாக 1968 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது முழுவதும் சிக்கிம் அரசிற்குச் சொந்தமான ஒரு வங்கியாகும்.
- இது ஸ்டேட் பேங்க் ஆப் சிக்கிம் பிரகடனம் 1968 என்பதின் கீழ் ஏற்படுத்தப்பட்டது.
- இந்த வங்கியானது மாநில அரசிற்கு கருவூல வசதிகளை அளிக்கின்றது.
- இது சிக்கிம் மாநிலத்திற்குள் மட்டுமே செயல்படுகின்றது.

## இந்தியாவின் முதன்மை வர்த்தகப் பங்காளர்

- சீனாவானது 2020 ஆம் ஆண்டில் மீண்டும் இந்தியாவின் முதன்மை வர்த்தகப் பங்காளர் நாடாக உருவெடுத்துள்ளது.
- இதற்குக் காரணம் சீனாவிடமிருந்து கனரக இயந்திரங்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதியை இந்தியா சார்ந்திருப்பதாகும்.
- தற்காலிகத் தரவின் படி, 2020 ஆம் ஆண்டில் இந்த 2 நாடுகளுக்கிடையேயான வர்த்தகமானது 77.7 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது.
- எனினும், 2019 ஆம் ஆண்டு மேற்கொண்ட வர்த்தகத்துடன் ஒப்பிடப் படும் போது தற்போதைய வர்த்தகமானது குறைந்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் இது 85.5 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- 2020 ஆம் ஆண்டில் சீனாவுடனான இந்தியாவின் இருதரப்பு வர்த்தக இடைவெளி 40 பில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆகாஷ்-என்ஜி ஏவுகணை

- இந்த ஏவுகணையை ஒடிசா கடற்கரையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- ஆகாஷ்-என்ஜி ஒரு நடுத்தர தூர வரம்பு கொண்ட, நடமாடும் வகையிலான, நிலத்தில் இருந்து விண்ணில் இருக்கும் இலக்கைத் தாக்கும் ஒரு வகை ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பாகும்.
- இந்த ஏவுகணையால் வான்வழி அச்சுறுத்தல்களைத் தடுக்க முடியும்.
- இது 18,000 மீட்டர் உயரத்தில் 50-60 கி.மீ தூரத்தில் ஒரு விமானத்தைக் குறி வைக்கும் திறனைக் கொண்டுள்ளது.
- இது இந்திய தரைப்படை மற்றும் இந்திய விமானப்படையுடன் செயல்பட்டு வருகிறது.
- சமீபத்தில் பாதுகாப்பு அமைச்சரவைக் குழுவானது ஆகாஷ் ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பின் ஏற்றுமதியை அனுமதித்துள்ளது.




## உலக விண்வெளிச் சாதனை

- சமீபத்தில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமானது 143 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியதன் மூலம் உலக விண்வெளிச் சாதனையை முறியடித்துள்ளது.
- இது 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இந்தியாவால் செலுத்தப்பட்ட 104 செயற்கைக் கோள்கள் என்ற இந்தியாவின் சாதனையை முறியடித்துள்ளது.
- ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் விமானத்திற்கான ஏவு வாகனம் பால்கன் 9 ஆகும்.
- இந்தத் திட்டமானது ட்ரான்ஸ்போர்ட்டர் -1 என்ற பெயரில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்த ஏவுதலானது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் சிறு செயற்கைக் கோள் ஏவுப் பகிர்வுத் திட்டத்திற்கான முதலாவது பிரத்தியேகத் திட்டத்தைக் குறிக்கின்றது.
- செலுத்தப்பட்ட இந்தச் செயற்கை கோள்களுடன் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனமானது 2021 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் புவிக்கு அருகே அகலக் கற்றையிலான இணையச் சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## "மறைந்து போன அண்டம்" மீண்டும் கண்டுபிடிப்பு – நாசா

- நாசாவின் ஹபிள் விண்வெளித் தொலைநோக்கியானது என்ஜிசி 4535 என்ற ஒரு அண்டத்தின் புகைப்படங்களை எடுத்துள்ளது.

- இது "மறைந்து போன அண்டம்" எனவும் அழைக்கப்படுகின்றது.
- இந்த அண்டமானது 1785 ஆம் ஆண்டில் வில்லியம் ஹெர்ச்செல் என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது.
- வில்லியம் ஹெர்ச்செல் அவர்கள் யுரேனஸ் கோளைக் கண்டுபிடித்தவராவார்.
- இந்த அண்டமானது பூமியிலிருந்து 50 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இது விர்கோ தொகுப்பில் உள்ள சில 2000 அண்டங்களில் மிகப்பெரிய ஒன்றாக உள்ளது.

## ஸ்டார்ட்டஸ்ட் 1.0 ஏவுகணை

- ஸ்டார்ட்டஸ்ட் 1.0 என்ற ஏவுகணை அமெரிக்காவின் மைனேயில் உள்ள லோரிங் வர்த்தக மையத்திலிருந்து விண்ணிற்கு ஏவப்பட்டது.
- இது முழுக்க முழுக்க உயிரி எரிபொருளால் இயக்கப்படும் முதல் வணிகரீதியிலான விண்வெளி ஏவுதலாகும்.
- இது அமெரிக்காவின் மைனே தளத்தின் முதல் வணிக ஏவுதலாகும்.
- இந்த ஏவுகணையை மைனேவைத் தளமாகக் கொண்ட ஒரு விண்வெளி நிறுவனமான ப்ளூஷிஃப்ட் என்ற நிறுவனம் தயாரிக்கிறது.
- இந்த ஏவுகணைகள் கியூப்சாட்ஸ் எனப்படும் சிறிய செயற்கைக் கோள்களை விண்வெளியில் மலிவான விலையில் செலுத்த உதவும்.
- பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் ஏவுகணைகளின் எரிபொருட்களுடன் ஒப்பிடப் படும் போது உயிரி எரிபொருளானது சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் நச்சுத் தன்மையற்றதாக உள்ளது.

## விண்வெளிக்கு மக்களை அனுப்பும் முதல் திட்டம்

- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் ஆனது மக்களை விண்வெளிக்கு அனுப்பும் முதல் திட்டத்தை துவங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.
- இது பால்கன் 9 என்பதின் கீழ் இன்ஸ்பிரேஷன் 4 எனும் திட்டத்தைத் தொடங்க திட்டம் தீட்டியுள்ளது.
- இது விண்வெளி சுற்றுப்பாதையில் உலகின் செலுத்தப்படும் முதல் வணிக ரீதியான விண்வெளி வீரர்கள் அடங்கிய திட்டமாகும்.

## உலகின் மிகப்பெரிய ரேடியோ தொலைநோக்கி

- சமீபத்தில் சதுர கிலோ மீட்டர் தொகுப்பு ஆய்வகம் (Square Kilometre Array Observatory - SKAO) என்ற மன்றமானது சமீபத்தில் தனது சந்திப்பை நடத்தியது.
- இந்தச் சந்திப்பின் போது, இந்த ஆணையமானது உலகின் மிகப்பெரிய ரேடியோ தொலைநோக்கியை அமைப்பதற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- SKAO என்பது அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு புதிய அமைப்பாகும்.
- தற்பொழுது SKAO ஆனது 10 நாடுகளைச் சேர்ந்த அமைப்புகளைக் கொண்டுள்ளது.

*அமைக்கப்பட இருக்கும் ரேடியோ தொலைநோக்கி*

- இதை காஸ்மிக் துகள்களால் மூடப்பட்டுள்ள விண்வெளிப் பகுதிகளை (இதுவரை கண்டறியப் படாத) கண்டறியவும் கண்ணுக்குப் புலப்படாத வாயுக்களைக் கண்டறியவும் பயன்படுத்த முடியும்.
- மேற்கண்டவை தொடர்பான வழக்கமான ஒளியிழைத் தொலைநோக்கிகளைக் காட்டிலும் இது வேறுபட்டதாகும்.
- சதுர கிலோ மீட்டர் தொகுப்பு என்பது உலகெங்கிலும் உள்ள மிகப்பெரிய தொலைநோக்கியாகும்.
- இந்த தொலைநோக்கியானது ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய பகுதிகளில் அமைக்கப் படவுள்ளது.

## 2020 ஆம் ஆண்டில் பதிவான இணையவழிப் பாதுகாப்பு நிகழ்வுகள்

- 2.9 இலட்சத்திற்கும் மேற்பட்ட டிஜிட்டல் வங்கியியல் இணையவழி குற்ற நிகழ்வுகள் 2020 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளன.
- இது இந்திய அவசரகாலக் கணினி மீட்பு அணியிடம் உள்ள ஒரு தரவாகும்.
- இது 2019 ஆம் ஆண்டில் நிகழ்ந்த 2,46,514 நிகழ்வுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டில் நிகழ்ந்த 1,59,761 நிகழ்வுகள் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது தற்பொழுது அதிகரித்து உள்ளது.

## செவ்வாய் பனிக்கட்டி படமிடல் திட்டம் - நாசா

- மூன்று சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து ரோபோவைப் பயன்படுத்தி செவ்வாய் பனிக்கட்டி படமிடல் திட்டத்தை (Robotic Mars ice mapping mission) தொடங்க நாசா திட்டமிட்டுள்ளது.
- அந்த 3 நிறுவனங்கள்
    - கனடா விண்வெளி நிறுவனம்,
    - ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் மற்றும்
    - இத்தாலிய விண்வெளி நிறுவனம் ஆகியன ஆகும்.
- செவ்வாய்க் கிரகத்திற்கு வேண்டி மனிதனின் ஆரம்பக் கட்டப் பயணத்திற்கான சாத்தியமான அறிவியல் நோக்கங்களை அடையாளம் காண இந்தத் திட்டம் உதவும்.


## கஸ்னவி ஏவுகணை

- பாகிஸ்தான் நாடானது தனது அணுசக்தி திறன் கொண்ட, நிலத்தில் இருந்து நிலத்தில் இருக்கும் இலக்கைத் தாக்கும் வகையில் அமைந்த, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையான கஸ்னவி என்ற ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- இது நிலத்தில் இருந்து நிலத்தில் இருக்கும் இலக்கைத் தாக்கி அழிக்கும் ஒரு குறுகிய தூர பாலிஸ்டிக் வகை ஏவுகணையாகும்.
- இது 290 கிலோமீட்டர் வரை தாக்கக் கூடிய திறனைக் கொண்டுள்ளது.

- ஜனவரி மாதத்தில் பாகிஸ்தான் நாடானது அணுசக்தி திறன் கொண்ட நிலத்தில் இருந்து நிலத்தில் இருக்கும் இலக்கைத் தாக்கி அழிக்கும் வகையில் அமைந்த கண்டம் விட்டு கண்டம் பாயும் வகை ஏவுகணையான ஷாஹீன் - 3 என்ற ஒரு ஏவுகணையையும் சோதனை செய்தது.
- இந்த ஏவுகணையின் வரம்பு 2,750 கிலோமீட்டர்கள் ஆகும்.

## சிவப்புக் கோளின் முதல் புகைப்படம்


- சீனாவின் தியான்வென்-1 விண்வெளி ஆய்வுக் கலமானது செவ்வாய்க் கிரகத்தின் முதல் படத்தைப் பூமிக்கு அனுப்பியுள்ளது.
- இதை சீனாவின் தேசிய விண்வெளி நிர்வாகம் வெளியிட்டுள்ளது.
- ஷியாபரெல்லி பள்ளம் மற்றும் செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் உள்ள பரந்த பள்ளத்தாக்கான வால்ஸ் மரினெரிஸ் ஆகியவற்றை உள்ளடக்கிய செவ்வாய்க் கிரகத்தின் புவியியல் அம்சங்களை இது காட்டுகிறது.
- இந்த விண்கலம் 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏவப்பட்டது.
- இந்தப் புகைப்படம் செவ்வாய்க் கிரகத்தில் இருந்து சுமார் 2.2 மில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் இருந்து எடுக்கப்பட்டது.




## அதி உயர வளிமண்டல செயற்கைக் கோள் (Pseudo Satellite)


- இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனமானது ஒரு ஸ்டார்ட் அப் நிறுவனத்துடன் இணைந்து எதிர் காலத்தில் பயன்படுத்தப்பட இருக்கும் அதி உயர வளிமண்டல செயற்கைக் கோளை மேம்படுத்திக் கொண்டிருக்கின்றது.
- உலகில் மேம்படுத்தப்பட்டு வரும் இதே வகையைச் சேர்ந்த முதலாவது செயற்கைக் கோள் இதுவாகும்.
- இந்தச் செயற்கைக் கோள்கள் சூரிய ஒளி ஆற்றல் மயமாக்கப்பட்டதாக இருக்கும்.

- இது 2–3 மாதங்களுக்கு ஏறத்தாழ 70,000 அடி உயரத்தில் நேரடி மனிதக் கட்டுப்பாடு இல்லாமல் (ஆளில்லா) பறந்து, தகவலைச் சேகரிக்கும்.
- உலகில் உள்ள எந்தவொரு நாடும் இதுவரை இந்த மாதிரியில் செயற்கைக்கோளை மேம்படுத்தியதில்லை.




## அரபு நாட்டின் முதல் செவ்வாய் கிரகத் திட்டம்

- செவ்வாய் கிரகத்திற்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் முதல் திட்டமானது அந்தச் சிவப்புக் கிரகத்தை அடைந்துள்ளது.
- அதன் முதல் முயற்சியில் அது வெற்றிகரமாக செவ்வாயின் சுற்றுப்பாதையில் நுழைந்துள்ளது.
- இது ஹோாப் விண்கலம் என்று அறியப்படுகிறது.




- இது அதன் சுற்றுப்பாதையில் இருப்பதை உறுதிப்படுத்தி அதற்கான சமிக்ஞையைப் பூமிக்கு அனுப்பி உள்ளது.

- இந்தச் சாதனையின் மூலம் வரலாற்றில், ஐக்கிய அரபு அமீரகமானது செவ்வாய்க் கிரகத்தை அடைந்த ஐந்தாவது நாடாக உருவெடுத்துள்ளது.
- மேலும், இது அரபு நாட்டின் முதல் விண்வெளித் திட்டமாகும்.

## சிறு கருந்துளைகளின் செறிவு

- வானியலாளர்கள் என்ஜிசி 6397 என்ற தொகுதியில் சிறு கருந்துளைகளின் ஒரு செறிவைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்தத் தொகுப்பின் மையத்தில் ஒரு மிகப்பெரிய கருந்துளைக்கு மாற்றாக சிறு கருந்துளைகளானது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- என்ஜிசி 6397 தொகுப்பானது பேரண்டம் அளவிற்குப் பழமையானதாகும்.
- மேலும் இந்தத் தொகுப்பானது கால்டுவெல் 86 என்றும் அழைக்கப்படுகின்றது.
- இது ஏறத்தாழ 7800 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் அமைந்துள்ளது.




## விண்வெளியில் மனிதர்கள் கொள்கை – 2021

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது “விண்வெளியில் மனிதர்கள் கொள்கை – 2021” என்ற கொள்கையின் ஒரு வரைவை வெளியிட்டுள்ளது.
- இது விண்வெளி நடவடிக்கையில் வழக்கமாக ஈடுபடும் நிறுவனங்கள் அல்லாத நிறுவனங்கள் பங்கேற்க வழிவகை செய்கின்றது.
- மேலும் இது தனது மனித விண்வெளித் திட்டத்திற்கான தொழில்நுட்பங்களைக் கட்டமைப்பதற்காக உள்ளூர் தொழிற்சாலைகள் மற்றும் புதிய தொழில் தொடக்க நிறுவனங்களை ஈர்க்கவும் திட்டமிடுகின்றது.

## உள்நாட்டு வரைபடமிடல் தீர்வு

- இஸ்ரோ ஆனது “கூகுள் வரைபடம்” போன்ற இணைய வரைபடமிடல் சேவையை மேம்படுத்துவதற்காக “MapMyIndia” நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
- MapMyIndia என்பது டிஜிட்டல் ரீதியில் வரைபடத் தரவுகளைக் கட்டமைக்கின்ற மற்றும் பயணத் தீர்வுகளை வழங்கும் ஒரு இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமாகும்.

## அர்ஜுன் மார்க் 1ஏ பீரங்கி

- பிரதான போர்ப் பீரங்கி அர்ஜுன் மார்க் 1ஏ என்ற பீரங்கியினைப் பிரதமர் அவர்கள் தேசத்திற்கு அர்ப்பணித்தார்.
- இந்திய இராணுவத்துடன் நெருக்கமான ஒருங்கிணைப்பில் இதை டிஆர்டிஓ அமைப்பு முழுமையாக வடிவமைத்து உருவாக்கியுள்ளது.
- இவற்றை சென்னையின் ஆவடியில் உள்ள துப்பாக்கித் தொழிற்சாலை வாரியத்தின் கனரக ஊர்தி தொழிற்சாலைத் தயாரிக்கும்.



## மிகப்பெரிய சுடரொளி

- பி.எல். லேசர்டே எனப்படும் ஒரு மிகப்பெரிய கருந்துளை அல்லது சிற்றலை என்ற விண்மீனிலிருந்து (Black hole or blazar) வெளிப்படும் வலுவான சுடரொளிகளுள் ஒன்றை இந்திய வானியலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.
- ஒளியின் வேகத்தில் பயணிக்கும் இவை மின்னேற்றத் துகள்களின் குவியலை வெளியிடுகின்றன.
- இது பிரபஞ்சத்தின் மிகவும் ஒளிரும் மற்றும் ஆற்றல் மிக்க பொருட்களில் ஒன்றாகும்.
- இந்தச் சுடரொளியின் பகுப்பாய்வு கருந்துளையின் நிறை மற்றும் அந்த உமிழ்வின் மூலத்தைக் கண்டறிய உதவும்.
- இது பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களின் மர்மங்களை ஆராய்வதற்கும் நிகழ்வுகளைக் கண்டுபிடிப்பதற்கும் வழிவகை செய்யும்.
- பி.எல். லேசர்டே பிளேஸர் (சிற்றலை விண்மீன்) ஆனது 10 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.


## இந்தியாவின் புதிய உடனடி குறுஞ்செய்தி அனுப்புதல் தளம்

- தேசிய தகவல் மையமானது “சந்தேஸ்” (Sandes) என்ற ஒரு செயலியைத் தொடங்கி உள்ளது.
- இந்த குறுஞ்செய்தி அனுப்புதல் தளமானது வாஸ்ட்அப் செயலியைப் போன்றதாகும்.
- இதனை எந்தவொரு நபராலும் எந்தவொரு தகவல் தொடர்பிற்காகவும் பயன்படுத்த முடியும்.

- இந்தச் செயலியில் பதிவு செய்வதற்கு கைபேசி எண் அல்லது மின்னஞ்சல் முகவரி மட்டுமே தேவைப்படும்.

## டைகர் எக்ஸ் – 1

- ஹீண்டாய் மோட்டார் குழுமமானது நடக்கும் மகிழுந்துவின் செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு இயந்திரத்தை வடிவமைத்துள்ளது.
- இது “மாற்றம் பெற்ற நுண்ணறிவு கொண்ட நிலத்தின் மீதான பயண இயந்திரம்” என்ற விரிவாக்கத்தைக் கொண்ட “டைகர்” (TIGER - Transforming Intelligent Ground Excursion Robot) என்று அழைக்கப் படுகின்றது.



- இந்த இயந்திரமானது சவாலான நிலப் பகுதியில் பயணம் செய்யும் திறன் கொண்ட சக்கரங்களைக் கொண்டுள்ளது.
- அதி செயல்திறன் கொண்ட இந்த இயக்க வாகனமானது நிலை குலைந்தாலோ அல்லது கடினமான நிலப் பகுதியில் பயணம் செய்யத் தேவைப்பட்டாலோ, அதில் நடக்கும் திறன் கொண்டு விளங்குகின்றது.
- இதனை ஆளில்லா விமானத்துடன் இணைக்கப்பட முடியும்.
- அவசரக் காலங்களில் சரக்குகளை விநியோகம் செய்யவும் வேண்டி இதனைப் பயன்படுத்த முடியும்.
- பூமியில் மட்டுமல்லாது இதரக் கோள்களிலும் இதனைப் பயன்படுத்த முடியும்.

## பைமோ - மின்சார இரு சக்கர வாகனம்

- பை பீம் என்ற நிறுவனமானது மின்சார இரு சக்கர வாகனத்தை ‘பைமோ’ என்ற பெயரில் அறிமுகப் படுத்தியுள்ளது.
- மதராஸ் ஐ.ஐ.டி நிறுவனமானது இந்தத் தொடக்க நிறுவனத்திற்கு ஆதரவு தருகிறது.
- இந்த மின்சார இரு சக்கர வாகனத்தைத் திறன்பேசியை விட வேகமாக மின்னூட்டம் செய்ய முடியும்.
- இந்த மலிவான இரு சக்கர வாகனமானது 50 கி.மீ. வரம்பைக் கொண்டுள்ளது.

## அஸ்ட்ரா மார்க் 2 ஏவுகணை

- அஸ்ட்ரா மார்க் 2 ஏவுகணையின் சோதனையை இந்தியா விரைவில் தொடங்க உள்ளது.
- இந்த ஏவுகணை 160 கி.மீ தூரத்திலிருந்து எதிரி விமானங்களை வீழ்த்தும் திறன் கொண்டது.
- அஸ்ட்ரா மார்க் ஆனது காட்சி வரம்பிற்கு அப்பாற்பட்ட, விண்ணிலிருந்து விண்ணில் இருக்கும் இலக்கைத் தாக்கி அழிக்கும் வகையிலான ஒரு ஏவுகணையாகும் (BVRAAM - Beyond visual range missile air-to-air missile).
- இது மாக் 4.5 என்ற வேகத்தில் ஒலி வேகத்தை விட 4 மடங்கு அதிவேகமாகப் பறக்கும்.

## ஐ.என்.எஸ் கரஞ்ச்

- இந்தியக் கடற்படை தனது மூன்றாவது ஸ்கார்பீன் நீர்மூழ்கிக் கப்பலை 75வது திட்டத்தின் கீழ் பெற்றது.
- இது ஐ.என்.எஸ் கரஞ்ச் என்ற பெயரில் சேர்க்கப்படும்.
- மொத்தம் 6 நீர்மூழ்கிக் கப்பல்கள் இந்தியக் கடற்படையில் திட்டம் 75 என்பதின் கீழ் கட்டப்பட்டு வருகின்றன.
- இதில் வழங்கப்பட்ட மற்ற இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் - காந்தேரி மற்றும் கல்வாரி ஆகியனவாகும்.


## ஆர்கா சுபா வகை

- இந்தியத் தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனமானது செவ்வந்தி பூச்செடியின் புதிய செடி வகையான "ஆர்கா சுபா" என்ற ஒன்றை மேம்படுத்தியுள்ளது.
- இது 2.8% அளவு அதிக கரோட்டீன் பொருள் உள்ளதற்காக அறியப்படுகின்றது.
- இந்த செடி வகையானது கச்சா கரோட்டீன் பிரித்தெடுக்கப் பட்டதன் காரணமாக அழிந்தாலும் கூட இது அதன் மதிப்பைப் பெற்றிருக்கும்.
- கச்சா கரோட்டீன் ஆனது மருத்துவத் துறையில் அதிக தேவையுடைய பொருளாக உள்ளது.
- இந்த செவ்வந்தி செடி வகையானது உயர்தர மஞ்சள் கருவிற்காக கோழி வளர்ப்பில் பயன்படுத்தப் படுகின்றது.



## ஏரோ – 4 ஏவுகணைக் கவசம்


- இஸ்ரேல் ஆனது அமெரிக்காவுடன் இணைந்து ஒரு புதிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைக் கவசமான "ஏரோ – 4" (Arrow-4) என்ற ஒன்றை மேம்படுத்தியுள்ளது.
- இந்த ஏவுகணையானது ஈரானைக் கண்காணிக்கும் விதமாக பாதுகாப்பு அமைப்பில் மற்றொரு அடுக்காக மேம்படுத்தப்பட்டு வருகின்றது.
- இஸ்ரேலின் ஏரோ-2 மற்றும் ஏரோ-3 இடைமறிப்பு ஏவுகணைகள் ஏற்கெனவே பல அடுக்கு அமைப்பின் கீழ் செயல்பாட்டில் இருந்து வருகின்றது.
- இந்த அமைப்பானது வான்மண்டலம் மற்றும் விண்வெளியில் எதிர்வரும் ஏவுகணைகளை அழிக்கும் திறன் கொண்டது.
- இது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை வகையைச் சேர்ந்ததாகும்.




## செவ்வாய்க் கிரகத்தில் பெர்செவரன்ஸ் தரையிறக்கம்

- அமெரிக்காவின் நாசா அனுப்பிய பெர்செவரன்ஸ் ஊர்தி ஆனது செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் வெற்றிகரமாக தரையிறங்கியது.
- இது செவ்வாய் என்ற சிவப்புக் கிரகத்திலிருந்து அதன் பாறைகளின் மாதிரிகளைச் சேகரிக்கும்.
- அங்கு தரையிறங்கிய பிறகு, இரண்டு ஹசார்ட் கேமராக்கள் (Hazard Cameras - Hazcams) அந்த ஊர்தியின் முன் மற்றும் பின்புறத்திலிருந்துப் புகைப்படங்களை எடுத்தன.
- இது தரையிறங்கும் போது எடுக்கப்பட்ட உயர் தெளிவுத் திறன் கொண்ட வண்ண சுய-புகைப்படம் உள்ளிட்ட செவ்வாய்க் கிரகத்தின் புகைப்படங்களை அனுப்பியது.
- செவ்வாய்க் கிரகத்திற்கான பெர்செவரன்ஸ் திட்டத்தின் ஒரு முக்கிய குறிக்கோளானது செவ்வாயில் பண்டைய நுண்ணுயிர் வாழ்வின் அறிகுறிகளைத் தேடுவதை உள்ளடக்கிய ஒரு விண்வெளி உயிரியல் ஆய்வாகும்.
- இது செவ்வாய்க் கிரகத்தில் பறக்கும் முதல் ஹெலிகாப்டரான Ingenuity என்ற கருவியைக் கொண்டு செல்லும்.

- நாசாவானது மற்றொரு கிரகத்தில் அல்லது செயற்கைக் கோளில் ஒரு ஹெலிகாப்டரைப் பறக்க விடுவது இதுவே முதல் முறையாகும்.



## கருப்பு-கால் கொண்ட ஃபெரெட் விலங்கின் நகலி


- அமெரிக்க விஞ்ஞானிகள் நீண்ட காலத்திற்கு முன் இறந்த விலங்கின் உறைந்த செல்களைப் பயன்படுத்தி அருகி வரும் கருப்பு கால் ஃபெரெட் விலங்கை வெற்றிகரமாக நகலி (குளோன்) செய்துள்ளனர்.
- இதற்கு எலிசபெத் ஆன் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- இது வில்லா என பெயர் கொண்ட கருப்பு-கால் ஃபெரெட் விலங்கின் செல்லில் இருந்து உருவாக்கப் பட்டது.
- இது சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தது.
- இவ்வாறு உள்நாட்டைச் சேர்ந்த அருகி வரும் ஓர் உயிரினம் அமெரிக்காவில் நகலி செய்யப் படுவது இதுவே முதல் முறையாகும்.



## VL-SRSAM ஏவுகணை அமைப்பு

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DRDO) செங்குத்து நிலையில் ஏவக்கூடிய குறைந்த வரம்பு கொண்ட நிலப்பரப்பில் இருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் (Vertical Launch Short Range Surface to Air Missile - VL-SRSAM) ஏவுகணையின் வெற்றிகரமான 2 சோதனைகளை நடத்தியது.

- VL-SRSAM ஆனது இந்தியக் கடற்படைக்காக DRDO அமைப்பினால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டதாகும்.
- இது கடல் வழி இலக்குகள் உள்ளிட்ட மிகக் குறுகிய வரம்பில் பல்வேறு வான்வழி இலக்குகளைத் தடுத்து அழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.





## ICGSC-453 இடைமறிப்புப் படகு

- C-453 என்று பெயரிடப்பட்ட இந்தியக் கடலோரக் காவல்படைப் படகானது சென்னையில் பணியில் சேர்க்கப்பட்டுள்ளது.
- மொத்தமுள்ள 18 இடைமறிப்புப் படகுகளில் 17வது இடைமறிப்புப் படகு இதுவாகும்.
- இவை லார்சன் & டூப்ரோ என்ற நிறுவனத்தினால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப் பட்டதாகும்.

## செவ்வாய் கிரகத்தில் இருந்து முதல் கேட்பொலி

- நாசா அமைப்பானது செவ்வாய் கிரகத்தில் இருந்து முதல் கேட்பொலியை (ஆடியோ) வெளியிட்டது.
- இது பெர்சவெரன்ஸ் ஊர்தியால் பதிவு செய்யப்பட்ட காற்றின் மங்கலான முறிவொலி ஓசையாகும்.
- ஊர்தி (ரோவர்) தரையிறங்கிய முதல் காணொளியையும் நாசா வெளியிட்டுள்ளது.
- நாசாவானது பெர்சவெரன்ஸ் ஊர்தியை 2020 ஆம் ஆண்டு ஜூலை 30 அன்று விண்ணிற்குச் செலுத்தியது.
- 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 அன்று இது செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கியது.



## பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை

- இந்தியாவானது உள்நாட்டில் உருவாக்கிய பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை அமைப்புகளான 'ஹெலினா' மற்றும் 'துருவஸ்திரா' ஆகியவற்றை போக்ரானில் வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- ஹெலினா (இராணுவப் பதிப்பு) மற்றும் துருவஸ்திரா (விமானப்படைப் பதிப்பு) ஆகியவை மூன்றாம் தலைமுறை பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணைகளின் வானூர்தி வழி செலுத்தப்படும் பதிப்புகள் ஆகும்.
- அவை நாக் (NAG) ஏவுகணை அமைப்பு என்றும் அழைக்கப் படுகின்றன.
- இந்த ஏவுகணை அமைப்புகள், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப் பட்டுள்ளன.
- இரண்டு ஏவுகணைகளாலும் நேரடியாக தாக்கும் முறை மற்றும் உயரத்திற்குச் சென்று இலக்குகளைத் தாக்கும் முறை ஆகிய இரண்டையும் மேற்கொள்ள முடியும்.
  - உயரத்திற்குச் சென்று தாக்கும் முறை: ஏவுகணை ஏவப்பட்ட பின் நேராக மேலேறி ஒரு குறிப்பிட்ட உயரத்தில் பயணித்து பின்னர் இலக்கைத் தாக்குதல்.
  - நேரடி தாக்குதல் முறை: இது குறைந்த உயரத்தில் பயணித்து, இலக்கை நேரடியாக தாக்கும்.



### விண்கலத்திற்கு கணிதவியலாளரின் பெயர்

- விண்வெளி விநியோக ஊர்தியான சிக்னஸ் என்ஜி-15 என்ற சரக்கு விண்கலத்திற்கு 'எஸ்.எஸ். கேத்ரின் ஜான்சன் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது கேத்ரின் ஜான்சன் அவர்களை கௌரவிக்கும் விதமாக பெயரிடப்பட்டுள்ளது.
- இவர் ஒரு நாசா கணிதவியலாளர் ஆவார்.
- அமெரிக்கக் குழுவின் முதல் விண்வெளிப் பயணமான மெர்குரி-அட்லஸ் 6 என்ற திட்டத்தின் வெற்றியில் இவர் முக்கிய பங்கு வகித்து உள்ளார்.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### சுந்தரவன உயிர்க்கோளப் பறவைகள் காப்பகம்

- இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனமானது இந்த வெளியீட்டை வெளியிட்டுள்ளது.
- இந்திய சுந்தரவனப் பகுதியில் 428 வகையான பறவைகள் உள்ளன என்று அது கூறுகிறது.
- Masked Finfoot மற்றும் Buffy fish owl போன்ற பறவைகள் இங்கு மட்டுமே பதிவு செய்யப் பட்டுள்ளன.



- இந்திய சுந்தரவனப் பகுதி ஆனது உலகின் மிகப்பெரிய சதுப்புநில வனத்தின் ஒரு பகுதியாகும்.
- இது சுந்தரவனப் பகுதி புலிகள் காப்பகத்தை உள்ளடக்கியது.
- இது ஓர் உலகப் பாரம்பரிய தளம் மற்றும் ராம்சார் தளமாகும்.
- இது ராயல் வங்கப் புலிகளின் தாயகமாகும்.

## காலநிலை ஏற்புத்தன்மை மாநாடு 2021

- இதை நெதர்லாந்து அரசு நடத்தியது.
- 2030 ஆம் ஆண்டளவில், 450 ஜிகாவாட் என்ற அளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறனை இந்தியா இலக்காக வைக்கும்.
- 2021 ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு COP26 என்றும் அழைக்கப் படுகிறது.
- இது ஐக்கிய நாடுகளின் 26வது காலநிலை மாற்ற மாநாடாகும்.
- இது 2021 ஆம் ஆண்டு நவம்பரில் ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெறும்.
- இந்த உச்சி மாநாட்டிற்கு ஐக்கிய இராச்சியம் தலைமை தாங்கும்.

## 16வது உலகளாவிய காலநிலை இடர் குறியீடு 2021


- இது சமீபத்தில் ஜெர்மனியின் பான் நகரைச் சேர்ந்த ஜெர்மன்வாட்ச் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.
- மொசாம்பிக் மற்றும் ஜிம்பாப்வே ஆகியவை 2019 ஆம் ஆண்டில் காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள இரண்டு நாடுகளாகும்.
- கடந்த 20 ஆண்டுகளில் (2000-2019), புவேர்ட்டோ ரிக்கோ, மியான்மர் மற்றும் ஹைதி ஆகியவை வானிலை நிகழ்வுகளின் தாக்கங்களால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளாக இருந்தன.
- இந்தக் குறியீட்டில், இந்தியா ஏழாவது இடத்தில் உள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் பருவமழையானது இயல்பை விட ஒரு மாதம் என்ற கால அளவிற்கு நீடித்தது.

| CRI 2000-2019 (1999-2018) | Country | CRI score | Fatalities | Fatalities per 100 000 inhabitants | Losses in million US$ PPP | Losses per unit GDP in % | Number of events (2000-2019) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 (1) | Puerto Rico | 7.17 | 149.85 | 4.12 | 4149.98 | 3.66 | 24 |
| 2 (2) | Myanmar | 10.00 | 7056.45 | 14.35 | 1512.11 | 0.80 | 57 |
| 3 (3) | Haiti | 13.83 | 274.05 | 2.78 | 392.54 | 2.30 | 80 |
| 4 (4) | Philippines | 18.17 | 859.35 | 0.93 | 3179.12 | 0.54 | 317 |
| 5 (14) | Mozambique | 25.83 | 125.40 | 0.52 | 303.03 | 1.33 | 57 |
| 6 (20) | The Bahamas | 27.67 | 5.35 | 1.56 | 426.88 | 3.81 | 13 |
| 7 (7) | Bangladesh | 28.33 | 572.50 | 0.38 | 1860.04 | 0.41 | 185 |
| 8 (5) | Pakistan | 29.00 | 502.45 | 0.30 | 3771.91 | 0.52 | 173 |
| 9 (8) | Thailand | 29.83 | 137.75 | 0.21 | 7719.15 | 0.82 | 146 |
| 10 (9) | Nepal | 31.33 | 217.15 | 0.83 | 233.06 | 0.39 | 191 |


The 10 countries most affected from 2000 to 2019 (annual averages)

## பசுமை வரி

- கூடுதல் வரியை விதிக்க சாலைப் போக்குவரத்து அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- இது சாலையில் ஓடும் பழைய வாகனங்களுக்கு விதிக்கப்படும்.
- பசுமை வரியானது மாசு வரி அல்லது சுற்றுச்சூழல் வரி என்றும் அழைக்கப்படுகிறது.
- மாசுபாட்டைக் கட்டுப்படுத்த இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- இது மாசுபாட்டை உருவாக்குவோரையும் வரி செலுத்த வைக்கும்.
- இது மக்களைச் சுற்றுச்சூழலுக்குப் பாதகமற்ற வாகனங்களுக்கு மாற ஊக்குவிக்கும்.
- பசுமை வரி விதிமுறைகளின் கீழ், எட்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வாகனங்களுக்குத் தகுதிச் சான்றிதழ் புதுப்பிக்கப்படும் நேரத்தில் பசுமை வரி விதிக்கப்படும்.
- இது சாலை வரியில் 10 முதல் 25% வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.
- நகரப் பேருந்துகள் போன்ற பொதுப் போக்குவரத்து வாகனங்கள் குறைந்த பசுமை வரியைச் செலுத்தும்.
- இருப்பினும், டிராக்டர் போன்ற விவசாயத்தில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.




## ஐக்கிய நாடுகள் உலகக் காலநிலை ஆய்வு




- ஐக்கிய நாடுகள் ஆனது காலநிலை மாற்றம் குறித்த தனது மிகப்பெரிய கருத்துக் கணிப்பை வெளியிட்டுள்ளது.
- இது "ஐக்கிய நாடுகள் உலகக் காலநிலை ஆய்வு" எனப்படுகின்றது.

- ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டமானது இந்த அறிக்கையைத் தயார் செய்வதற்காக வேண்டி 50 நாடுகளைச் சேர்ந்த 1.2 மில்லியன் மக்களிடம் "மக்களின் காலநிலை வாக்கெடுப்பை" நடத்தியுள்ளது.

*முக்கிய அம்சங்கள்*

- மூன்றில் இரண்டு பகுதி மக்கள் இதனை "உலக அவசர நிலையாக" கருதுகின்றனர்.
- 14 – 18 வயதுடைய 69% மக்கள் ஒரு காலநிலை அவசர நிலை உள்ளதாக கூறுகின்றனர்.
- 60 வயதிற்கு மேற்பட்ட மக்களில் 58% மக்கள் இதனை ஒப்புக் கொள்கின்றனர்.
- அமெரிக்காவில் 65% மக்களும் ஆஸ்திரேலியாவில் 76% மக்களும் ரஷ்யாவில் 51% மக்களும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு ஆதரவாக உள்ளனர்.
- மரங்களின் பாதுகாப்பானது பிரேசிலில் 60% ஆதரவையும் இந்தோனேசியாவில் 57% ஆதரவையும் பெற்றுள்ளது.

## உலகளாவிய காலநிலை வழக்குகள் அறிக்கை 2021

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பானது தனது "உலகளாவிய காலநிலை வழக்குகள் அறிக்கை 2021" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- கொலம்பியா பல்கலைக்கழகத்தின் காலநிலை மாற்றச் சட்டத்திற்கான சபின் மையத்தின் ஒத்துழைப்புடன் இந்த அறிக்கையை ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பு வெளியிட்டுள்ளது.
- சமீபத்திய ஆண்டுகளில் காலநிலை சார்ந்த வழக்குகள் அதிகரித்துள்ளன என்று இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

*முக்கிய கண்டுபிடிப்புகள்*

- கடந்த மூன்று ஆண்டுகளில் காலநிலை வழக்குகள் கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்துள்ளன.
- இந்த அறிக்கை வழங்கிய தரவுகளின்படி, 2017 ஆம் ஆண்டில் 24 நாடுகளில் 884 வழக்குகள் பதிவாகியுள்ளன.
- 2020 ஆம் ஆண்டின் நிலவரப்படி, 38 நாடுகளிலும் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றங்களிலும் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் 1,550 ஆக அதிகரித்துள்ளன.

## முதலாவது சதுப்பு நிலப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மையம்

- சதுப்பு நிலப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான புதிய மையமானது விரைவில் சென்னையில் அமைக்கப்படவுள்ளது.
- இது சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான அறிவுசார் இடைவெளிகள் மற்றும் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சித் தேவைகளைக் களைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவானது 42 ராம்சார் தளங்களை சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களாகக் கொண்டுள்ளது.
- இது இந்திய நிலப்பரப்பில் 46% என்ற அளவினை உள்ளடக்கியுள்ளது.

## கலிவேலி சதுப்புநிலங்கள் - பறவைகள் சரணாலயம்

- வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம், 1972 என்ற சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்ட நிர்வாகம் முதல் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- கலிவேலி சதுப்புநிலங்களைப் பறவைகள் சரணாலயமாக அறிவிக்கும் முயற்சியில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.
- இது சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதற்கான அவர்களின் முயற்சிகளை அதிகரிக்கச் செய்யும்.
- கலிவேலி சதுப்புநிலங்கள் தென்னிந்தியாவில் இரண்டாவது மிகப் பெரிய உவர்நீர் ஏரியாகும்.
- முதலாவது மிகப் பெரிய உவர்நீர் ஏரி புலிகாட் ஏரியாகும்.
- கலிவேலி ஏரியானது வங்காள விரிகுடாவோடு உப்புக் கள்ளி சிற்றோடை மற்றும் இடையந்திட்டு சரணாலயம் வழியாக இணைக்கப்பட்டுள்ளது.
- இந்தச் சதுப்புநிலத்தின் தெற்குப் பகுதியானது 2001 ஆம் ஆண்டில் ஒரு பாதுகாக்கப் பட்ட நிலமாக அறிவிக்கப்பட்டது.

## இந்தியாவிற்கான 51வது புலிகள் காப்பகம்

Tiger reserves in TN

| Name | Area (in hectares) |
|---|---|
| Mudumalai | 32,100 |
| Kalakad Mundanthurai | 70,654 |
| Anamalai | 95,859 |
| Satyamangalam | 79,349 |
| Srivilliputhur-Megamalai | 1,01,657.13 |


- மத்திய அரசானது தமிழ்நாட்டில் மேகமலை மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகியவற்றின் வனப் பகுதிகளில் பரவியிருக்கும் சரணாலயங்களுக்கு புலிகள் காப்பக அந்தஸ்து என்ற தகுதி நிலையினை வழங்கியுள்ளது.
- இது 63 பாலூட்டி இனங்கள் மற்றும் 323 பறவை இனங்களுக்கு வாழ்விடமாகத் திகழ்கின்றது.
- இது இந்தியாவின் 51வது புலிகள் காப்பகம் மற்றும் தமிழ்நாட்டிற்கான 5வது புலிகள் காப்பகம் ஆகும்.
- மேகமலை வனவிலங்குச் சரணாலயமானது தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் (மேகமலைக் குன்றுகள் மற்றும் ஏலக்காய் மலைகள்) பரவிக் காணப்படுகின்றது.
- ஸ்ரீவில்லிபுத்தூர் நரை மயிர் அணில் வனவிலங்குச் சரணாலயமானது கேரளாவில் பெரியார் புலிகள் காப்பகத்தின் பகுதியோடுச் சேர்ந்து அமைந்துள்ளது.
- 6 ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட கடைசியான ஒரு புலிகள் காப்பகம் அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள காம்லாங் என்பதாகும்.

## இந்தியாவின் இடி மின்னலுக்கான சோதனைத் தளம்

- இந்தியாவின் இடி மின்னலுக்கான முதல் ஆராய்ச்சி சோதனைத் தளமானது ஒடிசாவின் பாலசூரில் நிறுவப் படும்.
- மின்னல் தாக்குதல்களால் ஏற்படும் மனித உயிரிழப்புகள் மற்றும் சொத்து இழப்புகள் ஆகியவற்றைக் குறைக்கும் நோக்கத்துடன் இது நிறுவப்பட்டுள்ளது.
- இது பின்வருவனவற்றின் ஒத்துழைப்பில் நிறுவப்படும். அவை
    - பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு,
    - புவி அறிவியல் அமைச்சகம்,
    - இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு மற்றும்
    - இந்திய வானிலை ஆய்வுத் துறை.
- மத்தியப் பிரதேசத்தின் போபால் அருகே பருவமழைக்கான ஒரு சோதனைத் தளமும் அமைக்கப் பட உள்ளது.
- பருவமழைக்கான ஒரு சோதனைத் தளம் அமைக்கப்படுவது இம்மாதிரியான ரீதியில் இதுவே முதல் வகையாகும்.

## பனிப்பாறை உடைப்பால் தூண்டப்பட்ட வெள்ளம்

- உத்தரகாண்ட் மாநிலத்தின் சாமோலி மாவட்டத்தில் உள்ள அலக்நந்தா ஆற்றில் பனிச்சரிவு மற்றும் திடீர் வெள்ளம் ஏற்பட்டது.
- இது பனிப்பாறைச் சரிவிற்குப் பிறகு ஏற்பட்டது.
- இந்தப் பனிச்சரிவு ஆனது பனிப்பாறை உடைப்பு /பிளவு காரணமாக இருக்கலாம்.
- சாமோலி மாவட்டத்தின் ரெய்னி என்ற கிராமத்தில் உள்ள ஓர் ஏரியையும் இது உடைத்து உள்ளது.
- ரெய்னி கிராமமானது நந்தாதேவி உயிர்க் கோளக் காப்பகத்தின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது.



- பனி மற்றும் பனிச்சரிவு ஆய்வு நிறுவனம் இது குறித்து விசாரித்து வருகிறது.
- இது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் கீழ் செயல்படுகிறது.
- இந்த உடைப்பால் தௌலிகங்கா நதி மற்றும் ரிஷி கங்கா நதி ஆகியவற்றில் நீர் மட்டம் அதிகரித்து உள்ளது.
- பனிச்சரிவானது ரிஷிகங்கா ஆற்றில் உள்ள ரிஷி கங்கா நீர்மின் நிலையத்தை முழுவதுமாகச் சேதப் படுத்தி விட்டது.

## இந்தியாவின் முதல் புவிவெப்ப மின் உற்பத்தி திட்டம்

- இந்தியாவின் முதல் புவிவெப்ப மின் உற்பத்தி திட்டம் கிழக்கு லடாக்கின் புகா கிராமத்தில் நிறுவப் படும்.
- புகா கிராமமானது புவிவெப்ப ஆற்றலின் முக்கியப் பகுதியாக விஞ்ஞானிகளால் அடையாளம் காணப் பட்டுள்ளது.
- இந்தப் புவி வெப்பத் திட்டம் புவிவெப்பப் புலம் மேம்பாட்டு திட்டம் என்று அழைக்கப் படுகிறது.

## மாசுபடுத்துவோர்களைக் கண்காணிக்க பொதுமக்கள் தளம்

- சீனாவின் சுற்றுச்சூழல் அமைச்சகம் சமீபத்தில் ஒரு புதிய பொது தகவல் தளத்தை அமைப்பதாக அறிவித்துள்ளது.
- இது மாசுபடுத்தும் நிறுவனங்களிலிருந்து உமிழ்வைக் கண்காணிக்க பொதுமக்களை அனுமதிக்கும்.
- இந்தத் தளம் விதிகளை மீறும் பொதுமக்கள் மீது வழக்குத் தொடர அதிகாரிகளுக்கு உதவும்.
- பொதுமக்கள் இந்த மேற்பார்வையைத் தவிர்க்க முயன்றாலும் இது அவர்கள் மீது வழக்குத் தொடரும்.

## மாண்டரின் வாத்து

- 118 ஆண்டுகளுக்குப் பிறகு அஸ்ஸாமில் மாண்டரின் வாத்து காணப்பட்டு உள்ளது.
- இது கிழக்கு சீனா மற்றும் தெற்கு ஜப்பானை வாழ்விடங்களாகக் கொண்ட ஒரு வண்ணமயமான வாத்தாகும்.
- முன்னதாக மாண்டரின் வாத்தானது 1902 ஆம் ஆண்டில் அசாமில் காணப்பட்டது.




## தாமிரபரணி நீர்ப் பறவைகள் கணக்கெடுப்பின் 11வது பதிப்பு

- இது திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் உள்ள நீர்நிலைகளில் மேற்கொள்ளப்பட்டது.
- இது 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 10வது நீர்ப்பறவைகள் கணக்கெடுப்புடன் ஒப்பிடும் பொழுது அங்கு பறவைகளின் எண்ணிக்கையானது கணிசமான அளவில் அதிகரித்துள்ளதைக் காட்டுகின்றது.
- அந்தக் கணக்கெடுப்பில் 74 இனங்களைச் சேர்ந்த 24,411 பறவைகள் காணப்பட்டன.
- இந்த ஆண்டில், சைபீரியா மற்றும் மங்கோலியா ஆகியவற்றிலிருந்து வந்த ஆயிரக் கணக்கான வலசை போகும் பறவைகள் உள்ளிட்ட 73 இனங்களைச் சேர்ந்த 26,862 பறவைகள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

## ‘டிக்கின்சோனியா’ விலங்கின் புதைபடிவங்கள்

- 550 மில்லியன் ஆண்டுகள் பழமையான ‘டிக்கின்சோனியா’ என்ற பழங்காலத்தில் வாழ்ந்த விலங்கின் மூன்று புதைபடிவங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.
- இது போபாலுக்கு அருகிலுள்ள பீம்பேட்கா பாறை வாழிடத்தில் கண்டுபிடிக்கப் பட்டது.
- இதில் ஒரு புதைபடிவம் 17 அங்குல நீளம் கொண்டது, மற்ற இரண்டு மிகவும் சிறியவை ஆகும்.




## முதலாவது உயர்த்தப்பட்ட வனவிலங்கு பெருவழிப் பாதை

- தில்லி – டேராடூன் விரைவுச் சாலையானது நாட்டின் முதலாவது உயர்த்தப்பட்ட வனவிலங்கு பெருவழிப் பாதையாக விளங்குகின்றது.
- இந்தத் திட்டமானது 12 கிலோ மீட்டர் வரை பரந்து விரிந்து, 6 வழிப் பாதையாக ஒரு உயர்த்தப்பட்ட வனவிலங்கு பெருவழிப் பாதையைக் கொண்டிருக்கும்.
- இந்த விரைவுச் சாலை வனவிலங்குப் பகுதிகளைக் கடக்கும் பகுதிகளைக் கொண்டு இருப்பதால், இது வன விலங்குகளைப் பாதுகாப்பதின் மீது கவனம் செலுத்துகின்றது.




## ஆலிவ் ரிட்லீ ஆமைகள் – அடை காத்தல்

- ❖ மிகப் பெரிய அளவிலான ஆலீவ் ரிட்லீ அடை காத்தல் நிகழ்வானது புதுச்சேரி கடற்கரையில் தொடங்கியுள்ளது.
- ❖ புதுச்சேரிக் கடற்கரையானது இந்த வகை ஆமைகளால் ஒடிசாவிற்குச் செல்ல பயன்படுத்தப் படும் வலசைப் பாதை வழிகளில் ஒன்றாகும்.
- ❖ இந்தக் கடற்கரையானது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972 என்ற சட்டத்தின் முதலாவது அட்டவணையில் பட்டியலிடப் பட்டுள்ளது.
- ❖ இந்த ஆமைகள் பொதுவாக பசிபிக் ரிட்லீ கடல் ஆமைகள் எனப்படுகின்றன.
- ❖ இது ஐயூசிஎன் (IUCN) பட்டியலில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய ஒரு இனமாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.
- ❖ மேலும் இது CITES நிறுவனத்தின் பட்டியல்-I என்பதிலும் பட்டியலிடப்பட்டுள்ளது.



## உலகின் மிகச்சிறிய ஊர்வன உயிரினம்

- உலகின் மிகச்சிறிய ஊர்வன வகையைச் சேர்ந்த உயிரினமானது மடகாஸ்கரில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- ஒரு பச்சோந்தியின் இனமான இது ப்ரூக்ஸியா நானா என்று அழைக்கப்படுகிறது.
- அறியப்பட்ட 11,500 வகை ஊர்வனவற்றில் இதுவே மிகச்சிறிய இனமாகும்.
- இப்பச்சோந்தியின் நீளம் 22 மி.மீ ஆகும், அதாவது மொத்தத்தில் 0.86 அங்குலமாகும்.



## பழமையான டிஎன்ஏ கண்டெடுப்பு

- விஞ்ஞானிகள் சைபீரியாவைச் சேர்ந்த மாமூத்தின் பற்களிலிருந்து டிஎன்ஏ-வை எடுத்துள்ளனர்.
- இந்த டிஎன்ஏ ஆனது அந்த மாமூத்தின் கடைவாய்ப் பல்லிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டது.
- இந்த மாமூத்கள் ஏறத்தாழ சில 1.2 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வட கிழக்கு சைபீரியாவில் காணப்பட்டது.
- இந்த டிஎன்ஏ ஆனது 3 தனிப்பட்ட மாமூத்களின் எச்சங்களிலிருந்துப் பிரித்தெடுக்கப் பட்டு, தொகுக்கப் பட்டுள்ளது.
- இந்த உயிரினங்கள் பனியூழிக் கால நிலப்பகுதியில் வாழ்ந்த மிகப்பெரிய பாலூட்டி வகைகளில் ஒரு இனமாக விளங்கியது.
- இந்த உயிரினங்கள் மறைந்து போன எலிபண்டைட் என்ற மரபணு உயிரினத்தின் ஒரு இனமாகும்.



## மங்களூரில் காணப்படும் அரியவகை பறவைகள்

- Yellow-Billed Babbler, Green Sandpiper மற்றும் Grey-Necked Bunting ஆகிய அரியவகை பறவைகள் மங்களூர் பல்கலைக் கழகத்தில் காணப்பட்டன.
- பறவைக் கண்காணிப்பாளர்கள் குழுவானது மங்களூர் பல்கலைக் கழகத்தில் 108 வகையான பறவைகளைக் கண்டறிந்துள்ளது.
- மங்களூர் பல்கலைக் கழகமானது தனது வளாகத்தில் இந்த பறவைகள் கணக்கெடுப்பை நடத்தி வந்தது.
- இந்த வளாக பறவைகள் கணக்கெடுப்பானது மிகப்பெரிய வளாக பறவைகள் கணக்கெடுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இதை இந்தியப் பறவைகள் கணக்கெடுப்பு அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

## நீல மண்புழுக்களின் பெருந்திரள் இடப்பெயர்வு

- மேகாலய மாநிலத்தில் நீல மண்புழுக்களின் இருவழி பெருந்திரள் இடப்பெயர்வு குறித்து இந்திய விலங்குகள் கணக்கெடுப்பு நிறுவனம் அறிக்கை தயாரித்துள்ளது.
- மண்புழுக்களின் மேல்நோக்கிய இடப்பெயர்வானது (Uphill migration) ஏப்ரல்-மே மாதங்களில் தொடங்குகிறது.
- பருவமழை தொடங்கியவுடன், அவை ஆறுகள் மற்றும் நீரோடைகளில் இருந்து வெளிப்படுகின்றன.
- செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் தாவரங்கள் வறண்டு, வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் குறையும் போது கீழ் நோக்கி இடப்பெயர்வு (Downhill migration) ஏற்படுகிறது.
- நீல மண்புழுவின் அறிவியல் பெயர் Perionyx excavates என்பதாகும்.
- இது உரப் புழுக்கள், ப்ளூஸ் அல்லது இந்திய ப்ளூஸ் என்றும் அழைக்கப்படுகிறது.

## பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைவு

- அமெரிக்க அதிபர் ஜோ பிடனின் ஆட்சியில் அமெரிக்காவானது பாரிஸ் ஒப்பந்தத்தில் அதிகாரப் பூர்வமாக மீண்டும் இணைந்துள்ளது.
- முன்னதாக 2020 ஆம் ஆண்டு நவம்பரில், அப்போதைய அதிபர் டொனால்ட் டிரம்பின் உத்தரவின் பேரில் அமெரிக்காவானது அதிகாரப்பூர்வமாக அந்த ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியது.
- முக்கியத்துவம் வாய்ந்த பாரிஸ் காலநிலை ஒப்பந்தமானது 2015 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தத்தின் படி, ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைத் தடுப்பதற்கான உறுதிப்பாட்டை நாடுகள் அதிகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- புவி வெப்பமடைதலை 2 டிகிரி செல்சியஸுக்கும் குறைவாக கட்டுப்படுத்துவதே இந்த உலகளாவிய ஒப்பந்தத்தின் குறிக்கோளாகும்.

- இதை 1.5° C ஆகக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைத் தொடர்வதையும் இது நோக்கமாக கொண்டு உள்ளது.

### கழுகுகளுக்கு நஞ்சாக அமையும் மருந்துகளுக்குத் தடை

- வலி நிவாரணியான கீட்டோபுரோஃபின் (ketoprofen) எனும் மருந்தைத் தடை செய்த முதல் நாடாக வங்கதேசம் மாறியுள்ளது.
- இந்த வலி நிவாரணியானது கால்நடைகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக வேண்டி பரவலாக பயன்படுத்தப் படுகிறது.
- ஆனால் இந்த வலி நிவாரணியானது கழுகுகளுக்கு நச்சுத் தன்மை வாய்ந்ததாக அமைகிறது.
- 2006 ஆம் ஆண்டில் கால்நடைகளின் பயன்பாட்டிற்காக டைக்ளோஃபினாக் (diclofenac) எனும் மருந்தைப் பயன்படுத்துவதை இந்திய அரசு தடை செய்துள்ளது.
- அரேபிய தீபகற்பத்தில் கால்நடைகளின் பயன்பாட்டிற்காக டைக்ளோஃபினாக் மருந்தினைத் தடை செய்த முதல் நாடு ஓமன் ஆகும்.

## மாநிலச் செய்திகள்

### பொதுச் சுகாதாரப் பள்ளி - இராஜஸ்தான்

- இராஜஸ்தான் மாநிலமானது புதிய பொதுச் சுகாதாரப் பள்ளி ஒன்றைத் தொடங்கி உள்ளது.
- இந்தப் பள்ளியானது பொதுச் சுகாதாரத் திறன்களைக் கட்டமைப்பதில் கொள்கை இடையீட்டை ஏற்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.
- இது இராஜஸ்தானில் நிலவுகின்ற கல்வி மற்றும் நடைமுறைகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கு ஒரு பாலமாக உதவ இருக்கின்றது.
- இந்திய சுகாதார மேலாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் நினைவாக இந்தப் பள்ளிக்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.

### 2 விரைவு ஓடுபாதைகளைக் கொண்ட முதலாவது மாநிலம்

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள பூர்வாஞ்சல் விரைவு வழியில் அமைந்திருக்கும் குரேபாருக்கு அருகில் 3300 மீட்டர் நீளமுடைய ஒரு விமான ஓடுபாதை கட்டமைக்கப் பட்டு இருக்கின்றது.
- இந்தப் புதிய ஓடுபாதையின் மூலம், விரைவுப் பாதையின் மீது 2 ஓடுபாதைகளைக் கொண்ட இந்தியாவின் முதலாவது மாநிலம் உத்தரப் பிரதேசம் ஆகும்.
- ஏற்கனவே உத்தரப் பிரதேச மாநிலமானது லக்னோ-ஆக்ரா விரைவுப் பாதையின் மீது ஒரு ஓடுபாதையைக் கொண்டுள்ளது.
- போர் விமானங்களின் அவசர காலத் தரையிறக்கம் மற்றும் மேல் எழும்புதல் ஆகியவற்றிற்காக விரைவுப் பாதையின் மீது ஓடுபாதையானது அமைக்கப் படுகின்றது.

## இளம் வாசகர்களின் முதல் படகு நூலகம்

- மேற்கு வங்க போக்குவரத்துக் கழகமானது இளம் வாசகர்களுக்கான முதல் படகு நூலகத்தைத் தொடங்கியுள்ளது.
- ஹெரிடேஜ் புத்தகக் கடையுடன் இணைந்து இந்நூலகம் தொடங்கப்பட்டுள்ளது.
- இது ஒரு படகில் துவங்கப்பட்டுள்ளது.
- இது இம்மாதிரியான முதல் முயற்சியாகும்.
- இந்தப் படகு நூலகம் ஹூக்ளி ஆற்றில் பயணிக்கும்.



## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சீர்திருத்தங்களை நிறைவேற்றிய 5வது மாநிலம்.

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிய நாட்டின் 5வது மாநிலமாக ராஜஸ்தான் மாறியுள்ளது.
- இதை மத்திய நிதி அமைச்சகத்தின் செலவினங்கள் துறை குறிப்பிட்டுள்ளது.
- ராஜஸ்தான் இப்போது கூடுதல் சீர்திருத்தங்களுடன் இணைக்கப்பட்ட கடனைப் பெற தகுதியுடையது ஆகும்.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சீர்திருத்தங்களை நிறைவு செய்த இதர பிற மாநிலங்கள் - மணிப்பூர், ஆந்திரா, மத்தியப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகியன ஆகும்.

## முதல் பாலினப் பூங்கா

- நாட்டின் முதல் “பாலினப் பூங்கா” கேரளாவில் விரைவில் துவங்கப்படும்.
- மூன்று கோபுரங்கள் கொண்ட இந்தப் “பாலினப் பூங்காவானது” பாலினச் சமத்துவத்தை நோக்கிய அரசின் ஒரு முன்னெடுப்பாகும்.
- பாலினச் சமத்துவம் தொடர்பான சர்வதேச மாநாட்டின் இரண்டாம் பதிப்போடுப் பொருந்திய வண்ணம் பிப்ரவரி 11 ஆம் தேதி இது துவங்கப்படும்.
- அந்நாளில், சர்வதேச மகளிர் வர்த்தக மற்றும் ஆராய்ச்சி மையத்தின் அடித்தளமும் அமைக்கப்படும்.




## "முன்னோடி நிலையை நோக்கி கேரளா"

- கேரள மாநில முதல்வரான பினராயி விஜயன் அவர்கள் "முன்னோடி நிலையை நோக்கி கேரளா" என்ற ஒன்றைத் தொடங்கி வைத்தார்.
- இது 3 நாட்கள் கால அளவுள்ள காணொலி வாயிலான ஒரு உலக மாநாடாகும்.
- இது கேரளாவில் நீண்டகால மேம்பாட்டிற்கான செயல்திட்டத்தை வடிவமைக்கக் கோருகின்றது.
- இந்த மாநாடானது கேரள மாநில திட்டமிடல் வாரியத்தினால் நடத்தப்பட்டது.
- இந்தக் கருத்தரங்கானது விவாதங்களுடன் கூடிய 9 கருத்துருக்களை உள்ளடக்கி உள்ளது.

## கேரளாவின் முதலாவது தாய்ப்பால் வங்கி

- "வாழ்வின் அமிழ்தம்" எனப்படும் கேரளாவின் முதலாவது தாய்ப்பால் வங்கியானது எர்ணாகுளம் அரசு பொது மருத்துவமனையில் திறக்கப்பட்டுள்ளது.
- இது கொச்சின் குளோபல் ரோட்டரி சங்கத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.




- இது புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்குத் தமது தாயால் தாய்ப்பால் அளிக்கப்படாத நிலையில் உள்ள புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்குத் தாய்ப்பால் வழங்குவதை உறுதி செய்யவுள்ளது.

## கர்நாடகாவில் லித்தியம் இருப்பு

- கர்நாடகாவின் மாண்டியா மாவட்டத்தில் 1600 டன் லித்தியம் இருப்பதை மத்திய அரசு உறுதிப் படுத்தியுள்ளது.
- மார்லகல்லா - அல்லபட்னா என்ற பிராந்தியத்தின் பெக்மாட்டைடு பகுதிகளில் அதன் மேற்பரப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட மேற்பரப்பு ஆகியவற்றின் கீழ்ப்பகுதியில் இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.
- இதை ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்கான அணுத் தாதுக்கள் இயக்குநரகம் (Atomic Minerals Directorate for Exploration and Research) மேற்கொண்டது.
- AMD (Atomic Minerals Directorate) என்பது அணுசக்தித் துறையின் கீழ் உள்ள ஒரு பிரிவாகும்.
- இந்தியாவின் முதல் லித்தியம் ஆலை 2021 ஆம் ஆண்டில் குஜராத்தில் அமைக்கப் பட்டது.

## இந்தியாவின் முதல் பனிக்குடில் உணவகம் (இக்லூ கஃபே)


- இது பனியால் கட்டப்பட்ட நாட்டின் முதல் உணவகமாகும்.
- இது ஆசியாவின் மிகப்பெரிய பனிக்குடில் உணவகமாகும்.
- இது காஷ்மீரின் குல்மார்க்கில் உள்ள ஸ்கை ரிசார்ட் என்ற உல்லாச விடுதியில் அமைந்துள்ளது.
- இந்த விடுதி இமயமலையின் பீர்பாஞ்சல் மலைத் தொடரில் 2,650 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.



## ஸ்மைல் நடவடிக்கை

- 2021 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் ஜனவரி 29 வரை 'ஸ்மைல் நடவடிக்கை - VII' என்ற ஒரு நடவடிக்கையின் கீழ், தெலுங்கானாவின் சைபராபாத் போலீசார் 389 குழந்தைகளை மீட்டுள்ளனர்.
- மீட்கப்பட்ட மொத்தக் குழந்தைகளில், 249 குழந்தைகள் (222 சிறுவர்கள் மற்றும் 27 சிறுமிகள்) தெலுங்கானா மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர் மற்றும் 140 குழந்தைகள் (114 சிறுவர்கள் மற்றும் 26 சிறுமிகள்) 14 பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

- 'ஸ்மைல் நடவடிக்கை' என்பதன் கீழ், காணாமல் போன குழந்தைகளின் விவரங்கள் தர்பன் என்ற ஒரு செயலியில் உள்ளிடப்பட்டன.
- இந்தச் செயலியானது தெலுங்கானா காவல்துறை உருவாக்கிய தனித்துவமான ஒரு முக அங்கீகார கருவியாகும்.




## சஹ் பாஹிச்சா தன் புரஸ்கர் மேளா

- சஹ் பாஹிச்சா தன் புரஸ்கர் மேளாவின் 3ம் பதிப்பானது குவஹாத்தியில் தொடங்கப் பட்டது.
- அசாம் மாநில அரசானது தேயிலைத் தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த 7.5 இலட்சம் பேருக்கு நிதியுதவியை அளிக்கவுள்ளது.
- இந்தத் திட்டமானது 2017-18 ஆம் ஆண்டில் அசாம் மாநில அரசால் தொடங்கப் பட்டு உள்ளது.



## நிலம் வைத்திருப்பவர்களை அடையாளம் காண்பதற்கான 16 இலக்க ஒற்றைக் குறியீடு

- உத்தரப் பிரதேச மாநில அரசானது ஒரு தனித்துவ 16 இலக்க ஒற்றைக் குறியீடு வழங்கும் ஒரு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த ஒற்றைக் குறியீடு அந்த மாநிலத்தில் உள்ள அனைத்து வகையான நிலம் வைத்திருப்பவர்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட உள்ளது.
- இதில் முதல் 6 இலக்கங்கள் நிலத்தின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு உள்ளது.
- இதில் உள்ள அடுத்த 4 இலக்கங்கள் நிலத்தின் தனித்துவ அடையாளத்தைக் குறிக்க இருக்கின்றது.
- அதனையடுத்து இதில் உள்ள அடுத்த 4 இலக்கங்கள் நிலத்தின் பிரிவுகளின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.
- கடைசி 2 இலக்கங்கள் அந்தப் பிரிவுகள் தொடர்பான விவரங்களைக் கொண்டு இருக்கும்.
- குடியிருப்பு, வேளாண்மை மற்றும் வணிகம் சார்ந்த நிலம் என நிலத்தின் பிரிவை (கடைசி 2 இலக்கங்கள் மூலம்) அடையாளம் காண முடியும்.

## பரிவார் பெஹ்சான் பத்ரா (PPP) திட்டம்

- PPP என்பது ஹரியானாவில் ஒவ்வொரு குடும்பத்திற்குமான ஒரு 8 இலக்க தனித்துவ அடையாள அட்டை எண் ஆகும்.
- இது பல்வேறு குடிமக்கள் சார்ந்த சேவைகளை எளிதாகவும் நேரடியாகவும் வழங்க வழிவகை செய்கின்றது.
- இந்தத் திட்டங்களின் படி அரசாங்கப் பலன்கள் இதே குறியீட்டைப் பயன்படுத்தி அந்தக் குடும்பங்களுக்கு நேரடியாக வழங்கப்படும்.
- இந்தத் திட்டத்தில் உள்ள தனியுரிமைச் சவால்களின் காரணமாக, இதில் விருப்பத்தின் பேரில் பதிவு செய்து கொள்ளலாம் என்று அரசானது கூறியுள்ளது.
- இது தகுதியுடையவர்கள் தங்களுக்கான அரசுப் பயன்களைப் பெறுவதிலிருந்து ஒருவர் கூட விடுபடாமல் இருப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மின் அமைச்சரவை அமலாக்கம்


- தனது அமைச்சரவையின் மொத்தச் செயலாக்கத்தையும் காகிதமில்லாமல் பணி ஆற்றச் செய்த நாட்டின் முதல் மாநிலமாக இமாச்சலப் பிரதேசம் மாறியுள்ளது.
- மின் அமைச்சரவை என்ற ஒரு செயலியின் அமலாக்கம் மூலம் இது செய்யப்பட்டது.
- அமைச்சரவையின் குறிப்பாணையைப் பெறுதல், அமைச்சரவைக் கூட்டத்தை இறுதி செய்தல், செயலாளர்கள் மற்றும் அமைச்சர்கள் போன்ற பல்வேறு நிலைகளுக்கான அமைச்சரவைக் குறிப்பாணையில் இருந்து பெறப்பட்ட ஆலோசனைகள் போன்ற விஷயங்களை இது கையாள்கிறது.

## மின் துறைச் சீர்திருத்தங்கள் – ஆந்திரப் பிரதேசம்

- நாட்டில் மின் துறைச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்திய 2வது மாநிலம் ஆந்திரப் பிரதேசம் ஆகும்.
- இந்த மாநிலமானது 2020 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட மூன்று சீர்திருத்தங்களில் ஒன்றைச் செயல்படுத்தியுள்ளது.
- மேலும் இது மின் துறைச் சீர்திருத்தங்களைத் தவிர ஒரு நாடு ஒரு குடும்ப அட்டை சீர்திருத்தம், எளிதில் தொழில் தொடங்குதல் தொடர்பான சீர்திருத்தங்கள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றையும் நிறைவு செய்துள்ளது.
- இதற்கு முன்பு, மத்தியப் பிரதேச மாநிலமானது மின் துறையில் அந்த சீர்திருத்தங்களை மேற்கொண்டது.

## தபோவன் விஷ்ணுகாட் மின் ஆலை

- உத்தரகாண்டில் உள்ள தபோவன் என்னும் இடத்திற்கு அருகில் ஏற்பட்ட பனிப்பாறைச் சரிவானது தற்பொழுது கட்டுமானப் பணி நடைபெற்று வரும் தபோவன் விஷ்ணுகாட் நீர்மின் திட்டத்தின் ஒரு பகுதியைப் பாதித்துள்ளது.
- அந்த நாளின் அதிகாலைப் பொழுதில், உத்தரகாண்டின் சமோலி மாவட்டத்தில் உள்ள ஜோஷிமத் என்ற இடத்தில் இருந்த ஒரு பனிக்கட்டியானது உடைந்தது.
- இந்த நிகழ்வானது தவுலி கங்கை நதிப் பகுதியில் மிகப்பெரிய அளவில் வெள்ளத்தை ஏற்படுத்தி உள்ளது.
- தபோவன்-விஷ்ணுகாட் நீர் மின் திட்டத்தின் கட்டுமானப் பணியானது 2006 ஆம் ஆண்டு நவம்பரில் தொடங்கியது.



Comparision of satellite images from 23 Nov 2018 and 9 Feb 2021 shows the extent of damage caused by the flash floods at the NTPC Tapovan project
Satellite image ©2021 Maxar Technologies

## முக்கிய மந்திரி விக்யான் பிரதிபா பரிக்சா திட்டம்

- இந்தத் திட்டத்தின் கீழ் தில்லியில் உள்ள பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு படிக்கும் 1,000 மாணவர்களுக்கு அறிவியல் உதவித் தொகையாக ரூ.5 ஆயிரம் வழங்கப்படும்.
- இந்த உதவித் தொகையானது பள்ளி அளவிலான இடைநிலைக் கல்வி வகுப்புகளில் அறிவியல் கல்விக்கு ஊக்கத்தை அளிக்கும்.

## ‘ஜலாபிஷேகம்’ நீர்ப் பாதுகாப்புப் பிரச்சாரம்

- இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் “ஜலாபிஷேகம் நீர்ப் பாதுகாப்புப் பிரச்சாரம்” என்பதின் கீழ் 57,000 நீர்க் கட்டமைப்புகளைத் திறந்து வைத்தார்.
- இந்த நீர்க் கட்டமைப்புகள் மத்தியப் பிரதேசத்தில் கட்டப் பட்டுள்ளன.
- நீர்ப் பாதுகாப்பு என்ற ஒரு இலக்கை அடையவும், ஒரு தற்சார்பு கொண்ட மாநிலமாக மத்தியப் பிரதேசத்தை உருவாக்கவும் இந்த சேமிப்புப் பணிகள் உதவும்.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சீர்திருத்தங்கள் நிறைவேற்றம்

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் குறித்த சீர்திருத்தங்களை முழுவதும் வெற்றிகரமாக நிறைவேற்றிய இந்தியாவில் உள்ள 6வது மாநிலம் கோவா ஆகும்.
- இந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புச் சீர்திருத்தங்கள் ஆனது செலவினத் துறையினால் உருவாக்கப்பட்டதாகும்.
- இது மாநிலங்களில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதியை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.
- இந்தச் சீர்திருத்தங்கள் தங்களது குடிமக்களுக்கு சிறந்த சுகாதாரம் மற்றும் துப்புரவு வசதியை ஏற்படுத்துவதற்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்குகின்றது.
- இச்சீர்திருத்தங்களை மேற்கொண்ட இதர 5 மாநிலங்கள் ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மணிப்பூர், இராஜஸ்தான் மற்றும் தெலுங்கானா ஆகியவையாகும்.

## 'கோவிட் முன்களப் பணியாளர்கள்' நினைவுச்சின்னம்


- புவனேஸ்வரில் பிஜு பட்நாயக் பூங்காவில் கோவிட் முன்களப் பணியாளர்களுக்கான நினைவுச் சின்னத்தை அமைக்க ஒடிசா அரசு முடிவு செய்துள்ளது.
- இந்தக் கொள்ளை நோயை எதிர்த்து உயிரை இழந்த கோவிட் மாவீரர்கள் செய்த தியாகத்தையும் சேவைகளையும் அங்கீகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## காலநிலை தாங்குந்தன்மை மேம்பாட்டு வழிப்பாதை

- பீகார் மாநிலமானது 2040 ஆம் ஆண்டில் காலநிலை தாங்குந்தன்மை மற்றும் குறைந்த கார்பன் மேம்பாடு ஆகியவற்றை அடைவதற்காக ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்துடன் (UNEP) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- UNEP ஆனது பல்வேறு துறைகளின் கார்பன் வழித் தடங்களை ஆய்வு செய்வதற்காக பல்துறையைக் கொண்ட ஒரு அணிக்குத் தலைமை தாங்க உள்ளது.
- இதுபோன்ற ஒரு ஒப்பந்தத்தை UNEP அமைப்புடன் கையெழுத்திடும் முதலாவது இந்திய மாநிலம் பீகார் ஆகும்.

## வளர்ச்சித் திட்டங்கள் - கேரளா

- பிரதமர் அவர்கள் கொச்சியில் உள்ள ஒரு முக்கிய எண்ணெய் நிறுவனமான பாரத் பெட்ரோலியத்தின் புரொப்பிலீனிலிருந்து பெறப்படும் பெட்ரோலிய வேதிமத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இவர் வெலிங்டன் தீவில் உள்நாட்டு நீர்வழியின் மீதான ரோ-ரோ படகுச் சேவையை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.
- இவர் கொச்சின் துறைமுக அறக்கட்டளையின் சர்வதேசக் கடல் வள முனையம் மற்றும் கொச்சின் கப்பல் கட்டும் தளத்தின் விக்யான் சாகர் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.
- இது இந்தியாவின் முதலாவது முழுமையான சர்வதேசக் கடல் வள முனையமாகும்.
- மேலும் இவர் கொச்சின் துறைமுக அறக்கட்டளையின் தெற்கு நிலக்கரிப் படுகைக்கான அடிக்கல்லையும் நாட்டினார்.




## ராஜஸ்தான் சிறை விதிகள் - 1951

- ராஜஸ்தான் அரசானது 1951 ஆம் ஆண்டின் ராஜஸ்தான் சிறை விதிகளைத் திருத்தியது.
- இந்த நடவடிக்கையானது சாதி அடிப்படையில் வேலை ஒதுக்குவதை நீக்குதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முன்னதாக, சிறைக்குள் நுழையும் ஒவ்வொரு நபரிடமும் அவரது சாதி குறித்து கேட்கப் பட்டன.
- அவர்களின் சாதி அடையாளம் காணப்பட்டவுடன் கழிப்பறைகளைச் சுத்தம் செய்தல், சிறைச்சாலையைத் துடைப்பது போன்ற மோசமான வேலைகள் அவர்களுக்கு ஒதுக்கப் பட்டன.

## 'ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை முறை' சீர்திருத்தம்

- "ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை முறை" என்ற சீர்திருத்தத்தை வெற்றிகரமாக மேற்கொண்ட 13வது மாநிலமாக பஞ்சாப் மாறியுள்ளது.
- இதனால், திறந்தநிலைச் சந்தைக் கடன் மூலம் ரூ.1,516 கோடி கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்ட அந்த மாநில அரசு தகுதி பெற்றுள்ளது.

- இதற்கான அனுமதியானது மத்தியச் செலவினங்கள் துறையால் வழங்கப்பட்டது.


| Sl.No. | State | Amount (Rs in crore) |
|---|---|---|
| 1. | Andhra Pradesh | 2,525 |
| 2. | Goa | 223 |
| 3. | Gujarat | 4,352 |
| 4. | Haryana | 2,146 |
| 5. | Karnataka | 4,509 |
| 6. | Kerala | 2,261 |
| 7. | Madhya Pradesh | 2,373 |
| 8. | Punjab | 1,516 |
| 9. | Rajasthan | 2,731 |
| 10. | Tamil Nadu | 4,813 |
| 11. | Telangana | 2,508 |
| 12. | Tripura | 148 |
| 13. | Uttar Pradesh | 4,851 |

## சிறிய அருங்காட்சியகங்கள்

- சிறிய அருங்காட்சியகங்களை மாநிலத்தில் நிறுவி ஊக்குவிக்கும் முயற்சியை கேரள அரசு தொடங்கியுள்ளது.
- இந்தப் புதிய அருங்காட்சியக இயக்கமானது கேரளம் அருங்காட்சியகம் என்ற அமைப்பால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது அருங்காட்சியகங்களை உருவாக்கி நவீனமயமாக்கும் ஓர் அமைப்பாகும்.
- கொச்சி கோட்டை பகுதியில் உள்ள பாஸ்டன் மாளிகையானது எர்ணாகுளம் மாவட்டப் பாரம்பரிய அருங்காட்சியகமாக செயல்படும் என்றும் அம்மாநில அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

## மண்டு விழா

- மத்தியப் பிரதேசத்தின் தார் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான மண்டுவில் "மண்டு விழா" தொடங்கியது.
- பண்டைய மண்டு நகரத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் காட்சிப்படுத்தும் வகையில் இந்த விழா உள்ளது.
- இந்த விழாவின் போது, மண்டுவில் புதிதாக கட்டப்பட்ட டைனோ சாகசப் பூங்கா மற்றும் புதைபடிவ அருங்காட்சியகம் ஆகியவை திறந்து வைக்கப்பட்டன.




## "மா" உணவகங்கள்

- மேற்கு வங்க மாநிலமானது அம்மாநிலத்தில் உள்ள ஏழைகளுக்கு மிகக் குறைந்த விலையில் உணவை அளிப்பதற்காக ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது "மா" உணவகங்கள் என்று அழைக்கப்படுகின்றது.
- இது ஏழைகளுக்கு மதியத்தில் மாநில அரசால் மானிய விலையில் வழங்கப் படுகின்றது.



## கொச்சி நீர் மெட்ரோ திட்டம்

- கொச்சி நீர் மெட்ரோவின் முதல் பாதை மற்றும் நீர் நிலையங்களை கேரள முதல்வர் பினராயி விஜயன் திறந்து வைத்துள்ளார்.
- இந்தத் திட்டம் அதிநவீனப் படகுகளின் உதவியுடன் அந்த நகரம் முழுவதும் உள்ள தீவுகளை இணைக்கிறது.
- இந்த மெட்ரோவை மட்டும் அல்லாமல், முதல்வர் பனம்குட்டி பாலத்தையும் திறந்து வைத்தார்.
- இது பெட்டா பாலம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ஒருங்கிணைந்த நகர மீளுருவாக்கம் மற்றும் நீர்ப் போக்குவரத்து அமைப்பு என்ற திட்டத்தையும் (Integrated Urban Regeneration and Water Transport System) அவர் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டமானது கொச்சியில் 34 கி.மீ தூரத்திற்கு ஆறு பெரிய கால்வாய்களைப் புதுப்பிக்கும்.

## உ.பி. அபுதயா திட்டம்

- போட்டித் தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்க வேண்டி உ.பி. அபுதயா எனும் ஒரு திட்டத்தை உத்தரப் பிரதேச அரசு தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு இணைய வழியில் அல்லது நேரில் இலவசப் பயிற்சி வகுப்புகள் எடுக்கப்படும்.
- இதில் JEE, NEET, NDA, CDS மற்றும் UPSC ஆகியவை அடங்கும்.

## KFC கழகத்தின் பற்று அட்டைகள்

- கேரள நிதியியல் கழகமானது (KFC) விரைவில் பற்று அட்டைகளை வெளியிட உள்ளது.
- KFC என்பது அரசால் நிர்வகிக்கப்படும் முன்னணியில் உள்ள ஒரு நிதியியல் நிறுவனம் ஆகும்.
- இந்த அட்டைகள் பொதுத் துறை வங்கிகளால் அடையாளப்படுத்தப் படும்.
- இந்த அட்டைகள் ரூபே மற்றும் பிளாட்டினம் அட்டை வடிவங்களில் வெளியிடப்படும்.
- பற்று அட்டைகளை மாநில அரசின் நிதியியல் கழகம் வெளியிடுவது நாட்டில் இதுவே முதல்முறையாகும்.

## உலகின் மர நகரம்





- ஹைதராபாத் நகரமானது (தெலுங்கானாவின் தலைநகரம்) '2020 ஆம் ஆண்டிற்கான உலக மர நகரமாக' அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ஆர்பர் டே அறக்கட்டளை மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு இந்த அங்கீகாரத்தை வழங்கியது.

- இந்த அறக்கட்டளையின் இரண்டாம் ஆண்டு திட்டத்தின் மூலம் உலகின் பிற 51 நகரங்களுடன் சேர்ந்து ஹைதராபாத் இந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- இதில் பெரும்பாலான நகரங்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவை.
- இந்த அங்கீகாரத்தை பெற்ற ஒரே இந்திய நகரம் இதுதான்.

## ‘ஸ்னேக்பீடியா’ கைபேசி செயலி

- கேரளாவில் உள்ள விஞ்ஞானிகள், மருத்துவர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்கள் அடங்கிய குழுவானது “ஸ்னேக்பீடியா” என்ற கைபேசி செயலியை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது பொதுமக்களுக்கும் மருத்துவர்களுக்கும் பாம்பு கடித்தால் சிகிச்சையளிக்க உதவும் வகையில் பாம்புகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் வழங்கும்.
- இந்தச் செயலியின் முக்கிய நோக்கங்கள் - பாம்புகளை அடையாளம் காண பொதுமக்களுக்கு உதவுவதும், பாம்பு கடித்தவர்களுக்கு சரியான நேரத்தில் சரியான சிகிச்சையைப் பெறுவதும், பாம்புகளைப் பற்றிய கட்டுக்கதைகளை விளக்குவதும், பாம்புகளையும் பாம்புக் கடியால் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாப்பதும் ஆகும்.




## மா சமலேஸ்வரி சன்னதிக்கான தொகுப்பு

- ஒடிசா மாநில அரசானது ‘சமலே’ என்ற ஒரு திட்டத்திற்காக வேண்டி மேலாண்மைப் பணிகளைத் தொடங்கியுள்ளது.
- சமலே என்பது சமலேஸ்வரி கோயில் பகுதி மேலாண்மை மற்றும் உள்ளூர் பொருளாதார முன்னெடுப்புகள் என்பதாகும்.
- இது சுற்றுலா பயணிகளுக்கும் பக்தர்களுக்கும் தெய்வீக அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேற்கு ஒடிசாவின் முதன்மை தெய்வமான மா சமலேஸ்வரியின் சன்னதி மற்றும் அதைச் சுற்றியுள்ள 108 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்வது இந்தத் திட்டத்தில் அடங்கும்.

## புகலூர் - திருச்சூர் மின் விநியோக திட்டம்

- 320 கிலோ வாட் புகலூர் (தமிழ்நாடு) - திருச்சூர் (கேரளா) மின் விநியோக திட்டத்தை பிரதமர் அவர்கள் திறந்து வைத்தார்.
- இது ஒரு மின்னழுத்த மூல மாற்றி (Voltage Source Convertor - VSC) அடிப்படையிலான உயர் மின்னழுத்த நேரடி மின்னோட்ட வகை (High Voltage Direct Current) திட்டமாகும்.
- இது அதிநவீன VSC தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள இந்தியாவின் முதல் உயர் மின்னழுத்த நேரடி மின்னோட்ட இணைப்பைக் கொண்டுள்ளது.
- இந்த VSC அடிப்படையிலான அமைப்பு HVDC XLPE (குறுக்குவாக்காக இணைக்கப்பட்ட பாலி எத்திலீன்) கம்பி வடத்தை மேல்நிலை கம்பி வடங்களுடன் ஒருங்கிணைப்பதாக உள்ளது.
- வழக்கமான உயர் மின்னழுத்த நேரடி மின்னோட்ட அமைப்புடன் ஒப்பிடும்போது இந்த இணைப்பு அதன் பரிமாற்றத்தில் ஏற்படும் இழப்பைச் சேமிப்பதுடன் 35-40% அளவிற்கு குறைவான நிலப் பயன்பாட்டையும் கொண்டுள்ளது.




## பள்ளிகளுக்கு 100% குழாய் நீர் இணைப்புகள்

- தெலுங்கானா அரசானது அம்மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் மற்றும் அங்கன்வாடிகளுக்கும் குழாய் நீர் இணைப்புகளை வழங்கியுள்ளது.
- நல்கொண்டா மாவட்டம் மற்ற அனைத்து மாவட்டங்களை விடவும் அதிக பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளை இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ள மாவட்டமாகும்.
- முன்னதாக, தெலுங்கானாவானது கோவாவுடன் சேர்ந்து அனைத்து வீடுகளுக்கும் குழாய் இணைப்புகளை வழங்கியதற்கான ஒரே ஒரு மாநிலமாக உருவெடுத்தது.
- இது ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஜல் சக்தி அமைச்சகத்தின் 100 நாள் சிறப்புப் பிரச்சாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## ஹோஷங்காபாத் நகரத்தை மறுபெயரிடுதல்

- மத்தியப் பிரதேச முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான், ஹோஷங்காபாத் நகரத்தை நர்மதாபுரம் என்று பெயர் மாற்றுவதாக அறிவித்துள்ளார்.
- ஹோஷாங் ஷா என்பவரால் இந்நகரத்திற்கு ஹோஷாங்காபாத் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இவர் மால்வாவின் முதல் ஆட்சியாளராக இருந்தார்.

- இந்த மாவட்டம் நெர்புடா (நர்மதா) பிரிவு மற்றும் பெராரின் ஒரு பகுதியாக இருந்தது.
- ஹோஷங்காபாத் ஆனது நர்மதா ஆற்றின் குறுக்கே உள்ள அழகான மலைத் தொடர்களால் பிரபலமானது.

## சிங்கப்பூருக்கு காலா நமக் அரிசி

- உத்தரப் பிரதேசமானது 20 டன் காலா நமக் அரிசியை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்ய உள்ளது.
- இந்த அரிசியை சித்தார்த் நகரின் 'ஒரே மாவட்டம் ஒரே தயாரிப்பு' என்றும் மாநில அரசு அறிவித்துள்ளது.
- இந்த அரிசி புத்தர் அரிசி என்றும் அழைக்கப்படுகிறது.
- விரைவில், காலா நமக் அரிசி திருவிழாவை அம்மாநில அரசு அனுசரிக்க உள்ளது.
- வாரணாசியின் சர்வதேச அரிசி ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து சித்தார்த் நகரில் காலா நமக் அரிசி ஆராய்ச்சி மையத்தை அமைக்கவும் இது திட்டமிட்டு உள்ளது.

## இந்தியாவின் முதல் டிஜிட்டல் பல்கலைக்கழகம்

- கேரளாவின் மங்கலாபுரத்தில் உள்ள டெக்னோசிட்டியில் டிஜிட்டல் பல்கலைக்கழகம் அமைக்கப் பட்டுள்ளது.
- இது கேரள மாநிலத்தில் உள்ள நாட்டின் முதல் டிஜிட்டல் பல்கலைக்கழகம் ஆகும்.
- இது முதுகலைப் படிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகள் மீது கவனம் செலுத்தும்.

## நெகிழிக் கழிவுகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட சாலை

- திரிபுரா அரசானது முதல் முறையாக மறுசுழற்சி செய்ய முடியாத நெகிழிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்கத் தொடங்கியுள்ளது.
- இது நெகிழிக் கழிவுகளைக் குறைத்து சுற்றுச்சூழலை நெகிழி இல்லாமல் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மலர்கள் பதப்படுத்தும் மையம்

- கர்நாடகாவின் தோட்டக் கலை துறையானது பெங்களூரின் சர்வதேச மலர் ஏல நிறுவனத்துடன் (International Flower Auction Bangalore) இணைந்து மலர் பதப்படுத்தும் மையத்தை அமைக்கவுள்ளது.
- விற்கப்படாத பூக்களைப் பயனுள்ள ஒரு தயாரிப்புகளாக மாற்றுவதற்காக இந்த மையம் அமைக்கப் படும்.
- இந்தியாவில் மொத்த மலர் உற்பத்தியில் 75% கர்நாடகாவில் உள்ளது.
- இந்தியாவின் முதல் மற்றும் ஒரே மலர் ஏல மையமானது கர்நாடகாவில் உள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பீகாரின் "மிதிவண்டிப் பெண்மணி"

- பீகாரைச் சேர்ந்த ஜோதி குமாரி (16 வயது) என்பவருக்கு பிரதான் மந்திரி ராஷ்டிரிய பால புரஸ்கர் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இவர் பீகாரின் "மிதிவண்டிப் பெண்மணி" என்று அறியப்படுகின்றார்.
- இவர் தேசிய அளவிலான பொது முடக்கக் காலத்தில் குருகிராமிலிருந்து பீகார் வரை மிதிவண்டியில் பயணம் செய்துள்ளார்.
- இந்தப் பயணத்தின் முழு சமயத்திலும் இவரது தந்தை அந்த மிதிவண்டியின் பின்புறத்தில் அமர்ந்து கொண்டு பயணம் செய்து உள்ளார்.

## சிறந்த தேர்தல் நடைமுறைகள் விருது

- இந்தியத் தேர்தல் ஆணையமானது "சிறந்த தேர்தல் நடைமுறைகள் விருது - 2020" என்ற விருதிற்காக 17 அதிகாரிகள் மற்றும் அமைப்புகளைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்த விருதானது ஜனவரி 25 அன்று நடைபெற்ற தேசிய வாக்காளர் தின அனுசரிப்பின் போது வழங்கப்பட்டது.
- மறைந்த இந்தியக் காவல்துறைப் பணி அதிகாரி மற்றும் பூர்னியாவின் தலைமைக் காவல் துறை ஆய்வாளரான பினோத் குமார் அவர்களுக்கு இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- பூர்னியா மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான நடைமுறைகளை ஆய்வு செய்யும் போது இவருக்கு கோவிட்- 19 நோய்த் தொற்று ஏற்பட்டது.
- இதுவே அவரது எதிர்பாராத இறப்பிற்கு வழி வகுத்தது.
- இந்த நிகழ்வின் போது வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையின் டிஜிட்டல் மதிப்பானது (e-EPIC) வெளியிடப் பட்டது.
- வாக்காளர் கல்வியறிவு மற்றும் விழிப்புணர்விற்காக ரேடியோ மிர்ச்சிக்கு தேசிய ஊடக விருதானது வழங்கப்பட்டுள்ளது.

## The Little Book of Encouragement

- திபெத்திய ஆன்மீகத் தலைவரான தலாய் லாமா அவர்கள் 'The Little Book of Encouragement' என்ற தனது புதிய புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
- அவர் இந்தப் புத்தகத்தில் மனிதர்களின் மகிழ்ச்சியை ஊக்குவிப்பதற்காக அறிவின் மேற்கோள்கள் மற்றும் கூற்றுகளைப் பகிர்ந்துள்ளார்.

## பண்டிட் பீம்சென் ஜோஷியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள்

- புகழ்பெற்ற மற்றும் பாரம்பரியப் பாடகர் பண்டிட் பீம்சென் ஜோஷியின் நூற்றாண்டு விழா 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 04 அன்று ஓராண்டு கால விழாவாக தொடங்கியது.
- இவர் கர்நாடகாவைச் சேர்ந்த ஒரு இந்தியப் பாடகர் ஆவார்.

- இவர் காயல் (khayal) வகைப் பாடல்களைப் பாடுவதில் பெயர் பெற்றவர் ஆவார்.
- இவர் இந்துஸ்தானி பாரம்பரிய இசையில் கிராணா கரானா (Kirana gharana) என்ற வகையில் புகழ்பெற்றவர் ஆவார்.
- இவரது இசை நிகழ்ச்சிகள் நியூயார்க்கில் சுவரொட்டிகளால் விளம்பரப் படுத்தப் பட்டன.
- இந்தியாவைச் சேர்ந்த ஓர் இசைக் கலைஞருக்கு முதல் முறையாக இவ்வாறு நடந்தது.
- இவர் ஆண்டுதோறும் சவாய் காந்தர்வ இசை விழாவையும் நடத்தச் செய்தார்.
- இவருக்கு 1998 ஆம் ஆண்டில் சங்கீத நாடக அகாதமி கூட்டாளர் என்ற விருது வழங்கப் பட்டது.
- இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத் ரத்னா விருதை 2009 ஆம் ஆண்டில் இவர் பெற்றார்.

## இளம் பெண் விமானி

- காஷ்மீரைச் சேர்ந்த 25 வயதான ஆயிஷா அஜீஸ் என்பவர் நாட்டின் ஒரு இளம் பெண் விமானி ஆவார்.
- 2011 ஆம் ஆண்டில், ஆயிஷா அஜீஸ் தனது 15 வயதில் உரிமம் பெற்ற ஒரு இளைய விமானிப் பயிற்சி மாணவி ஆனார்.
- ரஷ்யாவின் சோகோல் விமான நிலையத்தில் எம்.ஐ.ஜி-29 என்ற ஒரு ஜெட் விமானத்தை ஓட்ட இவர் பயிற்சி பெற்றார்.

## உலக வர்த்தக அமைப்பின் (WTO) முதல் பெண் தலைவர்

- நைஜீரியாவில் பிறந்த நுகோசி ஒகோன்ஜோ – இவேலா என்பவர் WTO அமைப்பின் தலைவராகப் பணியாற்றவிருக்கும் முதலாவது பெண்மணி மற்றும் முதலாவது ஆப்பிரிக்கர் ஆவார்.
- தென் கொரியாவின் சார்பாகப் போட்டியிட்ட மனுதாரர் தனது மனுவைத் திரும்பப் பெற்ற பிறகு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 1995 ஆம் ஆண்டில் இது துவக்கப் பட்டதிலிருந்து 6 ஆண்கள் இதன் தலைமை இயக்குநர்களாகப் பணியாற்றியுள்ளார்.



## 2021 ஆம் ஆண்டின் வனவிலங்குப் புகைப்படவியலாளர்

- ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வனவிலங்குப் புகைப்படவியலாளரான ராபர்ட் இர்வின் என்பவர் மக்களின் விருப்ப விருதுப் போட்டியில் ஆண்டின் சிறந்த வனவிலங்குப் புகைப்படவியலாளர் பிரிவில் முதலிடத்தைப் பிடித்து பரிசை வென்றுள்ளார்.
- "காட்டுத் தீ" என்ற தலைப்பு கொண்ட ஒரு புகைப்படத்திற்காக இவர் இந்த விருதை வென்றுள்ளார்.
- இது 2020 ஆம் ஆண்டில் பேரழிவை ஏற்படுத்திய ஆஸ்திரேலியக் காட்டுத் தீயைக் காட்டும் புகைப்படமாகும்.
- இவர் ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தின் கேப் யோர்க்கில் உள்ள ஸ்டீல் இர்வின் வனவிலங்குக் காப்பகத்திற்கு அருகில் ஆளில்லா குட்டி விமானத்தைப் பயன்படுத்தி இந்தப் புகைப்படத்தை எடுத்துள்ளார்.
- இந்தப் புகைப்படமானது புதர்களுக்கிடையே எரிந்துக் கொண்டிருக்கும் காட்டுத் தீ ஆனது இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து இருக்கும் ஒரு கோட்டைக் காட்டுகின்றது.



## வாடிக்கையாளரின் குரல் விருது

- பெங்களூரு சர்வதேச விமான நிலைய நிறுவனமானது விமான நிலைய ஆணைய சர்வதேச உலகின் "வாடிக்கையாளரின் குரல்" விருதை வென்றுள்ளது.
- மேலும் இந்த விமான நிலையமானது கெம்பகௌடா சர்வதேச விமான நிலையம் என்றும் அழைக்கப்படுகின்றது.
- இது 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கோவிட்-19 நோய்த் தொற்றின் போது வாடிக்கையாளரின் தேவையைப் பூர்த்தி செய்த மற்றும் தங்களது வாடிக்கையாளருக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளித்த விமான நிலையங்களை அங்கீகரிக்கின்றது.

## மகளிர் சிறப்புத்துவ விருது 2021

- அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினத்தில், அறிவியல் மற்றும் பொறியியலில் சிறந்து விளங்கியதற்காக தேசிய அறிவியல் கல்வி நிறுவனங்களின் நான்கு இளம் பெண்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் இவ்விருதை வழங்கியுள்ளது.

- அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் சட்டரீதியான அமைப்பாகும்.
- இந்த விருதானது 2013 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இவ்விருதை வென்றவர்கள்
    - டாக்டர் ஷோபனா கபூர் - வேதியியல் உயிரியல்
    - டாக்டர் அந்தரா பானர்ஜி - சுகாதார அறிவியல்
    - டாக்டர் சோனு காந்தி - நானோ உயிரித் தொழில்நுட்பம் மற்றும்
    - டாக்டர் ரிது குப்தா - நானோ தொழில்நுட்பம்.

## ICCயின் புதிய தலைமை வழக்குரைஞர்

- பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமைகள் வழக்குரைஞரான கரீம் கான் அவர்கள் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் (International Criminal Court - ICC) புதிய வழக்குரைஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் இதற்கு முன்பு ஈராக்கில் இஸ்லாமிய மாகாணத் தீவிரவாதக் குழுவினால் நிகழ்த்தப்பட்ட குற்றங்களை ஆராய்வதற்கான சிறப்பு ஐக்கிய நாடுகள் குழுவிற்குத் தலைமை வகித்தார்.
- ஐக்கிய நாடுகள் 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது, ஆனால் 123 நாடுகள் மட்டுமே ICC அமைப்பில் உறுப்பு நாடுகளாக உள்ளன.
- மனித நேயத்திற்கு எதிரான குற்றங்களை விசாரிக்கும் ஒரே நிரந்தர அமைப்பு ICC ஆகும்.



## சரணாலய வாழ்நாள் சேவை விருது – 2020

- இயற்கையியலாளரும் ஆர்வலருமான எஸ். தியோடர் பாஸ்கரன் அவர்கள் 2020 ஆம் ஆண்டிற்கான சரணாலய வாழ்நாள் சேவை விருதை வென்றுள்ளார்.
- இந்த விருது சரணாலயம் இயற்கை அறக்கட்டளை (Sanctuary Nature Foundation) என்ற அமைப்பால் நிறுவப் பட்டது.
- வனவிலங்குப் பாதுகாப்புக்கான அர்ப்பணிப்பின் காரணமாக அவர் இந்த விருதுக்குத் தேர்வு செய்யப் பட்டார்.
- முன்னதாக தமிழில் இயற்கையைப் பற்றி எழுதியதற்காக அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது (இயல் விருது) வழங்கப் பட்டது.

- டொராண்டோவில் 2014 ஆம் ஆண்டில் கனடா இலக்கியத் தோட்டத்தால் இந்த விருது அவருக்கு வழங்கப் பட்டது.



## ஆண்டின் ஸ்கோச் முதல்வர்

- ஆந்திராவின் முதல்வர் ஒய்.எஸ். ஜெகன் மோகன் ரெட்டி அவர்களுக்கு ஆண்டின் ஸ்கோச் முதல்வர் விருது வழங்கப் பட்டுள்ளது (Skoch Chief Minister of the Year award).
- இந்த விருதுக்கான தேர்வு, பல்வேறு மாநிலங்களில் திட்ட அளவிலான விளைவுகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில் எடுக்கப் பட்டது.



## பிராணி மித்ரா மற்றும் ஜீவதயா விருதுகள் 2021

- இந்திய விலங்கு நல வாரியமானது 2021 ஆம் ஆண்டிற்காக என்று 14 பிராணி மித்ரா விருதுகளையும் மற்றும் ஜீவதயா விருதுகளையும் வழங்கியுள்ளது.
- தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்களை விலங்கு நலன் என்ற துறையில் அவர்களின் சிறந்த செயல்திறனுக்காக வேண்டி இது அங்கீகரிக்கிறது.

| Awards | Awardee |
|---|---|
| **Prani Mitra Award Individual** | Yogender Kumar,<br>Manish Saxena,<br>Shyam Lal Chaubisa |
| **Prani Mitra Award Shaurya** | Anil Gandas<br>Late Smt. Kalpana Vasudevan, Coimbatore |
| **Prani Mitra Award – Life Time Animal Service** | Dr. R. M. Kharb,<br>Dr. S. Chinny Krishna, Chennai<br>Dr. S.R. Sundaram, Chennai |
| **Prani Mitra Award– Animal Welfare Organization** | World Sankirtan Tour Trust<br>Shri Karuna Foundation Trust<br>People for Animals |
| **Prani Mitra Award – Corporate** | Tata Trust Foundation |
| **JeevDaya Award – Animal Welfare Organization** | Dhyan Foundation<br>Animal Aid Charitable Trust |

## TIME பத்திரிக்கையின் பட்டியல்

- TIME பத்திரிக்கையின் "எதிர்காலத்தை வடிவமைக்கும் வகையில் வளர்ந்து வரும் 100 தலைவர்களை" கொண்ட ஒரு வருடாந்தரப் பட்டியலில் பீம் ஆர்மி அமைப்பின் தலைவர் சந்திர சேகர் ஆசாத் இடம் பிடித்துள்ளார்.
- இந்தப் பட்டியலானது "2021 TIME 100 Next" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- மேலும் இது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 5 ஆளுமைகளையும் கொண்டுள்ளது.
    - சுட்டுரையின் முதன்மை வழக்குரைஞரான விஜயா கேத்தி
    - ஐக்கிய இராஜ்ஜியத்தின் நிதி அமைச்சரான ரிஷி சுனக்
    - இன்ஸ்டாகார்ட் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி அபூர்வா மேத்தா
    - Get Us PPE என்ற ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பின் செயல் இயக்குநர் மற்றும் மருத்துவரான ஷிக்ஷா குப்தா
    - அட்சால்வ் என்ற ஒரு இலாப நோக்கற்ற அமைப்பின் நிறுவனரான ரோகன் பவுலூரி

## 'Maverick Messiah' புத்தகம்



- துணைக் குடியரசுத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு அவர்கள் 'மாவரிக் மேசியா' என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
- இந்தப் புத்தகம் ஆந்திராவின் முன்னாள் முதல்வரான 'என் டி ராமராவ்' அவர்களின் அரசியல் வரலாறாகும்.
- இதை மூத்தப் பத்திரிகையாளர் ரமேஷ் கந்துலா என்பவர் எழுதியுள்ளார்.

## ஆசிய சுற்றுச்சுழல் அமலாக்க விருது – 2020

- வனவிலங்கு குற்றக் கட்டுப்பாட்டு முகமையானது (Wildlife Crime Control Bureau - WCCB) 2020 ஆம் ஆண்டின் ஆசிய சுற்றுச்சுழல் அமலாக்க விருதைப் பெற்றுள்ளது.
- இந்த விருதானது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தினால் வழங்கப்படுகின்றது.
- WCCB ஆனது இந்த விருதை 3 ஆண்டுகளில் 2 முறை பெற்றுள்ளது.
- WCCB ஆனது புத்தாக்க வகைப் பிரிவின் கீழ் இந்த ஆண்டில் இந்த விருதைப் பெற்று உள்ளது.
- இதற்கு முன்பு, இந்த முகமையானது இதே பிரிவின் கீழ் 2018 ஆம் ஆண்டில் இந்த விருதைப் பெற்றுள்ளது.
- WCCB என்பது வனவிலங்கு (பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2006 என்ற சட்டத்தின் கீழ் உள்ள ஒரு சட்டப்பூர்வ பல்துறைசார் அமைப்பாகும்.
- இது மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் கீழ் இந்திய அரசால் 2008 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டதாகும்.
- இது நாட்டில் திட்டமிடப்பட்டு நிகழ்த்தப் படுகின்ற வனவிலங்கு குற்றங்களைத் தடுப்பதற்காக வேண்டிப் பணியாற்றுகின்றது.

## உலக தலைமை காங்கிரஸ்

- ஸிஃபி டெக்னாலஜிஸின் கமல் நாத் அவர்கள் உலக தலைமை காங்கிரஸால் 'ஆண்டின் சிறந்த தலைமை நிர்வாக அதிகாரி' என்று பெயரிடப்பட்டுள்ளார்.
- இந்த ஆண்டு, ஆண்டின் சிறந்த வணிகத் தலைவர் விருதானது தனது 19வது உலகளாவியப் பதிப்பையும் 4வது இந்தியப் பதிப்பையும் கொண்டாடியுள்ளது.
- பி.டி.சி (PTC) இந்திய நிதிச் சேவைகள் நிறுவனமானது நிதிச் சேவைகள் பிரிவில் விருதைப் பெற்றுள்ளது.

## சர்வதேச ஊழல் எதிர்ப்பு சாம்பியன் விருது

- இந்தியாவைச் சேர்ந்த சமூக ஆர்வலரான அஞ்சலி பரத்வாஜ் அவர்கள் ஐக்கிய நாடுகள் சர்வதேச ஊழல் எதிர்ப்பு சாம்பியன்ஸ் விருதுக்குத் தேர்வு செய்யப் பட்டு உள்ளார்.
- மேலும் 11 உறுப்பினர்கள் இதில் ஊழல் எதிர்ப்பு சாம்பியன்களாக அங்கீகரிக்கப் பட்டு உள்ளனர்.
- "சதாரக் நாக்ரிக் சங்கேதன்" என்பதின் நிறுவனர் அஞ்சலி ஆவார்.

- இது அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றை ஊக்குவிக்கும் குடிமக்கள் சார்ந்த ஒரு குழுவாகும்.
- மேலும் இது குடிமக்களின் திறன்மிகு பங்கேற்பையும் ஊக்கப்படுத்துகின்றது.



## உலக மனிதவள மேம்பாட்டு காங்கிரஸ் விருதுகள்

- 29வது உலகளாவிய மனிதவள மேம்பாட்டு காங்கிரஸ் விருதுகளில் யூனியன் பாங்க் ஆப் இந்தியா வங்கியானது பல்வேறு பிரிவுகளில் விருதுகளைப் பெற்றுள்ளது.
  - மனித வளத்தில் சிறந்த சேவை வழங்குநர்.
  - "கற்றல் மற்றும் மேம்பாட்டில் சிறந்து விளங்குவதற்கான" சிறந்த நிறுவனம்.
- அதன் தலைமைப் பொது மேலாளரான கல்யாண் குமார் அவர்கள் "ஆண்டின் தலைமை மனித வள அலுவலர்" என்று பெயரிடப் பட்டுள்ளார்.




## பட்டியல் சமூகத்தினருக்கான தேசிய ஆணையத்தின் புதிய தலைவர்

- விஜய் சம்ப்லா தேசிய பட்டியல் சாதிகளுக்கான ஆணையத்தின் தலைவராக பொறுப்பேற்று உள்ளார்.
- அவர் 2014 முதல் 2019 வரை முன்னாள் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சராக இருந்தார்.
- பட்டியல் சமூகத்தினருக்கான தேசிய ஆணையமானது ஓர் இந்திய அரசியலமைப்பு அமைப்பு நிறுவனமாகும்.

- இது பட்டியல் சாதியினரின் மீதான சுரண்டலுக்கு எதிராக பாதுகாப்புகளை வழங்க நிறுவப் பட்டுள்ளது.
- இது பட்டியல் சாதிகளின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கும், அவர்களுக்கு எதிரான அட்டூழியங்களைத் தடுப்பதற்கும் பயன்படுகிறது.
- இந்திய அரசியலமைப்பின் 338வது சரத்து, பட்டியல் சாதியினருக்கான தேசிய ஆணையத்துடன் தொடர்புடையது ஆகும்.

### அட்லாண்டிக்கைப் படகில் கடந்த மிக இளம் வயது பெண்

- இங்கிலாந்தைச் சேர்ந்த பெண்ணான ஜாஸ்மின் ஹாரிசன் என்பவர் அட்லாண்டிக் பெருங்கடலைத் தனியாக படகில் கடந்த மிகவும் இளம் வயது பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- 2020 ஆம் ஆண்டின் தாலிஸ்கர் விஸ்கி அட்லாண்டிக் சேலஞ்ச் என்ற போட்டியில் முதலிடம் பிடித்ததன் மூலம் அவர் இந்த சாதனையை நிகழ்த்தினார்.




## விளையாட்டுச் செய்திகள்

### ரஞ்சிக் கோப்பை - கிரிக்கெட்

- 87 ஆண்டுகளில் முதல் முறையாக, ரஞ்சிக் கோப்பைக்கான போட்டி ரத்து செய்யப் படுகிறது.
- இது இந்தியாவின் முதல் தர உள்நாட்டு கிரிக்கெட் போட்டியாகும்.
- இது 1892 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- சட்டமறுப்பு இயக்கம் காரணமாக இது 1930-31 ஆம் ஆண்டு முதல் 1931-34 ஆம் ஆண்டு வரை ரத்து செய்யப் பட்டது.
- உலகப் போர்களின் போதும் முதல் தர கிரிக்கெட் போட்டிகளை நடத்திய ஒரே நாடு இந்தியாவாகும்.

## டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 2வது வீரர்

- இந்தியாவில் விளையாடப்பட்ட டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை (268) வீழ்த்திய 2வது கிரிக்கெட் வீரர் ரவீச்சந்திரன் அஸ்வின் ஆவார். இவர் ஹர்பஜன் சிங்கைப் பின்னுக்குத் தள்ளி 2வது இடத்தைப் பிடித்துள்ளார்.
- அஸ்வின் இதுவரை 76 போட்டிகளில் மொத்தம் 394 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.
- ஒட்டுமொத்தமாக ஹர்பஜன் சிங் 417 விக்கெட்டுகளுடன் 3வது இடத்தில் உள்ளார்.
- 619 விக்கெட்டுகளுடன் இந்தியாவின் முன்னணியில் உள்ள அதிக விக்கெட்டுகளை எடுத்த வீரர் அனில் கும்ப்ளே ஆவார்.


INDIAN BOWLERS WITH 200-PLUS WICKETS IN TESTS AT HOME

| BOWLER | TESTS | WKTS | AVE | BEST | 10WM | SR |
|---|---|---|---|---|---|---|
| A Kumble | 63 | 350 | 24.88 | 10/74 | 7 | 59.4 |
| R Ashwin | 45 | 268 | 22.54 | 7/59 | 6 | 49.0 |
| Harbhajan | 55 | 265 | 28.76 | 8/84 | 4 | 64.1 |
| Kapil Dev | 65 | 219 | 26.49 | 9/83 | 2 | 55.7 |

## 20 கிலோ மீட்டர் நடைபயணத்தில் தேசியச் சாதனை

- பிரியங்கா கோஸ்சுவாமி அவர்கள் 20 கி.மீ. நடை பயணத்தில் ஒரு தேசியச் சாதனையை முறியடித்துள்ளார்.
- இவர் இச்சாதனையை 8வது ஓபன் தேசிய மற்றும் 4வது சர்வதேசப் பந்தய-நடை பயண சாம்பியன்ஷிப் போட்டியில் நிகழ்த்தினார்.
- இவர் 1 : 28 : 45 என்ற ஒரு கால அளவில் இலக்கைக் கடந்து அந்தச் சாதனையைப் படைத்து உள்ளார்.
- கடந்த ஆண்டில் இதே நிகழ்வில் பாவ்னா ஜாட் என்பவர் ஏற்படுத்திய 1 : 29 : 54 என்ற சாதனையை இவர் முறியடித்துள்ளார்.
- இதற்கு முன்பு பிரியங்கா 2017-18 ஆம் ஆண்டில் தேசிய அளவில் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- மேலும் இவர் அகில இந்திய இரயில்வே போட்டியில் (2018) ஒரு தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.
- இவர் இத்தாலியில் (ரோம்) உலக நடை பயண சாம்பியன்ஷிப் மற்றும் ஜப்பானில் ஆசியான் நடைபயண சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.



## தேசிய மேசைப் பந்தாட்டப் பட்டம்


- மணிக்கா பத்ரா அவர்கள் 82வது மூத்தோர் தேசிய மேசைச் பந்தாட்ட சாம்பியன்ஷிப்பை வென்றுள்ளார்.
- இது நாட்டில் நடைபெறும் மிகவும் புகழ்பெற்ற ஒரு உள்ளரங்கப் பொழுதுபோக்கு விளையாட்டாகும்.
- இது பெரும்பாலும் மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் விளையாடப்படுகின்றது.
- 2018 ஆம் ஆண்டில் ஐடிடிஎப் அமைப்பினால் வழங்கப்பட்ட "திருப்புமுனை நட்சத்திர விருதை" வென்ற ஒரே இந்தியர் இவராவார்.
- மேலும் இவர் 2020 ஆம் ஆண்டின் ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதையும் வென்று உள்ளார்.



## 200 இடது கை மட்டையாளர்களின் விக்கெட்டுகள்

- டெஸ்ட் கிரிக்கெட்டின் 143 ஆண்டு வரலாற்றில் இடது கை மட்டையாளர்களுக்கு எதிராக 200 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையை ரவிச்சந்திரன் அஸ்வின் பெற்றுள்ளார்.
- சென்னை எம்.ஏ.சிதம்பரம் விளையாட்டரங்கத்தில் இங்கிலாந்துக்கு எதிரான இந்தியாவின் இரண்டாவது டெஸ்டின் போது அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தி உள்ளார்.
- அஸ்வின் தனது வாழ்க்கையில் இதுவரை 391 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

- இடது கை மட்டையாளர்களுக்கு எதிராக டெஸ்ட் கிரிக்கெட்டில் இரண்டாவது மிக வெற்றிகரமான பந்து வீச்சாளர் இலங்கையைச் சேர்ந்த முத்தையா முரளிதரன் (191 விக்கெட்டுகள்) ஆவார்.




## ஆஸ்திரேலிய ஓபன் 2021

- செர்பியாவைச் சேர்ந்த உலக முதன்மை டென்னிஸ் வீரரான நோவக் ஜோகோவிக் தனது 9வது ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்றார்.
- இது ஜோகோவிக்கின் 18வது கிராண்ட் ஸ்லாம் வெற்றியாகும்.
- இவர் ரஃபேல் நடால் மற்றும் ரோஜர் பெடரரிடமிருந்து இரண்டு பட்டங்கள் பின் தங்கி உள்ளார்.
- நவோமி ஒசாகா தனது இரண்டாவது ஆஸ்திரேலிய ஓபன் 2021 பெண்கள் ஒற்றையர் கோப்பையையும் நான்காவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தையும் வென்றார்.
- முந்தைய ஆண்டில் US ஓபன் சாம்பியனான உடன் இந்த ஆஸ்திரேலிய ஓபன் போட்டியில் வென்றுள்ளார்.



- இது போன்ற வெற்றி இவருக்கு இரண்டாவது முறையாகும்.
- இப்போது அவர் இரண்டு US ஓபன் பட்டங்களையும் (2018, 2020) மற்றும் இரண்டு ஆஸ்திரேலிய ஓபன் கோப்பைகளையும் (2019, 2021) பெற்றுள்ளார்.

### Adriatic Pearl Boxing Tournament

- மாண்டினீக்ரோவின் புட்வாவில் நடைபெற்ற 30வது Adriatic Pearl Boxing போட்டியில் பாபிரோஜிசானா சானு (51 கிலோ), அருந்ததி சவுத்ரி (69 கிலோ) ஆகியோர் இரண்டு தங்கப் பதக்கங்களைப் வென்றனர்.
- இந்தப் போட்டியில் முன்னதாக தங்கப் பதக்கங்களைப் பெற்ற மற்ற இந்தியப் பெண்கள் குத்துச் சண்டை வீரர்கள் அல்ஃபியா பதான் (+ 81 கிலோ), வின்கா (60 கிலோ) மற்றும் டி சனாமாச்சா சானு (75 கிலோ) ஆகியோர் ஆவர்.
- இந்தியப் பெண்கள் 10 பதக்கங்களுடன் (5 தங்கம், 3 வெள்ளி மற்றும் 2 வெண்கலம்) சிறந்த அணியாக உருவெடுத்தனர்.



## முக்கிய தினங்கள்

### இந்தியக் கடலோரக் காவல் படை தினம் – பிப்ரவரி 01

- இந்தியக் கடலோரக் காவல் படையானது இந்தியாவின் ஆயுதப் படையாகும்.
- இது கடல்சார் வளங்களைப் பாதுகாத்துக் கடல்சார் சட்டத்தை அமலாக்கம் செய்கின்றது.
- இந்தியக் கடலோரக் காவல் படையானது 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 அன்று ஏற்படுத்தப் பட்டது.
- ஆனால் இது கடலோரக் காவல் படைச் சட்டம் 1978 என்ற சட்டத்தின் மூலம் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 அன்று ஒரு தனிச்சுதந்திர ஆயுதப் படையாக முறையாக ஏற்படுத்தப் பட்டது.




## உலக சதுப்பு நிலங்கள் தினம் - பிப்ரவரி 02

- நமது புவிக் கிரகத்திற்கும் மக்களுக்கும் சதுப்பு நிலங்களின் ஒரு முக்கியப் பங்கு குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்நாள் கொண்டாடப்படுகிறது.
- இந்த நாள் 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி 2, அன்று சதுப்பு நிலங்கள் தொடர்பான ஒரு ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட நாளைக் குறிக்கிறது.
- 2021 ஆம் ஆண்டில் இந்நாள் சதுப்பு நிலங்களுக்கான ராம்சார் ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்ட 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இந்த ஆண்டு உலக சதுப்பு நிலங்கள் தினத்திற்கான கருத்துரு 'சதுப்பு நிலங்கள் மற்றும் நீர்' என்பதாகும்.




## மனித சகோதரத்துவத்திற்கான சர்வதேச நாள் - பிப்ரவரி 04

- வெவ்வேறுக் கலாச்சாரங்கள் மற்றும் மதங்கள் அல்லது நம்பிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தையும், சகிப்புத் தன்மையை மேம்படுத்துவதையும் இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.
- 2020 ஆம் ஆண்டு 21 டிசம்பர் அன்று ஐ. நா பொதுச் சபையானது இந்த நாளைக் கடைபிடிப்பதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு ‘எதிர்காலத்திற்கான பாதை’ என்பதாகும்.

## உலகப் புற்று நோய் தினம் – பிப்ரவரி 04

- இது சர்வதேசப் புற்றுநோய்க் கட்டுப்பாட்டகத்திற்கான ஒன்றியத்தினால் (Union for International Cancer Control - UICC) மேற்கொள்ளப்பட்ட ஒரு உலக ஒருங்கிணைப்பு முன்னெடுப்பாகும்.
- 2021 ஆம் ஆண்டின் உலகப் புற்றுநோய் தினத்தின் கருத்துரு, "நான் மற்றும் என்னால் முடியும்" (I Am and I Will) என்பதாகும்.
- உலகப் புற்று நோய் தினமானது பாரீஸில் நடைபெற்ற முதலாவது புற்றுநோய்க்கான உலக மாநாட்டில் 2000 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இத்தினமானது UICC ஒன்றியத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.
- இது 2008 ஆம் ஆண்டின் உலகப் புற்றுநோய்ப் பிரகடனத்தின் இலக்குகளுக்கு ஆதரவு அளிப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளது.

## பெண் பிறப்புறுப்புச் சிதைவுக்கு எதிராக சகிப்புத் தன்மையல்லாததற்கான சர்வதேச தினம் – பிப்ரவரி 06

- இந்தத் தினமானது பெண் பிறப்புறுப்புச் சிதைவு குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.
- இது ஆப்பிரிக்காவில், குறிப்பாக வடகிழக்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் முக்கியமாக செயல்படுத்தப்படுகின்றது.
- இந்த நடைமுறைக்கு எதிராக உலக சுகாதார அமைப்பானது 1997 ஆம் ஆண்டில் யுனிசெப் மற்றும் ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் ஆகியவற்றுடன் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பெண் பிறப்புறுப்புச் சிதைவை ஒழித்தலுக்கு வேண்டிய உலக செயல்படாத தன்மை என்ற காலத்திற்கு நேரமில்லை, ஒன்றிணைதல், நிதி மற்றும் நடவடிக்கை ஆகியவற்றிற்கான தருணம்" என்பதாகும்.




## பாதுகாப்பான இணையத்திற்கான சர்வதேச நாள் - பிப்ரவரி 09

- இது முதன்முதலில் 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது ஐரோப்பிய ஒன்றியத்தின் 'குழந்தைகளுக்கான சிறந்த இணையம்' என்ற ஒரு கொள்கையின் ஒரு பகுதியாகும்.
- ஒவ்வோர் ஆண்டும் இந்த நாளானது வளர்ந்து வரும் இணையச் சிக்கல்களைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இணைய அச்சுறுத்தல் போன்றவையும் இதில் அடங்கும்.
- தற்போதைய கவலைகளைப் பிரதிபலிக்கும் தலைப்பை இது தேர்வு செய்கிறது.
- இந்த ஆண்டின் கருப்பொருள் 'நாம் நம்பும் இணையம்: இணைய உலகில் நம்பகத் தன்மையை ஆராய்தல்' (An internet we trust: exploring reliability in the online world) என்பதாகும்.




## உலகப் பருப்பு வகைகள் தினம் – பிப்ரவரி 10


- இது கொண்டைக் கடலை, வறண்ட பீன்ஸ், பயறு வகைகள் போன்ற பருப்பு வகைகளை ஒரு உலக உணவாக அங்கீகரிக்கின்றது.
- ஐக்கிய நாடுகள் பருப்பு வகைகள் தினத்திற்கான தீர்மானது 2013 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இந்த தினமானது 2019 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.




## தேசிய குடல்புழு நீக்க நாள் - பிப்ரவரி 10

- ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 10 மற்றும் ஆகஸ்ட் 10 ஆகிய தேதிகள் தேசிய குடல்புழு நீக்க நாள்களாக அனுசரிக்கப்படுகின்றன.
- 1-19 வயதிற்குள் உள்ள குழந்தைகளிடையே குடல் புழுக்களை ஒழிப்பதை இந்நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தப் புழுக்கள் மண் வழி பரவும் தொற்றுயிரிகள் என்றும் குறிப்பிடப் படுகின்றன.
- குடல் புழுக்கள் மனிதக் குடலில் வாழும் ஒட்டுண்ணிகள் ஆகும்.
- அவை குழந்தைகள் உட்கொள்ளும் ஊட்டச்சத்துக்கள் மற்றும் வைட்டமின்களை உட்கொள்கின்றன.




## அறிவியல் துறையில் சர்வதேசப் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் தினம் - பிப்ரவரி 11

- 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அறிவியல் துறையில் சர்வதேசப் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் தினத்தை நிறுவ முடிவு செய்தது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் பாலினச் சமத்துவத்தை மேம்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினத்திற்கான 2021 ஆம் ஆண்டின் கருத்துரு "கோவிட் -19 தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் உள்ள பெண் விஞ்ஞானிகள்" (Women Scientists at the forefront of the fight against COVID-19) என்பதாகும்.



## உலக யுனானி தினம் - பிப்ரவரி 11

- யுனானி மருத்துவ முறை மூலம் சுகாதாரப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அதன் நோய்த் தடுப்பு மற்றும் நோய்த் தீர்க்கும் தத்துவத்தின் மூலம் செய்யப் படும்.
- ஹக்கீம் அஜ்மல்கானின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இந்த நாள் கொண்டாடப் படுகிறது.
- அவர் ஒரு சிறந்த இந்திய யுனானி மருத்துவர் மற்றும் ஒரு குறிப்பிடத்தக்க சுதந்திர போராளி ஆவார்.
- இவர் புதுடில்லியில் உள்ள ஜாமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தின் நிறுவனர்களில் ஒருவராவார்.
- முதல் யுனானி தினமானது ஐதராபாத்திலுள்ள யுனானி மருத்துவத்திற்கான மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டில் கொண்டாடப்பட்டது.




## நிதி எழுத்தறிவு வாரம் - பிப்ரவரி 08 - 12

- இந்திய ரிசர்வ் வங்கியானது 2016 முதல் ஒவ்வொரு ஆண்டும் நிதி எழுத்தறிவு வாரத்தை நடத்தி வருகிறது.
- இது ‘கடன் ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்வது மற்றும் தேவைக்கேற்ப முறையான நிதி நிறுவனங்களிடமிருந்துக் கடன் பெறுவதை ஊக்குவித்தல்’ என்பதின் மீது கவனம் செலுத்தும்.
- இந்த ஆண்டின் கருத்துரு முறையான நிறுவனங்களில் இருந்து கடன் மற்றும் கடன் வழங்கும் ஒழுங்கு முறை "Credit Discipline and Credit from Formal Institutions” என்பதாகும்.

## தேசிய உற்பத்தித் தினம் – பிப்ரவரி 12

- இந்தத் தினமானது இந்தியாவில் உற்பத்தித் திறன் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்காக தேசிய உற்பத்தித் திறன் ஆணையத்தினால் (NPC) அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது 1958 ஆம் ஆண்டில் NPC (National Productivity Council) உருவாக்கப் பட்டதைக் குறிக்கின்றது.
- NPC என்பது மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையின் கீழ் உள்ள ஒரு தனிச்சுதந்திர பதிவு

செய்யப்பட்ட சமூகமாகும்.


- தேசிய உற்பத்தித் திறன் வாரமானது பிப்ரவரி 12 முதல் 18 வரை அனுசரிக்கப் படுகின்றது.

## உலக வானொலி தினம் - பிப்ரவரி 13

- 2011 ஆம் ஆண்டில், யுனெஸ்கோவின் பொது மாநாடானது அதன் 36வது அமர்வில், பிப்ரவரி 13 ஆம் தேதியினை உலக வானொலி தினமாக அறிவித்தது.
- இந்நாள் ஐக்கிய நாடுகள் வானொலி அமைப்பின் ஆண்டு தினத்துடன் ஒத்துப் போகிறது.
- ஐக்கிய நாடுகளின் சர்வதேச ஒளிபரப்புச் சேவையானது 1946 ஆம் ஆண்டில் பிப்ரவரி 13 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- இது 10வது ஆண்டு விழாவாகும்.
- இந்த ஆண்டு பின்வரும் மூன்று துணை கருப்பொருள்கள் மூலம் இந்நாள் கொண்டாடப் படும்.
- பரிணாமம்: உலகம் மாறுகிறது, வானொலி வளர்கிறது எனவே வானொலி உறுதியானது மற்றும் நிலையானது.
- புத்தாக்கம்: உலகம் மாறுகிறது, வானொலி தன்னை மாற்றிக் கொள்கிறது மற்றும் புதுமைகளை உருவாக்குகிறது - வானொலி புதிய தொழில்நுட்பங்களுக்கு ஏற்றது, எங்கு வேண்டுமானாலும் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது, இது எல்லா இடங்களிலும் மற்றும் அனைவருக்கும் அணுகக் கூடியது.
- இணைப்பு: உலகம் மாறுகிறது, வானொலி இணைக்கின்றது - இயற்கைப் பேரழிவுகள், சமூகப் பொருளாதார நெருக்கடிகள், தொற்றுநோய்கள் போன்றவற்றின் போது நமது சமூகத்திற்கு வானொலி தமது சேவைகளை அளிக்கின்றது.

## உலக பாங்கோலின் (எறும்புண்ணி) நாள் - பிப்ரவரி 13

- உலக பாங்கோலின் நாளானது பிப்ரவரி மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமை கொண்டாடப் படுகிறது.
- இந்த சர்வதேச முயற்சியானது பாங்கோலின் இனங்கள் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- பாங்கோலின் உயிரினத்தின் எட்டு வகைகளில், இந்தியப் பாங்கோலின் (Manis crassicaudata) மற்றும் சீனப் பாங்கோலின் (Manis pentadactyla) ஆகியவை இந்தியாவில் காணப் படுகின்றன.
- இவற்றின் பாதுகாப்பு நிலை
    - இந்தியப் பாங்கோலின்: அருகி வரும் உரியினங்கள்.
    - சீனப் பாங்கோலின்: மிகவும் அருகி வரும் உரியினங்கள்.
- இந்த இரண்டு இனங்களும் 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் பகுதி I என்பதின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.





## சரோஜினி நாயுடு பிறந்த நாள் / தேசிய மகளிர் தினம் 2021




- சரோஜினி நாயுடு பிறந்த நாளானது தேசிய மகளிர் தினமாகக் கொண்டாடப் படுகிறது.
- அவர் தனது கவிதைகள் காரணமாக 'இந்தியாவின் நைட்டிங்கேல்' அல்லது 'பாரத் கோகிலா' என்ற புனைப் பெயருடன் புகழ் பெற்றார்.
- இந்த ஆண்டு சரோஜினி நாயுடுவின் 142வது பிறந்த நாளாகும்.
- அவர் தற்போதைய உத்தரப் பிரதேசமான ஐக்கிய மாகாணங்களின் முதல் பெண் ஆளுநராவார்.
- 1925 ஆம் ஆண்டில் கான்பூரில் நடைபெற்ற இந்தியத் தேசியக் காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

## சர்வதேச குழந்தைப் பருவ கால புற்றுநோய் தினம் - பிப்ரவரி 15

- ❖ குழந்தைப் பருவ கால புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தச் செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ சிறப்பான இதன் 20வது பதிப்பில், குழந்தைப் பருவ கால புற்றுநோய் சர்வதேசம் மற்றும் சர்வதேச குழந்தைப் புற்றுநோயியல் சங்கம் ஆகியவை இணைந்து மூன்று ஆண்டு கால பிரச்சாரத்தை வெளியிடுகின்றன.
- ❖ இந்தப் பிரச்சாரமானது #throughourhands என்ற ஒரு கருத்துருவின் கீழ் திட்டமிடப் பட்டு உள்ளது.
- ❖ குழந்தைப் பருவ கால புற்றுநோய் சர்வதேசம் என்பதின் பிரச்சாரமானது #CureAll என்ற உத்தியுடன் முழுமையாக இணைக்கப்பட்டுள்ளது.
- ❖ இது குழந்தைப் பருவ கால புற்றுநோய்க்கான உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய முன்முயற்சியின் ஒரு முக்கிய உத்தியாகும்.
- ❖ இது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.




## சர்வதேச கால் கை வலிப்பு தினம் – பிப்ரவரி 08

- ❖ பிப்ரவரி மாதத்தின் 2வது திங்கள் கிழமையானது சர்வதேச கால்-கை வலிப்பு தினமாகக் கொண்டாடப்படுகின்றது.
- ❖ இது கால்-கை வலிப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட ஒரு சிறப்பு நிகழ்வாகும்.
- ❖ கால்-கை வலிப்பு என்பது வலிப்புத் தாக்கங்களை ஏற்படுத்தும் ஒரு நரம்பு மண்டலப் பிரச்சினையாகும்.
- ❖ இந்த வலிப்புத் தாக்கத்தின் கடுமைத் தன்மையானது நபருக்கு நபர் வேறுபடும்.


## உலக சமூக நீதி தினம் – பிப்ரவரி 20

- இத்தினமானது சமூக நீதியின் மூலம் கையாளப்படும் நன்மைகள் மற்றும் அது குறித்த விவகாரங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு இத்தினமானது, "டிஜிட்டல் பொருளாதாரத்தில் சமூக நீதிக்கான ஒரு அழைப்பு" என்ற கருத்துருவுடன் கொண்டாடப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையனது இத்தினத்தை அனுசரிப்பதற்காக 2007 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று தனது ஒப்புதலை வழங்கியது.




## அருணாச்சலப் பிரதேசம் மாநில தினம் - பிப்ரவரி 20

- 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 20, அன்று அருணாச்சலப் பிரதேசம் ஒரு முழு மாநிலமாக உருவெடுத்தது.
- இது 1972 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஒன்றியப் பிரதேச அந்தஸ்தைப் பெற்றது.
- பின்னர் இதற்கு அருணாச்சலப் பிரதேசம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.




## மிசோரம் மாநில தினம் - பிப்ரவரி 20

- மிசோ ஹில்ஸ் பகுதியானது சுதந்திரத்தின் போது அசாமுக்குள் லுஷாய் ஹில்ஸ் என்ற மாவட்டமாக மாறியது.
- மேலும், 1954 ஆம் ஆண்டில், இது அசாமின் மிசோ ஹில்ஸ் மாவட்டமாக மறுபெயரிடப் பட்டது.
- மிசோ தேசிய முன்னணியின் மிதவாதிகளுடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு, மத்திய அரசு 1972 ஆம் ஆண்டில் ஒன்றியப் பிரதேசத்தின் அந்தஸ்துடன் மிசோரத்தை நிறுவியது.
- மிசோரம் மாநிலச் சட்டம் 1986 என்ற சட்டத்தின் படி மிசோரமுக்கு மாநில அந்தஸ்து வழங்கப் பட்டது.
- மிசோரம் மாநிலம் முறைப்படுத்தப் பட்டு 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 20, அன்று மாநிலமாக்கப் பட்டது.




## சர்வதேச தாய் மொழி தினம் - பிப்ரவரி 21


- இது மொழியியல் மற்றும் கலாச்சாரப் பன்முகத் தன்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் பன்மொழித்துவத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Fostering multilingualism for inclusion in education and society" (கல்வி மற்றும் சமூகத்தில் பன்மொழித் தன்மையை உள்ளடக்குவதை மேம்படுத்துவது) என்பதாகும்.



- இது 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் யுனெஸ்கோ அமைப்பின் பொது கூடுகையின் போது பிரகடனப் படுத்தப்பட்டது.

## உலக சாரணர் தினம் - பிப்ரவரி 22

- உலக சாரணர் தினக் கொண்டாட்டங்கள் ராபர்ட் பேடன்-பவல் என்பவரின் பிறந்த நாளை நினைவு கூர்கின்றன.
- இவர் 1857 ஆம் ஆண்டில் பிறந்தார்.
- இவர் 1908 ஆண்டில் சாரணியத்தை நிறுவியவர் ஆவார்.
- சாரணர் என்பது இளைஞர்களுக்கான தன்னார்வ அரசியல் சாராத ஒரு கல்வி இயக்கம் ஆகும்.





## உலக சிந்தனை நாள் - பிப்ரவரி 22

- இது முதலில் சிந்தனை நாள் என்று அழைக்கப்படுகிறது.
- இது உலகெங்கிலும் உள்ள அனைத்துப் பெண் சாரணர்கள், வழிகாட்டிகள் மற்றும் பிற பெண் குழுக்களால் கொண்டாடப் படுகிறது.
- உலகெங்கிலும் உள்ள சக சகோதர சகோதரிகளைப் பற்றி சிந்திக்க இந்நாள் அனுசரிக்கப் படுகிறது.
- இது அவர்களின் கவலைகளை நிவர்த்தி கொள்ளச் செய்வதையும் வழிகாட்டலின் உண்மையான பொருளைப் புரிந்து கொள்ளச் செய்வதையும் நோக்கமாக கொண்டு உள்ளது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு 'அமைதியைக் கட்டமைத்தல்' என்பதாகும்.



## மத்திய கலால் வரி தினம் - பிப்ரவரி 24

- ❖ மத்திய கலால் மற்றும் சுங்க வாரியத்தின் சேவையைக் கௌரவிக்கும் விதமாக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- ❖ 1944 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 ஆம் தேதியில் மத்திய கலால் மற்றும் உப்புச் சட்டம் இயற்றப் பட்டதை நினைவு கூரும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.
- ❖ மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வாரியமானது முன்பு கலால் மற்றும் சுங்க வாரியம் என்று அழைக்கப்பட்டது.
- ❖ இப்போது இது நிதி அமைச்சகத்தின் வருவாய்த் துறையின் கீழ் உள்ளது.




## உலக அரசு சாரா நிறுவன தினம் – பிப்ரவரி 27

- ❖ முதன்முறையாக, உலக அரசு சாரா நிறுவன (NGO) தினமானது, பின்லாந்து நாட்டின தலைநகரான ஹெல்சிங்கியில் அனுசரிக்கப்பட்டது.
- ❖ 2010 ஆம் ஆண்டில் இந்தத் தினமானது லித்வேனியாவில் பால்டிக் கடல் நாடுகளின் IX பால்டிக் கடல் பகுதி NGO மன்ற ஆணையத்தின் உறுப்பு நாடுகளால் அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.
- ❖ இந்தத் தினத்தின் முக்கிய நோக்கம் சமூகத்தின் சிறப்புமிகு நலனுக்காக மக்களை NGO அமைப்புகளுடன் பங்கு கொள்ளச் செய்வதை ஊக்குவிப்பதாகும்.

## சர்வதேச துருவக் கரடி தினம் - பிப்ரவரி 27

- ❖ இதைத் துருவக் கரடிகள் சர்வதேச நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.
- ❖ புவி வெப்பமடைதல் மற்றும் குறைந்து வரும் கடல் பனிக் கட்டிகள் ஆகியவை துருவக் கரடிகளின் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்திய புரதச் சத்து நாள் - பிப்ரவரி 27


- ❖ இது இந்தியாவில் புரதச் சத்து சார்ந்த விழிப்புணர்வு மற்றும் போதுமான புரதச்சத்து குறித்த திட்டத்திற்கு ஆதரவு திரட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு 'Powering with Plant Protein' (தாவரப் புரதச் சத்துடன் பலப்பட வேண்டும்) என்பதாகும்.

## அரிய நோய் நாள் - பிப்ரவரி 28

- இது ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தின் கடைசி நாளில் அனுசரிக்கப்படுகிறது.
- இது அரிய நோய்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அரிய நோய்கள் உள்ள நபர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் சிகிச்சை மற்றும் மருத்துவ பிரதிநிதித்துவத்திற்கான அணுகலை மேம்படுத்துகிறது.
- அரிய நோய்களுக்கான ஐரோப்பிய அமைப்பானது 2008 ஆம் ஆண்டில் இந்நாளை நிறுவியது.

## தேசிய அறிவியல் தினம் - பிப்ரவரி 28

- இத்தினம் சர் சந்திரசேகர வெங்கட ராமன் அவர்கள் ராமன் விளைவை கண்டுபிடித்ததை நினைவு கூர்கிறது.
- 1930 ஆம் ஆண்டில் இந்தக் கண்டுபிடிப்புக்காக அவர் நோபல் பரிசு பெற்றார்.
- சமூகத்தில் அறிவியலின் பங்கு குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த இந்நாள் பயன்படுத்தப் படுகின்றது.
- இந்த ஆண்டு தேசிய அறிவியல் தினத்தின் கருத்துரு 'Future of STI: Impact on Education Skills and Work' (இந்தியாவில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் எதிர்காலம் : கல்வி, திறன்கள் மற்றும் வேலை மீதான தாக்கம்) என்பதாகும்.
- முதல் தேசிய அறிவியல் தினமானது 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 28, அன்று கொண்டாடப் பட்டது.



# இதரச் செய்திகள்

## ஊழல் கண்ணோட்டக் குறியீடு

- இதை டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் என்ற நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் மொத்தம் 180 நாடுகளில் இந்தியாவின் தரவரிசை ஆறு இடங்கள் குறைந்து 86வது இடத்திற்கு வந்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் மொத்தம் 180 நாடுகளில் இந்தியா 80வது இடத்தில் தரவரிசை படுத்தப் பட்டு உள்ளது.
- இந்தப் பட்டியலில் சீனா 78வது இடத்திலும், பாகிஸ்தான் 124வது இடத்திலும் உள்ளது.
- நியூசிலாந்து மற்றும் டென்மார்க் நாடுகள் முதல் இடங்களில் உள்ளன.
- சோமாலியா மற்றும் தென் சூடான் ஆகியவை கடைசி இடங்களில் உள்ளன.




## ஆசிய-பசிபிக் தனிப்பயனாக்கப்பட்ட சுகாதாரக் குறியீடு

- இதைப் பொருளாதாரப் புலனாய்வுப் பிரிவு என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.
- ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் 11 சுகாதார அமைப்புகளின் தனிப்பயனாக்கப்பட்ட சுகாதாரச் சேவையை ஏற்றுக் கொள்வதற்கான தயார்நிலையை இந்தக் குறியீடு அளவிடும்.
- மதிப்பீடு செய்யப்பட்ட சுகாதார அமைப்புகளில் இந்தியா, சீனா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, மலேசியா, தைவான், ஜப்பான், தாய்லாந்து, இந்தோனேசியா, தென் கொரியா மற்றும் நியூசிலாந்து ஆகியவை அடங்கும்.
- இந்தப் பட்டியலில் சிங்கப்பூர் சிறந்து விளங்குகிறது.
- தைவான் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் முறையே இந்தக் குறியீட்டின் மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களில் உள்ளன.
- இந்தியா 10வது இடத்தில் உள்ளது.
- இந்தோனேசியாவானது இறுதியாக 11வது இடத்தில் உள்ளது.

## EIU ஜனநாயகக் குறியீடு 2020

| Rank | Country | Score |
|---|---|---|
| 1 | Norway | 9.81 |
| 2 | Iceland | 9.37 |
| 3 | Sweden | 9.26 |
| **53** | **India** | **6.61** |

- வருடாந்திர ஜனநாயகக் குறியீட்டில் இந்தியா இரண்டு இடங்கள் சரிந்து 53வது இடத்திற்குத் தள்ளப்பட்டது.
- இதைப் பொருளாதார நிபுணர்கள் அடங்கிய புலனாய்வுப் பிரிவு (EIU - Economist Intelligence Unit) வெளியிட்டுள்ளது.
- இது 167 நாடுகளை ஆய்வு செய்தது.
- இது 23 நாடுகளை முழு ஜனநாயக நாடுகளாகவும், 52 நாடுகளை ஜனநாயகம் குன்றி வரும் நாடுகளாகவும், 35 நாடுகளை கலப்பு ஜனநாயக நாடுகளாகவும், 57 நாடுகளை சர்வாதிகார நாடுகளாகவும் வகைப்படுத்தியுள்ளது .
- 2014 ஆம் ஆண்டின் தரவரிசையில் 27வது இடத்தில் இருந்து இந்தியா தற்போது தரவரிசையில் சரிந்து வந்துள்ளது.
- அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம், பிரேசில் போன்ற நாடுகளுடன் இந்தியாவும் ஜனநாயகம் குன்றி வரும் நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## சாலை விபத்துகள் குறித்து உலக வங்கியின் அறிக்கை

- உலக வங்கியானது சமீபத்தில் தனது ஒரு அறிக்கையை "போக்குவரத்து விபத்து காயங்கள் மற்றும் குறைபாடுகள்: இந்தியச் சமூகத்தின் மீது சுமை" என்ற தலைப்பில் வெளியிட்டது.
- இந்த அறிக்கையின்படி, உலகின் வாகனங்களில் 1 சதவீதம் மட்டுமே இந்தியாவில் உள்ளது.

Table 2.3: Number of accidents, Number of persons killed and those injured by the category of Roads in 2019

| Category of Roads | Length as on 31.3.18 (P) | | Accidents | | Persons killed | | Persons injured | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Kms | % age share in total | Number | % age share in total | Number | % age share in total | Number | % age share in total |
| National Highways | 1,26,350 | 2.03 | 1,37,191 | 30.55 | 53,872 | 35.65 | 1,37,549 | 30.47 |
| State Highways | 1,86,908 | 3.01 | 1,08,976 | 24.27 | 38,472 | 25.46 | 1,11,831 | 24.78 |
| Other roads | 59,00,858 | 94.96 | 2,02,835 | 45.17 | 58,769 | 38.89 | 2,01,981 | 44.75 |
| **Total** | **62,15,797** | **100** | **4,49,002** | **100** | **1,51,113** | **100** | **4,51,361** | **100** |

- ஆனால் சாலை விபத்துகளால் உலகளாவிய இறப்பில் இந்தியா 11 சதவீதத்தை கொண்டுள்ளது.
- சாலை விபத்து காரணமாக இது உலகிலேயே அதிக இறப்பு எண்ணிக்கைகளைக் கொண்டுள்ளது.
- கிராமப்புற ஏழை மக்களின் சாலை விபத்து இறப்புகள் 44 சதவீதமாகும்.
- நகர்ப்புற ஏழை மக்களின் சாலை விபத்து இறப்புகள் 11.6 சதவீதமாகும்.

## இமயமலை இளஞ்சிவப்பு உப்புக்கான புவிசார் குறியீடு




- இமயமலை இளஞ்சிவப்பு உப்பைப் புவிசார் குறியீடாக பதிவு செய்ய பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது.
- புவிசார் குறியீடு என்பது சிறப்புத் தயாரிப்புகளுக்கு கொடுக்கப்படும் அடையாளம் ஆகும்.
- இது ஒரு குறிப்பிட்ட புவியியல் பின்புலத்தைக் கொண்டுள்ளது மற்றும் அந்தப் பிராந்தியத்தின் தோற்றம் சார்ந்த குணங்கள் மற்றும் நன்மதிப்பைக் கொண்டுள்ளது.
- இந்த விலை மதிப்புடைய உப்பு பஞ்சாபில் உள்ள உப்புத் மலைத் தொடரிலிருந்து எடுக்கப் படுகிறது.
- இந்த மலைத் தொடர் போடோஹார் பீடபூமியின் தெற்கிலும் ஜீலம் ஆற்றின் வடக்கிலும் நீண்டுள்ளது.
- முன்னதாக பாஸ்மதி அரிசியை இந்தியாவின் உற்பத்தியாக பதிவு செய்வதற்கான இந்தியாவின் நடவடிக்கைக்கு எதிராக, பாகிஸ்தான் நாடானது ஐரோப்பிய ஒன்றியத்தில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★